விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 12 ஞாயிற்றுக்கிழமை (27.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

# வடக்கில் முதலாவது கொரோனா உயிரிழப்பு

## வவுனியாவைச் சேர்ந்த 60 வயது வயோதிபப் பெண் மரணம்

*(வவுனியா)*

வட மாகாணத்தில் முதலாவது கொரோனா பலியெடுப்பு நேற்று இடம்பெற்றுள்ளது. வவுனியாவைச் சேர்ந்த 60 வயது வயோதிபப் பெண்ணே கொரோனா வைரஸ் தொற்றினால் மரணமடைந்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## +3,615 கைதிகளுக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் இதுவரை ஐந்து சிறை கைதிகள் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்றிற்குள்ளான 15

## மலசலகூடத்திலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மலசலகூடத்தி 15

## கிளிநொச்சியில் இளைஞன் வெட்டி படுகொலை

*(கிளிநொச்சி)*

*கிளிநொச்சியில் இளைஞன் ஒருவர் கொடூர மாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.*

*இதில் பல்லவராயன்கட்டு சோலை மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த செ.பிரதீபன் (வயது-32) என்ற இளைஞனே படுகொலை செய்யப்பட்ட வராவார்.*

இளைஞனின் உடலில் அடி, வெட்டுக்காயங்கள் காணப்படு கின்றன. கழுத்தின் பின் பகுதி யில் உயிரிழப்பை ஏற்படுத்திய பாரிய வெட்டுக்காயம் உள்ளது. கை, கால்களிலும் வெட்டுக் காயங் கள் காணப்பட்டன.

காதல் விவகாரத்தி 15

## கொரோனா பேராபத்திலிருந்து தப்பிக்க மூன்று வாரமாவது நாட்டை முடக்குங்கள்

### சஜித் அணி அவசர கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸின் பேரா பத்திலிருந்து மீண்டெழுவதற் காக நாடு முழுவதும் குறைந்தது மூன்று வாரங்களுக்காவது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ஹர்சன ராஜகருணா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊட கங்களிடம் அவர் மேலும் தெரிவித்தா 15

## யாழை சேர்ந்த இளம் பெண் கொழும்பில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் 15

## மகசின் சிறைச்சாலையில் 48 தமிழ் அரசியல் கைதிகளுக்கு தொற்று

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 14 பேரின் விபரம் வெளியீடு

13ஆம் பக்கம் பார்க்க

## நெக்குருகும் ஆழிப் பேரலை நினைவுகள்



12ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பு சந்தையில் மரக்கறி விநியோகிக்கும் வியாபாரிக்கு கொரோனா

### எழுமாற்று சோதனையில் உறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு சந்தைக்கு மரக்கறி விநி யோகிக்கும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறு 15

## சண்டிலிப்பாயைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனா

### மருதனார்மடம் கொத்தணி 109 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மருதனார் மடம் கொரோனா கொத்தணியில் மேலும் நால்வருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட் டுள்ளதாக வட மாகாண 15

## கொரோனா தொடர்பான தீர்மானம்

## நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு அமைய எடுக்கப்படும்

### அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

நிபுணர்களின் ஆலோசனை களுக்கு அமையவே கொரோனா தொடர்பான தீர்மானங்கள் எடுக் கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் 15

## கொரோனாவால் நாட்டில் மேலும் இருவர் பலி

+598 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் 15

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு
070 640 5951
e-mail : engchelvam@gmail.com

(5073)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, உத்திரட்டாதி, கி.பா 17 1/4, மீன ராசியில் பிறந்த சொந்தத் தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

நேரடித் தொடர்பு (5977)
076 449 6275

## மணமகள்மார் தேவை

88, ரேவதி, 7இல் செவ்வாய், 58 பாவம், B.Sc பொறியியலாளர் படித்த மண மகனுக்கும் 80, சுவாதி, 7இல் செவ்வாய், 68 பாவம், லண்டன் சிற்றிசன் மண மகனுக்கும் மணமகள்மார் தேவை.

077 818 5978, 075 011 1122
துர்க்கா திருமண சேவை (5078)

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு Kod மெசினின் மைண்டர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(5079)
077 508 6712




## கூறுவிலைகள் கோருதல்

பின்வரும் ஆலய திருப்பணி வேலைகளுக்கான கூறுவிலைகள் அறங்காவலர் சபையினால் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு நேரடியாக வருகைதந்து கூறுவிலைப் படிவக் கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக ரூபா 2000இனை (மீளளிக்க முடியாதது) செலுத்தி கூறுவிலைப் படிவத்தைப் பூரணப்படுத்தி 10.01.2021 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலம் "செயலாளர்", அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவர்கள் அதற்கென ஆலய காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இட முடியும்.

### வேலைகள் விபரம்

1. தீர்த்தக்கரை வில் மண்டபம் 02 அமைத்தல்.
2. ஆலயத்தின் முகப்பு வளைவு அமைத்தல்.
3. அம்பாள் அறிவாலயம் மற்றும் அரும்பொருட் காட்சியகம் என்பவற்றுக்கான புனரமைப்பு வேலைகள்.

குறிப்பு:-

1. பதிவு பெற்ற ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
2. ஆலய கட்டுமான வேலைகளில் முன்அனுபவம் இருத்தல் வேண்டும். இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C-1031

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்வி ஹம்சுஜா கணேசலிங்கம்

அன்னை மடியில் 08.05.1992
இறைவன் அடியில் 26.12.2016

ஈரிரண்டு ஆண்டுகள் தான்
உருண்டோடிச் சென்றனவே
உனைக்கவர்ந்த கூற்றுவனும்
எமைப்பாரில் தவிக்க விட்டு
ஈரவிழி உனைக்காணத்
தவிக்கிறதே எம் மகளே
ஏக்கமதைத் தீர்த்து விட - உன்
எழில் முகத்தைக் காட்டாயோ...!

(C-1029)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்

## எம்மைத் தூண்டி விட வேண்டாம்
### புலியை தூண்டியது போல ஆகிவிடும் - ஆனந்த தேரர்

கொரோனா வைரஸ் காரணமாக இறக்கும் நபர்களின் சடலங்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்று ஏற்பட்டுள்ள வாத விவாதங்கள் அவசியமற்றது என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஒரு நாட்டுக்கு ஒரே சட்டம், ஒரே வேலைத்திட்டம் இருக்க வேண்டும். இதனால், ஒவ்வொரு அரசாங்கங்களும் நடைமுறைப்படுத்தும் சட்டங்களை ஒவ்வொரு தரப்பினருக்கும் தேவையான வகையில் மாற்றக் கூடாது.

அடக்கம் செய்வதற்கு எதிராக பிக் குமார் அமைதியான முறையில் குரல் கொடுப்போம். இந்த அமைதியை சீர்குலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம் என அனைத்து தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (ம-3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 28.11.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் இராமு பொன்னம்பலம்

பிறப்பு 1945.08.12
இறப்பு 2020.11.28

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.12.2020) திங்கட்கிழமை காலை 4.00 மணியளவில் வீட்டில் நடைபெற்று பின்பு அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபீண்டிகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மேலும் அன்னாரின் மறைவையொட்டி அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், தொலைபேசி, சமூக வலைத்தளங்களில் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் கல்வெட்டுப் புத்தகம் ஒருங்கிணைக்க உதவியவருக்கும், நாளைய நிகழ்வில் கலந்து கொள்வோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5076)

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்.


## மணமகன் தேவை

யாழ். இந்து,1986, பூரம், 5' 4", தொழில் -கணக்காளர், கொழும்பு. கல்வித் தகைமைகள் MBA, B.Sc, FINANCE, ACCA (யாவையும் UK தகைமைகள்.) தகுதியான மணமகனை எதிர்பார்க்கின்றோம். ஜாதகக் குறிப்புடன் தொடர்புகளுக்கு.

(C-1153)
078 941 7651
mproposal767@gmail.com


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்

## தெய்வீகக் கலையரங்கு

எமது கலாமன்றத்தால் திருவெம்பாவைக் காலத்தில் நடாத்தப்பட்டுவரும் தெய்வீகக் கலையரங்கு அர்ப்பண நிகழ்வு 26.12.2020 ஆம் திகதி (நேற்று) தற்போதைய நிலையினைக் கருத்தில் கொண்டு பூசை வழிபாட்டுடன் மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றது என்பதை, கலாமன்ற வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அனுசரனையாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், கலாரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

( இதில் திருவாசகக் குயில் லீலாவதி இராசரத்தினம் அவர்களின் திருவாசகத் தேனிசையும் இடம்பெற்றது. )

(0000)

கிழவன்காடு கலாமன்றத்தினர்

# எம்.சி.சி. உடன்படிக்கை இரத்து; கடும் விளைவுகளை ஏற்படுத்தும்

(கொழும்பு)

480 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மிலேனியம் சலேஞ் கோப்பரேசன் நிதியுதவி இரத்து செய்யப் பட்டமை காரணமாக இலங்கைக்கு பொருளாதார பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளின் நேரடி முதலீடுகளில் இது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

எம்.சி.சி.நிதியுதவிக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்கத் தவறியதால், முதலீட்டாளர்கள் பணச் சந்தைகளில் முதலீடு செய்வதிலிருந்து பின்வாங்கக்கூடும்.

முன்னணி பொருளா தார நிபுணர் டபிள்யூ.ஏ. விஜேவர்த்தனவின் கருத்துப்படி இந்த விடயம் முதலீட்டாளர்களுக்கு இடையில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மையை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்பே திறைசேரியின் பத்திரங்களுக்கு ஊடான வெளிநாட்டு முதலீடுகள் 14 பில்லியனில் இருந்து 7 பில்லியன்களாக குறைந்து விட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே எம்.சி.சி முன்மொழிவை முற்றிலுமாக நிராகரிப்பதற்குப் பதிலாக இலங்கை நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

நிலத்தின் பெயர்களை டிஜிற்றல் மயமாக்குவது ஒரு திட்டமாகும் இது இலங்கைக்கு நன்மையைத்தரும் நீண்ட கால நடவடிக்கையாகும்.

2006 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் எம்.சி.சி உதவியை பெற்றுக்கொள்ள முயன்றனர்.

எனினும் மனித உரிமை மீறல் காரணமாக அமெரிக்க அதிகாரிகளால் அதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்பதை முன்னணி பொருளாதார நிபுணர் டபிள்யூ.ஏ. விஜேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# 5 கைதிகள் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் ஐந்து சிறைக்கைதிகள் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகிய 639 கைதிகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேலும் ஒன்பது சிறைச்சாலை அதிகாரி கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

# பி.சி.ஆர். அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்று நோயாளிகளை அடையாளம் காண நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, 13 ஆயிரத்து 516 பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இதுவரை நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த பி.சி.ஆர். பரிசோதனைகள் எண்ணிக்கை 11 இலட்சத்து 81 ஆயிரத்து 68 ஆக உயர்ந்துள்ளது. (ஜ-4)

# தனிமைப்படுத்தலை மீறிய 1700 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கு புறம்பாக செயற்பட்ட 1,700 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 1,829 பேர் வரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 1,700 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக சுகாதாரப் பிரிவினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களது ஆலோசனைக்கமைய அனைவரும் செயற்பட வேண்டும் தற்போது மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவதற்காக பயன்படுத்தப்படும் பகுதிகளில் அன்டிஜன் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# விவசாயச் செய்கை பாதிப்பு; நடவடிக்கை எடுக்க வலியுறுத்து



(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் திருமுறிகண்டியில் பிற இடங்களில் இருந்து பெருமளவிலான கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபடுத்தப்படுவதன் காரணமாக திருமுறிகண்டி கிராமத்தின் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக திருமுறிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

476 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் சுமார் 200 ஏக்கரில் நெற்செய்கை மற்றும் மேட்டுப் பயிர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் இருந்து பெருமளவிலான கால்நடைகள் திருமுறிகண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேய்ச்சலில் ஈடுபடுத்தப்படுவதன் காரணமாக விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பட்டிகளில் அடைக்கப்படுகின்ற கால்நடைகளும் இரவு வேளைகளில் பட்டிகளில் இருந்து வெளியேறி பயிர்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என திருமுறிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் மேலும் வலியுறுத்தி உள்ளது. (ஜ-4-350)

## மரண அறிவித்தல்

பிறப்பு
04 . 08 . 1959



இறப்பு
25 . 12 . 2020

### திருமதி.வசந்தா தவரத்தினம்


சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், அளவெட்டி, கொழும்பு , பிறம்டன் (Brampton) கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.வசந்தா தவரத்தினம் அவர்கள் 25.12.2020 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சபாரத்தினம் - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், தவரத்தினத்தின் ஆருயிர் மனைவியும், தர்மினி (Canada), தனேஸ் (Canada), தர்மிகா (Australia)வின் பாசமிகு தாயாரும், மதன் (Canada), பிரசாந்தி (Canada), சுஜீவன் (Australia)வின் அன்பு மாமியாரும், அபிமன்யு, பார்த்தவி, அபிரா, அதிராவின் பாசமிகு பேத்தியாரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன், இரவிச்சந்திரன் (Jaffna), ஜெயந்தி (Colombo)யின் அன்புச் சகோதரியும், உத்தமலட்சுமி (Jaffna), மகேஸ்வரன் (Colombo), லோகநாதன் (Australia), இராசகுமார் (Canada), சத்தியபாமா (Canada), கோசலா (Uk)வின் அன்பு மைத்துனியும், ஆரணி, சியாணியின் அன்புப் பெரியம்மாவும், ரஜிந்தாவின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல்: குடும்பத்தினர்

| | | |
|---|---|---|
| தொடர்புகளுக்கு | : தவரத்தினம் (கணவர்) | - 4165598211 (Canada) |
| | : தர்மினி (மகள்) | - 6479212727 (Canada) |
| | : தனேஸ் (மகன்) | - 4162784475 (Canada) |
| | : தர்மிகா (மகள்) | - +61405459589 (Australia) |
| | : ரவிச்சந்திரன் (சகோதரன்) | - 0212240894 (Jaffna) |
| (C-1154) | : ஜெயந்தி (சகோதரி) | - 0777535014 (Colombo) |

# வலம்புரி 21 ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்துச் செய்திகள்



## உண்மையை உண்மையாக எழுதுங்கள் என்ற சிவயோக சுவாமிகளின் அருள் வாசகத்தின் வழிகாட்டலில் வலம்புரி

உண்மையை உண்மையாக எழுதுங்கள் என்பது சிவயோக சுவாமிகளின் மகா வாசகம். சுவாமிகளின் மகா வாக்கியத்தின் மகத்துவத்தின் உட்பொருளை சாதனையை செயல் வடிவில் கடந்து 21 ஆண்டுகளாக சாதனையாக்கி நடுவுநிலை தவறாத நன்னெறி காக்கும் நாளிதழ் என்ற வரலாற்று சாதனையை தனதாக்கிக் கொண்டது வலம்புரி.

வரலாற்று தொடராக தொடர வேண்டும். குருநாதன் சொன்ன சீலத்தை தெளிந்தறிந்த தீர்க்கதரிசனமான ஆசிரியர் தலையங்கம் அகில உலகையும் வியக்க வைக்கின்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னவாறு "என் ஊடு அகத்தே நின்று உருகத் தந்தருள் எம் உடையானே" திருவாசகத்தின் ஊடு அகத்தே என்ற வாசகத்தின் வெளிப்பாடுதானே வலம்புரியின் அனைத்து உள்ளடக்கமாகும். காலமெல்லாம் வலம்புரி நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழாக வெளிவர வேண்டும் என்று எம்பிராட்டியாம் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் திருவடிகளை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**நயினை கலாபூஷணம்**
**நாகமணி.கோபாலகிருஷ்ணன் ஜே.பி.**
**தலைவர் சப்த தீவக திவ்ய ஜிவன சங்க சமாசம்.**




## அறிவொளி பரப்பும் சூரியன் சாதனை படைத்த வலம்புரிப் பத்திரிகை

கடந்த 21 ஆண்டுகாலமாக சீரிய நெறியில் தமிழ் மக்களின் மனதில் இடம்பிடித்த பத்திரிகை வலம்புரி என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நடுவுநிலைமை தவறாமல் பத்திரிகை தர்மத்தை பேணிக்காத்து வருகின்றது. குறிப்பாக இதன் செய்திகள் வெட்டொன்று துண்டு இரண்டாக தெளிவாக உள்ளன. கதைகள், கட்டுரைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் சங்குநாதத்தில் வரும் ஆலடி மாநாடு மிகவும் சிறப்பானது. சுமார் நான் 10 வருடமாக வாசித்து வருகின்றேன். எனவே வலம்புரிக்கு நிகர் வலம்புரியே என வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**இ.குமாரகுலசூரியன்**
**சமாதான நீதவான், சமூக கலாவித்தகர்,**
**செயலாளர், வெளிச்சம் சனசமூக நிலையம், ஓமந்தை.**



## வலம்புரி நாளிதழே வாழ்க பல்லாண்டு பல்லாண்டு வளமுடன்

அகவை 22 இல் தடம்பதிக்கும் வலம்புரியே நடுநிலை தவறாமையும் துணிச்சலான ஆசிரியர் தலையங்கமும் ஆலடி மாநாடும் கல்வி, கலை, கலாசாரங்களை வெளிக்கொணர்ந்த சீர்படுத்த கடமையாற்றும் வலம்புரியே வாழிய வாழியவே.

**கலாபூஷணம் க.தர்மகுலசிங்கம்**




## வலம்புரி வரும் நாளெல்லாம் வசந்தமே

பல்சுவை அம்சங்களோடு வலம்புரி நாளிதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. செய்திகளை இலகுவாக வாசித்து நாட்டின் நடப்பினை அறிய முடிகின்றது. தமிழ் வியங்களை அதிகம் தாங்கித் தமிழறிவைச் சொரிகின்றது.

பத்திரிகையில் வருகின்ற செய்திகளை முதியவரும் படிக்கக் கூடியவாறு எழுத்தளவுகள் பெரிதாக இருக்கும். ஆசிரியர் தலையங்கம் காலத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்ற வகையில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அமைந்துள்ளது. வலம்புரி நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை மக்கள் மனதில் நீங்கா இடத்தை பிடித்திருக்கிறது.

**லயன் சி.ஜெயசங்கர் (J.P.)**
**அகில இலங்கை சமாதான நீதவான்.**

# 2022 ஐ.பி.எல்.தொடரில் இரு அணிகளை இணைக்க ஒப்புதல்



2022 சீசனில் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மேலும் இரண்டு அணிகளை சேர்க்க இந்திய கிரிக்கெட் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் அகமதாபாத்தில் நடைபெற்றது.

அண்மையில் ஐ.பி.எல்.இருபது-20 கிரிக்கெட்டில் தற்போது 8 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. 8 அணிகளை 10 அணிகளாக உயர்த்த பி.சி.சி.ஐ.முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில் ஐ.பி.எல்.l கிரிக்கெட்டில் மேலும் இரண்டு அணிகளை சேர்க்க பி.சி.சி.ஐ. ஆண்டு பொதுக்கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

10 அணிகள் 2022 சீசனில் இருந்து நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# ஆப்கானில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்



ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி மொஹமட் அஷ்ரப் கானி, காபூலின் அலோகைல் பகுதியில் அதிநவீன வசதிகளுடன் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்த ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகத் தலைவர் ஃபர்ஹான் யூசெப்சாய்,

இதுவரை நாங்கள் பெரும்பாலான போட்டிகளை இந்தியாவில் விளையாடியுள்ள நிலையில், காபூலில் ஒரு புதிய கிரிக்கெட் மைதான நிர்மாணத்தின் பின்னர், சர்வதேச போட்டிகளை தமது நாட்டிற்கு கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

அது மாத்திரமன்றி தலைநகர் காபூலின் மையத்தில் உள்ள சர்வதேச வீரர்கள் தங்கள் மைதானத்தில் விளையாடுவதை எங்கள் மக்கள் காண்பார்கள்.

இதேவேளை காபூலில் ஒரு அதிநவீன சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை நிர்மாணிக்கும் திட்டத்திற்கும் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு எப்போதும் தனது ஆதரவினை வழங்கும் ஜனாதிபதி அஷ்ரப் கானிக்கு தனது நன்றிகளையும் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

சுமார் 35,000 பார்வையாளர்களை அமரும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த அரங்கம் ஐந்து நட்சத்திர விருந்தினர் மாளிகை, ஒரு நிலையான நீச்சல் குளம், உட்புற மற்றும் வெளிப்புற அரங்குகள், சுகாதார மருத்துவ வசதிகள், மசூதி மற்றும் வாகன தரிப்பிடம் உள்ளிட்ட பல வசதிகளை உள்ளடக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# தமது தவறுகளை மறைப்பதற்காக சடலங்களை பயன்படுத்தும் சஜித் தரப்பு

## தேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்த்தரப்பினர் பௌத்த, இந்து மற்றும் கத்தோலிக்க சமூகத்தினரின் உரிமைகளுக்காக ஒருபோதும் குரல்கொடுத்ததில்லை. குரல்கொடுக்கப் போவதுமில்லை. மாறாக அவர்களது ஆட்சிக்கால த்தில் இடம்பெற்ற தவறுகளை மறைத்துக்கொள்வதற்காக தற்போது உயிரற்ற சடலங்களைப் பயன்படுத்திக் கொள்ள முற்படுகின்றார்கள் என சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் சாடியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்த்தரப்பினர் பௌத்த, இந்து மற்றும் கத்தோலிக்க சமூகத்தினரின் உரிமைகளை உறுதி செய்வதற்காக முன்னின்று செயற்பட்டதோ அல்லது ஆர்ப்பாட்டம் செய்ததோ இல்லை. தெவனகல ரஜமகா விகாரை அமைந்துள்ள பகுதியில் பாரிய காணி அபகரிப்பொன்று இடம்பெறுகின்றது.

அதேபோன்று பொத்துவில் முதுமகா விகாரை, கிரிந்த விகாரை, தீகவாபி போன்ற பகுதிகளுக்கு அவர்கள் சென்று பார்க்க வேண்டும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு மற்றும் புராதன தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்படல் தொடர்பில் அவர்கள் தேடிப்பார்க்க வேண்டும்.

ஆனால் ஒருபோதும் அவர்கள் அதனைச் செய்யமாட்டார்கள். அவர்களுடன் இருக்கின்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் மனங்கள் நோகடிக்கப்பட்டுவிடும் என்பதால் அவர்கள் அங்கு சென்று பார்க்க மாட்டார்கள்.

அவர்கள் இப்போது என்ன பேசினாலும் நல்லாட்சி அரசாங்கத்திலேயே நாட்டின் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. அவர்களுடைய ஆட்சியின் போது ஷானி அபேசேகர, நிஷாந்த கந்தப்பா (நிஷாந்த த சில்வா) போன்றோர் பொய்யான சாட்சியங்களைச் சோடித்து, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்திய போது அது குறித்து சஜித் பிரேமதாஸ தரப்பினர் ஏன் பேசவில்லை? என அவர் மேலும் கேள்வி எழுப்பினார். (ஐ-4)

# பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு - கட்டானை பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட முரண்பாட்டு நிலைமையை சமாதானம் செய்ய முற்பட்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹரிச்சந்திரபுர பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹரிச்சந்திரபுர பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஏற்பட்ட முரண்பாட்டை சமாதானம் செய்வதற்காக சென்ற பெண் திடீரென்று கீழே விழுந்துள்ளார்.

இதன்போது காயமடைந்த குறித்த பெண் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதன்போது ஹரிச்சந்திரபுர பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# ஒருவர் கைது

(கொழும்பு)

போலியான அமெரிக்கா டொலர்களை அச்சிட்ட சந்தேக நபர் ஒருவர், அநுராதபுரத்தில் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

போலியான அமெரிக்க டொலர்களை அச்சிட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள கண்டலே அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக மேற்குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# துயர் பகிர்கின்றோம்

## அமரர்.திரு.செல்லர் செல்வநாயகம்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி.**ஜெயந்தா யசோதரன்** அவர்களின் தந்தையார் திரு.**செல்லர் செல்வநாயகம்** அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/மகாஜன கல்லூரி,தெல்லிப்பழை.

(C-1021)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்.செல்வத்துரை கணேசரட்ணம்



எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர் **திரு.அ.சியாமளரூபன்** அவர்களின் மாமனார் **செல்வத்துரை கணேசரட்ணம்** அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தின் துயரத்தில் பங்கு கொள்வதோடு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(5068)

# ஜனாஸா விவகாரம் தொடர்பிலான வாத விவாதங்கள் அவசியமற்றது

(கொழும்பு)


**கொரோனா வைரஸ் காரணமாக இறக்கும் நபர்களின் சடலங்களைத் தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்று ஏற்பட்டுள்ள வாத விவாதங்கள் அவசியமற்றது என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு நாட்டுக்கு ஒரே சட்டம், ஒரே வேலைத்திட்டம் இருக்க வேண்டும். இதனால், ஒவ்வொரு அரசாங்கங்களும் நடைமுறைப்படுத்தும் சட்டங்களை ஒவ்வொரு தரப்பினருக்கு தேவையான வகையில் மாற்றக்கூடாது.

அடக்கம் செய்வதற்கு எதி ராக பிக்குமார் அமைதியான முறையில் குரல் கொடுப்போம்.



இந்த அமைதியை சீர்குலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம் என அனைத்து தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அமைதியாக செயற்படும் என்னைத் தூண்டி விட வேண்டாம் என வலியுறுத்துகிறேன்.

தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி தூண்டி விட்டால் காட்டில் இருக்கும் புலியைத் தூண்டி விட்டது போல பல சம்பவங்கள் நேரிடக்கூடும்.

சடலங்களை அடக்கம் செய்ய எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 12 . 1972



மறைவு
25 . 12 . 2020

## திருமதி.அஞ்ஜலா ஜெயகரன்

(எழுதுவினைஞர்)

சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. அஞ்ஜலா ஜெயகரன் 25.12.2020 வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(5074)

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

077 741 2348

தகவல்:
குடும்பத்தினர்.

# வெள்ள நீர் வழிந்தோட வழி செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாண்டியந் தாழ்வு நாகராஜா வீதியானது மழைகாலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதுடன் வீடுகளுக்குள் புகும் அபாயம் காணப்படுவதாகவும் இதன் மூலம் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்வெள்ள நீர் வழிந்தோட வாய்க்கால் அமைத்துத் தருமாறும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-4)

# ஜனாஸா எரிப்பதற்கு எதிராக வவுனியாவில் போராட்டம்



(நெளுக்குளம்)

முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிராக, வெள்ளைத் துணிகட்டும் கவனயீர்ப்பு போராட்டமொன்று வவுனியா மன்னார் பிரதான வீதி பட்டாணிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அனைத்து பள்ளிவாசல்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் சுனாமி பேரவையில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியதன் பின்னர் கொரோனா சுகாதார நடைமுறைகளை பேணி முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அடக்கம் என்பதே உலக நியதி எரிப்போம் என்பதே உன் வியாதி, எரிக்காதே எரிக்காதே ஜனாஸாக்களை எரிக்காதே, மண்ணைவிட மருத்துவம் எதுவுண்டு, அடக்கம் செய்ய அனுமதிதா போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பல்வேறு சுலோகங்களை தாங்கி இருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமத் மௌலவி, வவுனியா நகரசபை உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (நி-4-299)

# பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வெளி மாவட்டத்திலிருந்து யாழ்.நகருக்குள் நுழைவோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பரிசோதனைகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் நேற்றைய தினம் எழுமாற்றாக முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-18)

# கடல் தொழிலாளர் பிரச்சினை தொடர்பில் கடல் தொழில் அமைச்சர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, வடமராட்சி பகுதிகள் அண்மையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், குறித்த பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதியின் நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டதுடன் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.



மேலும் பருத்தித்துறை முனைப் பிரதேசத்தில் வெளிச்ச வீட்டை அண்மித்த பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் வாடி அமைத்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவதாக தெரிவித்தார்.

இந்திய கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படும் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகளினால் பிரதேச கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

குறிப்பாக, எல்லை தாண்டிய இந்தியக் கடற்றொழிலாளர்களின் கடற் கலங்களினால் இடித்து மூழ்கடிக்கப்பட்ட படகிற்கான இழப்பீடு உட்பட்ட இழப்பீடுகளுக்கு காப்புறுதி வழங்கப்படுவதில் காணப்படும் இழுபறிகள் போன்ற பல்வேறு விடயங்கள் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மனித செயற்பாடுகளே இயற்கை அனர்த்தத்திற்கு அதிகம் வழிவகுக்கின்றது

## கிளி.அரச அதிபர் தெரிவிப்பு



(முறிகண்டி)

அனர்த்தங்கள் இயற்கையாக அமைவது என்பதுடன் மனித செயற்பாடுகளாலும் அமையப்பெறுகின்றது. இவை தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொண்டு விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் நடந்தேறிய சுனாமி எனும் அனர்த்தத்தின் பிற்பாடு நாட்டில் அனர்த்த முகாமைத்துவத்திற்கான பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு தேசிய ரீதியில் அந்த அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஊடாக விழிப்புணர்வுகள் மற்றும் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அனர்த்தங்கள் வராமல் காக்கவேண்டியதும் எமது பொறுப்பாக இருக்கின்றது.

பல அனர்த்தங்கள் இயற்கையாக அமைகின்ற அனர்த்தங்களாகவும் இருக்கின்றன. அதேவேளை மனிதர்களால் ஏற்படுகின்ற அனர்த்தங்களும் நிகழ்ந்தேறி வருகின்றது.

பல இயற்கையான அனர்த்தங்களிற்கு மனிதர்களினுடைய செயற்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் வழியமைப்பதாக அமைந்திருக்கின்றது.

மணலகழ்வு, காடழிப்பு ஆகியன உண்மையில் அனர்த்தத்திற்கு வழியமைக்கின்றனவாக அமைந்திருக்கின்றது.

இதன் ஊடாக நாங்கள் இயற்கை சூழலை அனர்த்தத்திற்குள்ளாக்குபவர்களாக இருக்கின்றோம். எனவே இவ்விதமான விடயங்களில் நாங்கள் எங்களாலான முயற்சிகளை முன்னெடுத்து அனர்த்த தணிப்பிற்கும் அனர்த்தம் ஏற்படாத வகையிலும் தடுக்க வேண்டிய தேவை அவசியமாக இருக்கின்றது.

எனவே வருகின்ற வருடங்களிலும் எமது பிரதேசம் பாதுகாப்பானதாக அமையவும் அனர்த்தமற்ற பிரதேசமாக எமது மாவட்டம் விளங்க வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம் என அவர் மேலும் தெரிவித்தார்.(நி-4-100)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சிமாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் 103 கிராம் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (நி-4-316)



வடமராட்சி கலட்டி ஐக்கிய சன சமூக நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானப்பணியில் கிராமத்து நலன்விரும்பிகள் கிராமத்து பொது வீதிகளை ஆர்வத்துடன் துப்புரவு செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# சுகாதார வழிகாட்டுதல்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்; இல்லையேல் கைது

## பொலிஸார் வலியுறுத்து

(கொழும்பு)

புதிதாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்குமாறு பொலிஸார் நேற்று வலியுறுத்தியுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் சிலர் சுகாதார வழிகாட்டுதல்களைப் புறக்கணிக்கிறார்கள் என்பது தெரியவந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண, பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்ள சிலர் சுகாதார அதிகாரிகளுக்கு உதவவில்லை என சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வாறு சுகாதார அதிகாரிகளின் உத்தரவுகளை நிராகரித்தால், அவர்கள் தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைய கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன் தனிமைப்படுத்தல் விதிகள் மற்றும் விதிமுறைகளை மீறியதற்காக அட்டலுகமவில் உள்ள பலர் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-4)

# யாழ்.மாநகர மேயர் தெரிவில் யாருக்கு ஆதரவு வழங்குவது?

## தீர்மானிக்கவில்லை என்கிறார் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் மற்றும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவுகளில் யாருக்கு ஆதரவு வழங்குவது என இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் இது தொடர்பில் அனைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.மாநகர சபை முதல்வர் மற்றும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவு இடம்பெறவுள்ள நிலையில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் நிலைப்பாடு குறித்து ஊடகவியலாளர்களால் நேற்று கேள்வி எழுப்பப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் எழுத்து மூலமான எந்தக் கோரிக்கையும் இதுவரை முன்வைக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4-33)

# கல்முனையில் கொரோனா அச்சுறுத்தல் சுகாதாரப் பணிமனைக்கு பூட்டு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அம்பாறை - கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை மூடப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் குறிப்பிட்டார்.

குறித்த பணிமனையில் கடமையாற்றும் சாரதி, இரண்டு மருத்துவர்கள் உள்ளடங்கலாக மூவருக்கு நேற்று சனிக்கிழமை காலை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவேதான் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# மூவருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மூவர் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நாளை மறுதினம் வரையில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அலுவலகத்தில், கடமையாற்றும், சாரதி உள்ளிட்ட மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# மத்திய மாகாணத்திற்குள் நுழைவதைத் தவிருங்கள்

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக மத்திய மாகாணத்திற்குள் பிரவேசிப்பதை தவிர்த்து செயற்படுமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பொது மக்களை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை சிவனொளிபாதமலை பருவகால யாத்திரையில் பங்கேற்பதை தவிர்த்து செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய மாகாண கொரோனாத் தடுப்பு செயலணியினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நிஹால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் இயலுமானவரை மத்திய மாகாணத்திற்குள் பிரவேசிப்பதை த்விர்த்து செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

# ஆறு பேர் கைது

(கொழும்பு)

பொகவந்தலாவ,தெரேசியா தோட்டப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு புல் ஆறுக்கும் நிலத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த ஆறு சந்தேக நபர்களை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது சம்பவமானது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த ஆறு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதோடு மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம், நீர்க்குழாய், மண்வெட்டி மற்றும் வயர் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# மரத்தில் மயக்கமடைந்த இளைஞன்

(பதுளை)

பதுளை தெல்பெத்த தோட்டத்தில் உயரம் கொண்ட பலா மரமொன்றில் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்ட இளைஞன் ஒருவன் கடுமையான முயற்சியின் பின்னர் கீழே கொண்டு வரப்பட்டுள்ளார்.

27 வயதுடைய குறித்த இளைஞன் மரத்தில் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்த போது மயக்கமடைந்துள்ளார்.

அவர் மயக்கமடைந்த நிலையில் இருப்பதை அவதானித்த பிரதேசவாசிகள் சிலர் கயிற்றின் உதவியுடன் கீழ் இறக்கி பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (ஜ-4)

# சதொச தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

வர்த்தக அமைச்சின் கீழ் இயங்கும் லங்கா சதொச மற்றும் சதொச நிறுவனங்களின் தலைவர் நுஷாட் பெரேரா தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் தனது இராஜினாமாக் கடிதத்தை கையளித்ததாக சதொச நிறுவனங்களின் தலைவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் அவர் தொடர்ந்தும் சதொச நிறுவனங்களின் தலைவராகக் கடமையாற்றி வருவதாகவும் அதிக வேலைப் பளுவின் நிமித்தம் தனது கடமையிலிருந்து விலகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நில அதிர்வு அறிக்கை அடுத்த வாரம்

(கண்டி)

அண்மையில் கண்டியின் திகன பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பான நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

அறிக்கையை சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. கண்டியின் திகனவில் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சிறிய நடுக்கம் குறித்து ஆராய 11 பேர் கொண்ட சிறப்புக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 3 வாரங்களுக்கு முடக்குங்கள்

## ஹர்ஷன கோரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் குறைந்தது 3 வாரங்களுக்காவது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்தும்படி கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஹர்சன ராஜகருணா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்றின் இரண்டாம் அலையிலிருந்து மீண்டெழுவதற்காக இந்த ஊரடங்கை அமுல்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலிலேயே கம்பஹா மாவட்டத்தை முடக்கம் செய்திருந்தால் நாடு முழுவதிலும் தொற்று பரவாமல் தடுத்திருந்திருக்கலாம்.

ஆனால் அரசாங்கம் அதனைச் செய்யவில்லை என்பதால் தான் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# பல தேசிய கொள்கைகளுக்கான அடித்தளத்தை அமைப்பதில் ஜனாதிபதி வெற்றி பெற்றுள்ளார்

## பௌத்த ஆலோசனை சபை பாராட்டு

(கொழும்பு)

தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு பல தேசிய கொள்கைகளுக்கான உறுதியான அடித்தளத்தை அமைப்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார் என பௌத்த ஆலோசனை சபை தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை 7 வது முறையாக ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய பௌத்த ஆலோசனை சபை கூட்டத்தின் போது தேரர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பெரும் எண்ணிக்கையான மக்களின் எதிர்பார்ப்பாகவிருந்தது ஒரு தேசிய சிந்தனையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் ஒரு தலைமையாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தொழில்கள் மற்றும் சலுகைகள் போன்ற குறுகிய விடயங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே ஜனாதிபதி அத்தகையவர்களின் ஆதரவை எதிர்பார்க்கவில்லை.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் வீழ்ச்சியடைந்த தேசிய பாதுகாப்பு, போதைப்பொருள் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகளிலிருந்து விடுபட்ட ஒழுக்கமான சமூகம், வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்தல், திறமையான அரச சேவை மற்றும் நாட்டின் தனித்துவத்தை பாதுகாக்கும் வெளியுறவுக் கொள்கை என்பனவே மக்களின் அபிலாசைகளாக இருந்தன எனத் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உட்பட பல தடைகளுக்கு மத்தியில், தேசிய கல்விக் கொள்கை, தேசிய மரபுரிமைகளை பாதுகாக்கும் திட்டம் மற்றும் புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட நாட்டின் போக்கை மாற்றும் ஒரு திட்டத்திற்கு அடித்தளம் அமைத்ததற்காக மகா சங்கத்தினர் ஜனாதிபதியை பாராட்டியுள்ளனர். (ஜ-4)

# மகர சிறைக்கலவரத்தில் புதிய திருப்பம்

(கொழும்பு)

மகர சிறைச்சாலை கலவரத்தில் உயிரிழந்த எட்டு கைதிகளும் துப்பாக்கி சூட்டிலேயே உயிரிழந்தமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மகர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட கலவரத்தில், 11 கைதிகள் உயிரிழந்தமை, 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையிலேயே பொலிஸ் ஊடகபேச்சாளரும்பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண, ஆங்கில ஊடகமொன்றுக்கு மகர சிறைச்சாலை கலவரத்தில் உயிரிழந்த கைதிகள் தொடர்பாக கூறும் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



"மகரசிறைச்சாலை கலவரத்தில் 8 பேரின் உடல்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியவேளை அவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காரணமாகவே உயிரிழந்தனர் என்பது உறுதியாகியுள்ளது.

மேலும் கலவரம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை வரை காயமடைந்த கைதிகள் உட்பட 726 பேரிடம்வாக்குமூலம் பெறப்பட்டுள்ளன" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, மகரசிறைச் சாலையில் 3000 கொரோனா வைரஸ் நோயாளிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 139 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த 139 இலங்கையர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று சனிக்கிழமை வந்தடைந்தனர்.

இதற்கமைய ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 31 பேரும் கட்டாரிலிருந்து 50 பேரும் இந்தியாவிலிருந்து 58 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு வருகைதந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# அஸ்ட்ரா ஜெனெகா - ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியே இலங்கைக்கு மிகச் சிறந்தது-சுகாதார அதிகாரிகள்

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியான நோயாளிகளுக்கு அஸ்ட்ரா ஜெனெகா-ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை செலுத்துவது மிகச் சிறந்தது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் ஒப்புதல் மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே தடுப்பூசியை பயன்படுத்துவது குறித்த இறுதி முடிவு எட்டப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனாத் தொற்றுக்கு எதிராக ஒரு பயனுள்ள தடுப்பூசியை பெற்றுக்கொள்வது குறித்து இலங்கை தற்போது பல்வேறு தரப்பினருடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி தேவையில் 20 சதவீதத்தை வழங்க உலக சுகாதார அமைப்பு ஒப்புக் கொண்டுள்ள நிலையில் அவர்கள் எந்த தடுப்பூசிக்கு அனுமதி அளிப்பார்கள் என்பது குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்





துள்ளார்.

தற்போதைய மாறுபாடு முதல் அலைகளை விட மிகவும் கடுமையானதாக இருந்தாலும் அறிகுறிகள் முன்னரை விட குறைவானதாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கொழும்பில் 101 கொரோனா மரணங்கள் மக்கள் பொறுப்புடன் செயற்படுங்கள்

## மாநகர மேயர் வேண்டுகோள்



(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை எல்லையில் நேற்று முன்தினம் வரை கொரோனா தொற்றாளர்கள் 11 ஆயிரத்து 226 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன் 101 மரணங்கள் இடம்பெற்றுள்ளதாக மாநகர மேயர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர எல்லைப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று கட்டுப்படுத்துவதற்காக எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பு மாநகர எல்லைக்குள் 58 ஆயிரத்து 35 பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் ஆரம்பத்தை விட ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற போதும் சில பிரதேசங்களில் இன்னும் அந்த நிலை தொடர்ந்து இருந்து வருகின்றது.

அதனால் பண்டிகை காலத்தில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படுவதன் மூலமும் தேவையற்ற பயணங்களை குறைத்துக்கொள்வதன் மூலமும் இந்த நிலையயை கட்டுப்படுத்திக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# அன்டிஜன் பரிசோதனையில் 23 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ரெப்பிட் அன்டிஜன் சோதனையில், இதுவரை 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சோதனையின்போது, பாடசாலை மாணவர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த மாணவரின் தந்தை, களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் நிலையில், குறித்த பொலிஸ் நிலையத்தில் மேலும்நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் மேற்கொள்ளப்படும் ரெப்பிட் அன்டிஜன் சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இராசிபலன்

27.12.2020
மார்கழி 12, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி முழுவதும்
கார்த்திகை பிற்பகல் 2.35 மணிவரை
சுபநேரம் 9.27-10.57 மணிவரை
இராகுகாலம் 4.57-6.27 மணிவரை
சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம்
பிரதோச விரதம்

வளவன்


மேஷம்

காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.


ரிஷபம்

விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


மிதுனம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுண்டு.


கடகம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


சிம்மம்

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள்.


கன்னி

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், பயணங்களால் பலனுண்டு.


துலாம்

கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.


விருச்சிகம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


தனுசு

கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

பெற்றோர் மீது பிரியம் கூடும், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், நல்ல தகவல்கள் நாடி வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.


மீனம்

பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்

**அமைதியாக வாழ எதையும் விட்டுக் கொடுக்கலாம்**

# நாட்டிற்குள் புதிய அபாயகரமான கொரோனா பரவும் வழி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**பிரித்தானியா மற்றும் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அபாயகரமான புதிய கொரோனா வைரஸ் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் மூலம் பரவும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**



புதிய வைரஸ் சிங்கப்பூர், இஸ்ரேல் போன்ற நாடுகளிலில் பதிவாகியுள்ளது.

இது இலங்கையிலும் பரவும் அபாயம் இருப்பதாகவும் சங்கத்தின் ஆசிரியர் டாக்டர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். இதற்கிடையில், சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவிகுமுதேஷ் கூறுகையில்,

சுகாதார அமைச்சின் ஆய்வகங்களில் புதிய வகை கொரோனாவை கண்டுபிடிக்க தேவையான பகுப்பாய்வு இயந்திரங்கள் இல்லை.

இருப்பினும், இந்த புதிய உயிரினங்களை அடையாளம் காண இலங்கைக்கு போதுமான வசதிகள் உள்ளன என தெரிவித்தார். (ஐ-4)

# சுற்றுலாப் பயணிகளுக்கான அறிவுறுத்தல்கள்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கொரோனா தொற்றுக்கான காப்புறுதியை பெற்றிருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதிகளை பதிவு செய்யும்போதும், விமான பயணச்சீட்டினை கொள்வனவு செய்யும்போதும் காப்புறுதியினை பெற வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், விமான நிலையங்களுக்கு வருகை தருவதற்கு 96 மணித்தியாலங்களுக்கு முன்னர், அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டுக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் இரண்டு வார கால பகுதிக்குள் 3 பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகள் ஒரே மருத்துவ கூடத்தினால் நடத்தப்பட்டிருக்க வேண்டுமெனவும் சுகாதார அமைச்சினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் மாத்திரமே தங்குவதற்கு அனுமதியளிக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முதல் இரு வாரங்களில், வெளியில் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ-4)

# அடுத்த ஆண்டின் முதல் காலாண்டுக்குள் புதிய அரசியலமைப்பு

(கொழும்பு)

குறுகிய கால நோக்கங்களை அடிப்படையாக கொண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படமாட்டாது. 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்குள் புதிய அரசியலமைப்பை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டுக்கு பொருந்தும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை ஆதரவை வழங்கினார்கள்.

புதிய அரசியலமைப்பு முரண்பாடற்ற தன்மையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கு சட்ட வல்லுநர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது. மக்களின் கருத்துக்களும் கோரப்பட்டுள்ளன.

குறுகிய கால நோக்கத்தை கொண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படக்கூடாது. அரசியலமைப்பு உறுதியானதாக இருக்கும் பட்சத்தில் அரச நிர்வாகம் பலமாக செயற்படுத்தப்படும். புதிய அரசியலமைப்பில் அனைத்து இன மக்களின் உரிமைகளும் பலப்படுத்தப்பட்டு புதிதாக பல விடயங்களும் இணைத்துக் கொள்ளப்படும்.

புதிய அரசியலமைப்பை அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் உருவாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தலும் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் நடத்த ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# 35 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியத் தவறியமை, சமூக இடைவெளியை பின்பற்றத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 829 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்படுவர்களுக்கு எதிராக தொடர்ந்து சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ-4)

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

## ஒன்பதாமிடத்தில் சனி, உயர்வுகள் வந்திடும் இனி!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**ரிஷப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று 9 ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கின்றார். அஷ்டமத்துச் சனி விலகி விட்டது. எனவே இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. தொழில் ஸ்தானத்திற்கும் பாக்கிய ஸ்தானத்திற்கும் அதிபதியானவர் என்பதால், சனி பகவான் தன் சொந்த வீடான மகர இராசியில் சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற நற்பலன்களை வழங்குவார். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு இருக்கின்றார். அந்த குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. மேலும் அங்குள்ள குருவோடு இப்பொழுது சனியும் சேர்ந்து 'நீச்சபங்க இராஜ யோகம்' ஏற்படப் போகின்றது. மகரத்தில் குரு இருக்கும் பொழுது, சனி சாதகமான பலன்களை ஏராளமாகக்கொடுக்கலாம்.

### பொன் பொருள் சேர்க்கை உண்டு

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு சனி வருகின்றார். அதுமட்டுமல்லாமல் 9 ஆம் இடம் பாக்கிய ஸ்தானமாகவும் கருதப்படுகின்றது. அதே நேரத்தில் 10 ஆம் இடம் எனப்படும் தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால், இதுவரை தடைப்பட்ட உயர்வுகள் தானாக வந்து சேரும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும் விதத்திலேயே இந்த சனிப்பெயர்ச்சி அமைகின்றது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும் எதிர்பார்த்த ஊதிய உயர்வும் வந்து சேரும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். பிதுர்ரார்ஜித சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் தீரும். உடல்நலம் சாதாரண சிகிச்சையிலேயே குணமாகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

### சனியின் பார்வை பலன்கள்

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் 3, 6, 11 ஆகிய மூன்று இடங்களையும் முறையாகப் பார்க்கின்றார். எனவே இதுவரை பிரச்சினையுடன் வாழ்ந்த உங்களுக்கு மன அமைதி கிடைக்கப் போகின்றது. 3 ஆம் இடத்தை சனி பார்ப்பதால் முன்னேற்றப் பாதையில் இருந்த குறுக்கீடுகள் அகலும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலும் யோக காரகனாக சனி விளங்குவதால், உத்தியோகத்தில் திடீரென புதிய பொறுப்புகளும் அதற்கேற்ற விதம் சம்பள உயர்வுகளும் கூட கிடைக்கலாம். சனியின் பார்வை 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் பதிவதால், பொருளாதாரப் பற்றாக்குறை அகலும்.

### சனியின் பாதசாரப் பலன்கள்

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரிய சாரத்தில் சனி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், துணிந்து சில முடிவுகளை எடுத்து மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். சுக ஸ்தானாதிபதி சூரியன் என்பதால், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும்.




28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். குடும்பத்தில் விரிசல்கள் அகன்று உறவு பலப்படும். அத்திவாரத்தோடு நின்ற கட்டடப் பணி தொடரும்.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, திருமண வாய்ப்புகள் கைகூடும். திடீர் திருப்பங்கள் ஏற்படும். இடையில் கும்ப இராசியில் சனி சஞ்சரிக்கப் போகின்றார். எனவே 'சொந்த வீடு கட்டியும் அதில் வசிக்க முடியவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, அதில் குடியேறும் முயற்சி கைகூடும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

சனிப்பெயர்ச்சி காலத்தில், மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெற இருக்கின்றது. கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 10 இல் குரு வருவதால் பதவி மாற்றங்களும் இடமாற்றங்களும் உருவாகலாம். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, இலாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, 'விபரீத இராஜயோக' அடிப்படையில் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

21.03.2022 இல் ராகு-கேது பெயர்ச்சி நடக்க உள்ளது. அப்போது மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்த காலகட்டத்தில் உங்களுக்கு மனநிம்மதி குறையும். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். வாங்கிய இடத்தை விற்க நேரிடும். தூரதேசத்தில் உள்ள சொந்தங்களால் சில நன்மைகள் ஏற்படும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படலாம்.

08.10.2023 இல் நடைபெறும் பெயர்ச்சியின்போது, மீனத்தில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். அப்பொழுது உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானம் பலம் பெறுகின்றது. வெளிநாட்டு வணிகம் லாபம் தரும். பிள்ளைகள் வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, இதுவரை கேட்டுக் கிடைக்காத சலுகைகள் இப்பொழுது கிடைக்கலாம்.

### வெற்றிக்குரிய வழிபாடு

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானை வழிபட்டு வருவதோடு, இல்லத்து பூஜை அறையில் அபிராமி அம்மன் படம் வைத்து, அபிராமி அம்மன் பதிகம் பாடி வழிபட்டால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எளிதில் வெற்றி கிடைக்கும்.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10. 2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரம் அடைகிறார்.

இந்தக் காலத்தில் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். தொழிலில் கூட்டாளிகளை நம்பி செயற்பட இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கலாம். இக்காலத்தில் யாரையும் பகைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் பொழுதும் கவனம் தேவை.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்



இந்த சனிப்பெயர்ச்சி, உங்கள் இராசிக்கு சாதகமான பெயர்ச்சியாகவே இருக்கின்றது. கல்யாணம் மற்றும் குழந்தை பாக்கியம் போன்றவற்றில் இதுவரை இருந்த தடைகள் அகலும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன்-மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொருளாதார நிலை உயரும். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும்.

ஆரோக்கியம் சீராகும். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். எதிர்பார்த்த சலுகைகளும் எளிதில் கிடைக்கும். சனியின் வக்கிர காலத்தில் பிறருக்குப் பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் உருவாகும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். (தொடரும்)

# இலவசக் கல்வி உரிமை பாதிக்கப்பட்டுள்ளது

## இணையவழிக் கல்வி பற்றி கபில

**(கொழும்பு)**

**நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் மாணவர்களுக்கு முறையான இணையவழிக்கல்வியைப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது. இணையவழிக்கல்வியை முறைப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வியமைச்சருக்கு இருக்கிறது என "சிவில் அபி" என்ற அமைப்பின் தலைவர் கபில ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

எமது நாட்டின் சிறுவர்களை எதிர்காலத்திற்கு முகங்கொடுப்பதற்குத் தயார்ப்படுத்தும் நோக்கிலேயே சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவினால் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த வருடம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பின்னரும் இவ்வருடம் கொரோனா வைரஸ் பரவலின் பின்னரும் நாட்டின் மாணவர்களுக்கான இலவசக்கல்வி உரிமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுவழியே இணைய வழிக் கல்வி ஆகும்.

இணையவழிக்கல்வி என்பது எமது நாட்டிற்குப் புதிதல்ல. ஆனால் அக்கல்வி முறையை அறிமுகப்படுத்தும் போது, அதற்கான அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்படுவதை கல்வியமைச்சு உறுதி செய்யவில்லை.

தற்போது அந்தப் பொறுப்பு பெற்றோர்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது. இணையவழிக்கல்வியை அறிமுகம் செய்யும் போது அதற்கு அவசியமான சிமாட் கையடக்கத்தொலைபேசி, டப், மடிக்கணனி, இணையவசதி போன்றவற்றைக் குறைந்த செலவில் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

எனவே கல்வித்துறையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி, குறைபாடுகளற்ற இணையவழிக்கல்வி முறையொன்றை அறிமுகம் செய்வதற்குக் கல்வியமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# மகர சிறைக் கலவரம் நீதியைப் பெறுவதில் இடையூறு

## சட்டத்தரணி சேனக விசனம்

(கொழும்பு)

மகர சிறைச்சாலை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இடையூறை ஏற்படுத்தும் விதமான நடவடிக்கைகள் நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மேற்கொள்ளப்படுகின்றன என சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா விசனம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

மகர சிறைச்சாலையில் நவம்பர் 29 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தினால் 11 கைதிகள் உயிரிழந்திருப்பதுடன் நூற்றுக்கும் அதிகமான கைதிகள் காயமடைந்திருக்கிறனர்.

இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம்.

அண்மைக்காலத்தில் இதனை மூடிமறைக்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையை நாங்கள் அவதானித்திருக்கின்றோம்.

இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சர்கள் கூட, குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிருந்து காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகையினாலேயே உயிரிழந்தவர்களைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நாம் வலியுறுத்தினோம்.

அந்த வகையில் இதுவரையில் பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட எட்டுப் பேரும் துப்பாக்கிச்சூட்டின் விளைவாகவே உயிரிழந்திருக்கிறார்கள்.

எனினும் நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இச்சம்பவத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிராகப் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன என அவர் மேலும் குற்றச்சாட்டியுள்ளார். (ஐ-4)

# வெவ்வேறு விபத்துக்களில் 4 இளைஞர்கள் உயிரிழப்பு

## 30 பேர் காயம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதாயில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 5 இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

**வெல்லவாய**

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லவாய - தணமல்வில வீதியில் மோட்டார் சைக்கிள் எதிர்த்திசையில் வந்த வானுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**குட்டிகல**

குட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எம்பிலிபிட்டி - நோனாகம வீதியில் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிளில் பின்னால் சென்ற நபர் கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். துங்கம பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

**மிஹிந்தலை**

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணப்படும் உப வீதி ஒன்றில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுள் ஒருவர் உயிரிழந்துள்ளார். காயமடைந்திருந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மாத்தளை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

**கொக்கரெல்ல**

கொக்கரெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்புள்ள - குருநாகலை பிரதான வீதியில் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்த்திசையில் வந்த தனியார் பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்றோர் பொல்கொல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளார். கொக்கரெல்ல பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துக்களில் 30 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# சர்வதேச அளவில் இலங்கை தனிமைப்படுத்தப்படலாம்!

(கொழும்பு)

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது என்ற பிடிவாதமான கொள்கையால் சர்வதேச அளவில் இலங்கை தனிமைப்படுத்தப்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

இவ்வாறு பிடிவாதமான நிலைப்பாட்டினை அரசாங்கம் முன்னெடுப்பது துரதிர்ஷ்டவசமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், நாங்கள் முஸ்லிம்கள் நாட்டின் சட்டத்தை பின்பற்றுவது குறித்து கற்றுக் கொடுக்கப்பட்டவர்கள், சமூகத்திற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுத்துகின்றது என்றால் நாங்கள் அதனை தவிர்க்கவேண்டும்.


ஆனால் இந்த விடயத்தில் கொரோனா காரணமாக உயிரிழந்தவர்களின் உடல்களை அகற்றுவது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் தெளிவாக உள்ளது.

வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட பின்னர் அரசாங்கம் அதனை இரத்துச் செய்துவிட்டு கொரோனாவினால் உயிரிழந்த அனைவரினதும் உடல்களையும் தகனம் செய்யும் கொள்கையை பின்பற்றுகின்றது.

உடல்களை அகற்றுவதை உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையிலோ அல்லது விஞ்ஞான ரீதியிலான அடிப்படையிலேயோ அரசாங்கம் முன்னெடுத்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராகவே உள்ளோம்.

ஆனால் அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# நெக்குருகும் சுனாமி நினைவலைகள்...








வடமராட்சி




யாழ்.மாவட்ட செயலகம்



தெல்லிப்பழை




முல்லைத்தீவு

வவுனியா




மட்டக்களப்பு



கிளிநொச்சி



மன்னார்

படங்கள்:- மகாலிங்கம், நெடுங்கீரன், ரவிசாந், சிவசாந்தன், சதீஸ், வசந்தரூபன், கிருஷ்ணகுமார், நிபோஜன், ஜோசப்நயன், சப்தசங்கரி, தேவானந்தன், தவசீலன்.

நீங்கள் ஒரு தீர்மானம் செய்வதற்கு முன்பு நூறு தடவை சிந்தியுங்கள். ஆனால், ஒரு தீர்மானத்திற்கு வந்தபின் ஒரே மனிதரைப்போல் அதனை ஆதரித்து நிற்பீர்களாக. – முஹம்மதலி ஜின்னா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இழப்பின் துயரத்தை வலிதாக்க வேண்டாம்

மனித வாழ்வில் அந்திமச் சடங்குகள் மிகவும் முக்கியமானவை. இந்த மண்ணில் பிறந்து வாழ்ந்த மனிதனின் அந்திமச் சடங்குகள் செம்மையாக நிறைவேறும்போது அது மன ஆறுதலையும் திருப்தியையும் தருகிறது.

இறந்தவரின் உடலை வைத்து உறவுகள் கூடி அழுது ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் செய்து இறுதிச் சடங்குகளை நிறைவேற்றும் போது, இழப்பின் வலி தணிகிறது. எனவே இறுதிச் சடங்குகள் அவசியமானவை.

இங்கு மனித உடல் ஐம்பூதங்களால் ஆனவை என்ற தத்துவத்தின் கீழ், இறந்தவரின் உடல் ஐம்பூதங்களுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்ற அடிப்படையில்;

உடலைத் தகனம் செய்வது, நிலத்தின் கீழ் அடக்கம் செய்வது ஜலசமாதியாக நீரில் சங்கமமாக்குவது என்றவாறு மனித உடல் பிரபஞ்சத்தூடன் ஐக்கியப்படுத்தப்படுகிறது.

இதில் அவரவர் தத்தம் சமய நெறிமுறைகளுக்கேற்ப இறந்தவரின் உடலை பஞ்ச பூதங்களுடன் சங்கமிக்கச் செய்வர்.

இந்த வகையில், இந்துக்கள் இறந்தவரின் உடலை அக்கினியில் ஏற்றித் தகனம் செய்து வெந்து நீறான பிடி சாம்பலை கங்கையில் கரைத்து தம் கடன் செய்வர்.

பௌத்தர்களும் இந்து முறைப்படி தகனம் செய்கின்றனர்.

கத்தோலிக்க மக்களும் இஸ்லாமிய சகோதரர்களும் நிலத்தின் கீழ் அடக்கம் செய்வதை தங்களின் சமயச் சடங்காக – மார்க்கத்தின் கட்டளையாகப் பின்பற்றுகின்றனர்.

இந்நிலையில், தற்போது உலகை உலுக்கி நிற்கும் கொரோனா நோய்க்குப் பலியானவர்களை எரிப்பதுதான் பாதுகாப்பு என்ற முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் மேற்போந்த தீர்மானம் சுகாதார நடைமுறைகளுக்கானதாக இருந்தாலும் கொரோனாத் தொற்றினால் இஸ்லாமிய மார்க்கம் சார்ந்தவர்கள் மரணிக்கும் போது அவர்களை எரிப்பது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் இஸ்லாமிய மக்களை மிகுந்த வேதனைப்படுத்தியுள்ளது.

அந்த நடைமுறை தங்களின் மார்க்கத்துக்கு குந்தகம் என்று முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர்.

எனவே அவர்கள் தங்களின் மார்க்கத்துக்கு ஏற்ப இறந்தவரின் உடலை அடக்கம் செய்வது அவர்களின் உரிமையும் மரபுமாகும்.

ஆகையால், இது விடயத்தில் அரசாங்கம் இஸ்லாமிய மக்களின் மார்க்கத்தை மதிக்க வேண்டும்.

ஆக, கொரோனாத் தொற்றினால் பலியானவர் ஓர் இஸ்லாமியராயின் கொரோனாத் தொற்று நீக்கத்தை உரியவாறு மேற்கொண்டு உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதிப்பதே ஏற்புடையதாம்.

இதைவிடுத்து தகனம் செய்யுங்கள் எனக் கட்டளை இடுவது இழப்பின் துயரத்தை மேலும் வலிதாக்கும் என்பதால், மனிதநேயத்தைப் பின்பற்றுவதே இங்கு அவசியமானது.

# மகசின் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 48 அரசியல் கைதிகளுக்கு கொரோனா

## வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் 14 பேரின் விபரங்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மகசின் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 48 அரசியல் கைதிகளுக்குக் கொரோனா. வைரஸ்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று உப்ப நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரின் விபரங்களை குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் கொரோனாத் தொற்று பல கொத்தணிகளாக உருவெடுத்து மிக வேகமாகப் பரவி பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சிறைச்சாலைக் கோவிட் கொத்தணி மூலம் இதுவரை 3111 கைதிகளுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

ஐந்து கைதிகள் வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர். தமிழ் அரசியற் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் 810 கைதிகள் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கிறார்கள்.

ஏனைய சிறைச்சாலைகளுடன் ஒப்பிடுகையில் மகசின் சிறைச்சாலையிலேயே தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நிலையில், மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 48 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது.

இவர்களில், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அடங்கலாக, வைத்தியர் சிவரூபன், இந்து மத குருவான இரகுபதி சர்மா உட்பட்ட 14 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

01. சின்னையா சிவரூபன்
02. சி.ஜ. இரகுபதி சர்மா
03. எட்வேட் சாம் சிவலிங்கம்
04. தங்கவேல் சிவகுமார்
05. நாகலிங்கம் மதனசேகர்
06. தேவசகாயம் உதயகுமார்
07. குலசிங்கம் குலேந்திரன்
08. றுபட்ஷன் யதுஷன்
09. சேவியர் ஜோண்ஷன் டட்லி
10. தாவீது நிமல் ராஜ் பிரான்சிஸ்
11. விநாயகமூர்த்தி நெஜிலன்
12. இரத்தினம் கிருஷ்ணராஜ்
13. சின்னமணி தனேஸ்வரன்
14. ஞானசேகரம் ராசமதன்

ஆகியோரே சிறை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை குறைக்கும் முகமாக சில பொறிமுறைகளுக்கூடாக அரசாங்கம் 6 ஆயிரம் கைதிகளை விடுவித்துள்ளது. ஆனபோதிலும். அதில் ஒரு தமிழ் அரசியற்கைதியேனும் உள்வாங்கப்படவில்லை. இதனால், அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் மிகுந்த கவலைக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சிதம்பர தரிசனம்


ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.27) திருவெம்பாவை 7ஆம் நாள்

### இன்றொருக்கா ஈழத்தமிழருக்காய் தூது செல்லப்பா

நாவார மனமார நாதன் புகழ்பாடித்
தேவாரம் சூட்டி நின்ற சிவனடியார் மூவரிலே
வன்றொண்டர் சுந்தரரை வழக்காடித் தடுத்தாண்டு
நன்றென்று கதிகாட்டி நாளும் துணையிருந்த பெருமானே
அவர் செய்த பிழை முற்றும் அன்பாய் பொறுத்தருளு
உவகையுடன் பொன்னும் ஓங்கிடும் மெய்ப்பொருளும் தந்து
பரவையிடம் தூதும் சென்ற எங்கள் பரம்பொருளே
பணிகிறோம், இன்றொருக்கா ஈழத்தமிழருக்கு தூது செல்லப்பா

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்


## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ சஞ்சலமுள்ளவன் காற்றடிக்கும் திசையெல்லாம் இழுத்து அலைக்கழிக்கப்படும் கடல் அலைபோல் இருக்கிறான்.
❖ நியாயப் பிரமாணத்தைக் கிரமப்படி மனிதன் உபயோகித்தால் நியாயப் பிரமாணம் நல்லது.
❖ சச்சரவிலிருந்து விலகி நிற்பது மனிதனுக்கு மேன்மை. ஆனால், ஒவ்வொரு முட்டாளும் எந்தச் சண்டையிலும் தலையிட்டுக் கொண்டேயிருப்பான்.
❖ சகிப்புத் தன்மையுள்ளவர்களே சந்தோஷமாயிருக்கிறார்கள் என்று மதிக்கிறோம்.
❖ ஒரு சிறு குழந்தையைப் போலக் கடவுளின் ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாத எவனும் அதனுள் நுழைய மாட்டான்.
❖ பொறாமையும் சச்சரவும் எங்கிருக்கிறதோ, அங்கே குழப்பமும் சகலவிதத் தீச்செயல்களும் இருக்கின்றன.
❖ அறிவாளிகளோடு நடப்பவன் அறிவாளி ஆவான். முட்டாள்களின் தோழனோ அழிந்துபோவான்.
❖ பாலைக் கடைந்தால் வெண்ணெய் பிறக்கும். மூக்கைப் பிசைந்தால் இரத்தம் பிறக்கும். கோபத்தை வலியுறுத்தினால் சண்டை தான் பிறக்கும்.
❖ பாவம் செய்யாமல் கோபப்படுங்கள். உங்கள் கோபத்தின் மீது சூரியன் கீழே இறங்கி விடாதிருக்கட்டும்.

# புதிய வகை கொரோனாவிற்கான அறிகுறிகள்

## இங்கிலாந்து தகவல்



(லண்டன்)

மாறுபாடு ஏற்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் புதிதாக 7 அறிகுறி களைக் கொண்டிருப்பதாக இங்கிலாந்து அரசு தெரி வித்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதி யில் சீனாவில் உருவான கொரோனா வைரஸ் பல்வேறு நாடுகளுக்கும் பரவியது.

இங்கிலாந்திலும் வைரஸ் பாதிப்பு அதிகமாக ஏற்பட் டது. அதன்பின் பாதிப்பு குறைந்ததால் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.


இதற்கிடையே இங்கிலா ந்தில் லண்டன் உள்ளிட்ட பல பகுதிகளில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவு வது கண்டுபிடிக்கப்பட்டது. வைரசின் இந்த புதிய மாறு பாடு வீரியமிக்கதாக இருக்கி றது. இதனால் வைரஸ் முன்பைவிட 70 சதவீதம் வேகமாக பரவுகிறது. இதை யடுத்து இங்கிலாந்தில் மீண்டும் கடும் கட்டுப்பாடு கள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் மாறு பாடு ஏற்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் புதிதாக 7 அறிகுறிகளை கொண்டிருப்பதாக இங்கி லாந்து அரசு தெரிவித்துள் ளது.

இதுகுறித்து அந்த நாட்டு சுகாதாரத்துறை கூறும் போது, 'ஏற்கனவே கொரோனா அறிகுறிகளாக இருப்பதுடன் சேர்ந்து சோர்வு, பசியின்மை, தலைவலி, வயிற்றுப்போக்கு, மனக்குழப் பம், தசை வலி, தோல் அரிப்பு ஆகிய 7 புதிய அறி குறிகள் தென்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதற்கிடையே புதிய வகை கொரோனா வைரஸ் முன் பைவிட அதிக உயிரிழப்பு மற்றும் பாதிப்புகளை ஏற்படு த்தலாம் என்று ஆய்வில் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி-4)

# துருக்கியில் மிகப் பெரிய தங்கப் புதையல் சிக்கியது




(அங்காரா)

துருக்கியில் 99 தொன் எடையுள்ள மிகப் பெரிய தங்கப்புதையல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மொத்த மதிப்பு 6 பில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.


இதன் மதிப்பு, உலகின் பல நாடுகளின் மொத்த உள் நாட்டு உற்பத்தி மதிப்பை விட அதிகமாகும்.

இந்த தங்கப் புதையல் கிடைத்ததை அடுத்து நாட் டில் பொருளாதார பாதிப்பு களை ஓரளவு எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை யைத் துருக்கி வெளியிட்டுள் ளது.

துருக்கியில், உர நிறு வனம் ஒன்று வாங்கிய நிலத்தில் இந்த தங்கப் புதை யல் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. அடுத்த இரண்டு ஆண் டுகளில் இங்கு தங்கம் வெட்டி எடுக்கப்படும். துரு க்கி பொருளாதாரத்துக்கு இது மிகவும் உதவும் என வும் அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-4)

# கொரோனா தடுப்பூசி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்; அநாதைக் குழந்தைகளின் அவலங்கள் தீர்க்கப்பட வேண்டும்

## கிறிஸ்மஸ் செய்தியில் பாப்பரசர் வேண்டுகோள்



( வத்திக்கான் )

கொவிட்-19 தடுப்பூசிகள் அனைவருக்கும் கிடைக் கும் வகையில் விநியோகிக் கப்பட வேண்டும் என புனித பாப்பரசர் பிரான்சிஸ் வேண் டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், மிகவும் பாதிக் கப்படக்கூடிய மற்றும் தேவை யுள்ளவர்களுக்கு முன்னு ரிமை அளிக்கப்பட வேண் டும் என அவர் வலியுறுத் தியுள்ளார்.

கிறிஸ்மஸ் தினமான நேற்று முன்தினம் விசேட உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிரியா, ஏமன் மற்றும் ஈராக் ஆகிய நாடு களில் போரினால் அநாதை களாக்கப்பட்ட குழந்தை களின் அவலங்கள் குறித்து புனித பாப்பரசர் பிரான்சிஸ் கவலை வெளியிட்டுள் ளார்.


இந்நிலையில், அந்தக் குழந்தைகளைக் காக்க அனைவரும் கவனத்தைச் செலுத்துவோம்

மேலும், குறித்த நாடுக ளில் சமாதானத்தையும் சிற ந்த எதிர்காலத்தையும் ஏற் படுத்த முயற்சிகள் மேற்கொள் ளப்பட வேண்டும் எனவும் இதனிடையே, மூடிய தேசிய வாதங்களைக்கொண்டு உண் மையான மனித குடும் பமாக வாழ்வதைத் தடுக்க அனுமதிக்க முடியாது என வும் பாப்பரசர் தெரிவித்தார்.

மேலும், உலக சுற்றுச் சூழல் நெருக்கடி, கடுமை யான பொருளாதார வீழ்ச்சி மற்றும் சமூக ஏற்றத்தாழ் வுகள் தற்போது கொரோனா தொற்றுநோயை அடுத்து மோசமடைந்துள்ளது.

இந்நிலையில், ஒருவருக் கொருவர் சகோதரத்துவத் துடன்ஒன்றிணைவது அனை வருக்கும் மிகமுக்கியமா னது என பாப்பரசர் பிரான் சிஸ் தனது கிறிஸ்மஸ் தின உரையில் குறிப்பிட்டுள் ளார். (நி-4)

# பிரான்ஸிற்குள் நுழைந்தது புதிய வகை கொரோனா



(பாரிஸ்)

அதிக வீரியத்துடன் பிரித் தானியாவில் வேகமாக பரவிவ ரும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றுடன் முதலா வது நபர் பிரான்ஸில் அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி லண்டனில் இருந்து நாடு திரும் பிய ஒருவருக்கு புதுவகை வைரஸ் தொற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக அந்த நாட்டின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

எவ்வித நோய் அறிகுறி களும் இல்லாத நிலையில் அவர் அடையாளம் காணப் பட்டுள்ளதுடன், தற்போது அவர் சுயதனிமைப்படுத்த ப்பட்டுள்ளதாக அறிவித்துள் ளனர்.

மிகவும் வேகமாக பரவக் கூடிய புதுவகை கொரோனா வைரஸ் பிரித்தானியாவில் முதன்முதலில் கண்டுபிடிக் கப்பட்டது.

இதனை அடுத்து, அங்கி ருந்து புதியவகை கொரோனா வைரஸ் தொற்று பரம்பலடை வதை தடுக்கும் வகையில், பல நாடுகள் பிரித்தானியாவிற் கான பயணத்தடையை விதித் து வருகின் றன.

பிரான்ஸூம் ஆரம்பத்தி லேயே பயணத்தடையை விதித்திருந்த போதும், சில கட்டுப்பாடுகளுடன் கடந்த புதன்கிழமை அந்த தடை யைத் தளர்த்தியமை குறிப் பிடத்தக்கது. (நி-4)

# மைக்கல் ஜாக்சனின் பண்ணை வீடு 161 கோடி ரூபாய்க்கு விற்பனை



(லொஸ்ஏஞ்சல்ஸ்)

மைக்கல் ஜாக்சன் இறந்த 11 ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய நெவர் லேண்ட் பண்ணை வீடு 22 பில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய் யப்பட்டுள்ளது.

பொப் இசை உலகின் அர சன் என்று ரசிகர்களால் போற்றப்பட்டவர் மைக்கல் ஜாக்சன். இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள தனது வீட்டில் அளவுக்கு அதிகமான போதைப்பொருள் எடுத்துக்கொண்டதால் மாரடைப்பு ஏற்பட்டு உயி ரிழந்தார். மைக்கல் ஜாக்ச னுக்கு அமெரிக்காவில் ஏரா ளமான சொத்துகள் உள் ளன.

மைக்கல் ஜாக்சன் இறந்த 11 ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய நெவர் லேண்ட் பண்ணை வீடு தற்போது விற்பனை செய்ய பட்டுள்ளது. மைக்கல் ஜாக்ச னின் முன்னாள் நண் பரானா ரான் புர்கிளே என்ற ரியல் எஸ்டேட் அதிபர் இந்த பண்ணை வீட்டை 22 பில்லி யன் அமெரிக்க டொலருக்கு வாங்கியுள்ளார். (நி-4)

## இளைஞன்...

னால் கூலிப் படையினரே இளைஞனை கடத்தி அடித்தும், வெட்டியும் கொலை செய்துள்ளதாக உறவினர்கள் குற்றம் சுமத்தினர்.

எனினும், பொலிஸார் அதனை இது வரை உறுதிசெய்யவில்லை. படுகொலை தொடர்பில் சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (ம-3)

## யாழை...

சேர்ந்த இளம் பெண் ஒருவர் கொழும்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளம் யுவதியே வெள்ள வத்தை கடலிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

நண்பகலளவில் தன்னுடைய ஸ்கூட்டரில் வெள்ளவத்தை மிராஜ் ஹோட்டலுக்கு முன்பாக வந்த குறிப்பிட்ட பெண்,

மோட்டார் சைக்கிளை வீதியோரத்தில் நிறுத்தி விட்டு கடலுக்குள் சென்றதாகவும், சில நிமிடங்களின் பின்னர் கடல் அலையினால் அவரது சடலம் அடித்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## மரக்கறி விநி...

திப்படுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை மூடப்பட்டுள்ள நிலையில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் 12 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட எழுமாறான பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

தம்புள்ள மொத்த விற்பனை சந்தைக்குச் சென்று மரக்கறிகளை எடுத்து வந்து புதுக்குடியிருப்பு சந்தை வியாபாரிகளுக்கு விநியோகிப்பவருக்கே இவ்வாறு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அவருடன் தொடர்புடைய அனைவரையும் சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கையை புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி முன்னெடுத்துள்ளார். (ம-3,18)

## வடக்கில் முதலா...

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 60 வயதான பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது.

குறித்த பெண் கடந்த இரு தினங்களிற்கு முன்பாக வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சை ஒன்றிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

குறித்த பெண்மணி நேற்றைய தினம் வவுனியா வைத்தியசாலையில் இருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். அவருக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,250,299)

## சண்டிலிப்பாயைச்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிலைய ஆய்வுகூடங்களில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே குறித்த நால்வருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த மருதனார்மடம் சந்தை வியாபாரிகளுடன் நேரடித் தொடர்புடைய நான்கு பேரே இவ்வாறு கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, மருதனார்மடம் கொரோனா கொத்தணியில் தொற்று அடையாளம் காணப்பட்ட 16ஆவது நாளில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 109ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3,18)

## கொரோனா...

வது.

கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாம் அலை நாடெங்கும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. நாள்தோறும் சராசரி 500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை, மரண எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனவே, இந்த பேராபத்திலிருந்து மீண்டெழுவதற்காக நாடு முழுவதும் குறைந்தது 3 வாரங்களுக்காவது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும்படி அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (ம-3)

## +3,615...

639 கைதிகள் மற்றும் ஒன்பது சிறை அதிகாரிகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 6 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை

### வர்த்தமானி சட்டமா அதிபரின் ஒப்புதலுக்கு பரிந்துரை

(கொழும்பு)

அழிந்து போகாத 6 வகையான பிளாஸ்டிக்குகளை தடை செய்வது தொடர்பான அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு சட்டமா அதிபரின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒரு தடவை பயன்படுத்தும் பிளாஸ்டிக் குவளைகள், பொம்மைகள் மற்றும் பிளாஸ்டிக் போத்தல்கள் உட்பட ஆறு வகையான பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்படும்.

அடுத்த வாரத்திற்குள் பணிகளை முடிக்க எதிர்பார்க்கிறோம் என்று சுற்றுச் சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

நாடு முழுவதும் உள்ள சிறைகளில் இருந்து 3,615 கைதிகள் இதுவரை கொரோனா தொற்றிற்குள்ளாகியுள்ளனர்.

2,850 கைதிகள் மற்றும் 112 அதிகாரிகள் கொரோனாவிலிருந்து முழுமையாக குணமடைந்துள்ளனர். (ம-3)

## குடும்பஸ்தர்...

லிருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய சிமியோன் கியூமர் என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## நாட்...

தொற்றுக்குள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 188ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் +598 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## நிபுணர்களின்...

சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனை கருத்திற் கொண்டு எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அனைத்து சமூகங்களும் இணங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கோவிட் தொற்றினால் மரணிப்போரை தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்ற விவகாரம் தொடர்பில் அரசாங்கம் தீர்மானங்களை எடுக்காது.

அது குறித்து நிபுணர்களே தீர்மானிப்பார்கள் என்றார். (ம-3)


தன நிதானய
திகதி - 2020.12.26
சீட்டிழுப்பு இலக்கம் - 385
U 47 62 64 82
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/12/2020 சீட்டிழுப்பு இலக்கம் 1082
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Q 4 3 6 3 8 4

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2643
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Q 01 11 44 46

மஹஜன சம்பத
திகதி 2020/12/26
சீட்டிழுப்பு இலக்கம் 4348
Q 5 4 7 8 9 3

மெகா பவர்
திகதி 26/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0715
P 04 20 21 66 73

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

சீட்டிழுப்பு வாரம் 038
சீட்டிழுப்பு திகதி 26/12/2020
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 16 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 21,30,400/=

அத கோடிபதி
திகதி: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1144
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 26.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 93,646,490
வெற்றி இலக்கங்கள் 30 54 60 70 S
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சீட்டிழுப்பு இல: 3474
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 26.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,656,319
வெற்றி இலக்கங்கள் 03 07 56 62 F
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,001,784/=
திகதி: 26.12.2020
வெற்றி வாரம்: 3025
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 14 20 47 55 துலாம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,906,120

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1318
சீட்டிழுப்பு திகதி 26/12/2020
நிறம் கடும் நீலம்
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் B 05 20 33 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,965,480

சவர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 396 | திகதி 26.12.2020 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 19 27 46 | விதி எண் 7
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,187,172
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**வேலையாட்கள் தேவை**

பருத்தித்துறை நகரில் பஸ் நிலையத் திற்கு அருகாமையில் இயங்கிவரும் சண் கலர் லாப் அன்ட் பிறிண்டிங் எனும் நிறுவனத்திற்கு பிறிண்ட், டிசைனிங், பிறேம்கள் மற்றும் பனர் போட் செய்வதற்கு பணியாட்கள் தேவை. (C-1020)

**077 727 5213**

**அன்னா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் ▶ 1150/=

லண்டன் ▶ 1050/= இத்தாலி ▶ 1250/=

5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-987)

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)

பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துனுக்காய்

**BEST JOB OPPORTUNITY**

இலங்கையில் முன்னணி வகிக்கும் நிறுவனத்தில் (MDE) இணைந்து 2021 ஆம் ஆண்டை புதிய வேலை வாய்ப்புடன் ஆரம்பித்துக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு..!

**தகுதி : தரம் 10 தொடக்கம் O/L, A/L**

**எமது கம்பனி மூலம் உங்களிற்கு கிடைக்கும் வாய்ப்புகள்,**

- அனுபவமற்றவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
- ஊக்குவிப்புத் தொகை
- பயிற்சியின்பின் உங்கள் பிரதேசத்தில் வேலை வாய்ப்பு.
- பயிற்சியின்பின் ETF, EPF, Medical வழங்கப்படும்.
- வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்.

| பதவிகள் | வருமானம் |
|---|---|
| உதவி முகாமையாளர் | 38.000/= - 40.000/= |
| எழுதுநர் | 32.000/= - 36.000/= |
| மேற்பார்வையாளர் | 25.000/= - 32.500/= |
| கணக்காளர் | 38.000/= |
| விற்பனைப் பிரதிநிதிகள் | 23.000/= |

போன்ற வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

பயிற்சியின் போது 15.000 தொடக்கம் 23.000 வரை (விதிமுறைகள் உள்ளன.)

அதனுடன் தங்குமிட வசதி உண்டு.

தங்கள் முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கத்தை SMS செய்யவும். (077 326 0979) (5080)

**077 326 0979, 076 523 3519**


# புதுக்குடியிருப்பில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்

## நேற்றே ஐயப்பன் மாலை கழற்றினார்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பில் நேற்று கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவரின் நடமாட்டம் பற்றிய புதிய தகவல் கள் வெளியாகியுள்ளன.

அவர் ஐயப்ப பக்தர். ஐயப்பன் விரதம் இருந்தார். நேற்று தான் புதுக்குடியிருப்பு கைவேலியிலுள்ள ஐயப்பன் ஆலயத்திற்கு சென்று மாலை கழற்றியுள்ளார். நேற்று அங்கு மண்டல பூசை நடந்தது. அங்கு பெருமளவு ஐயப்ப பக்தர்கள் ஒன்றுகூடியுள்ளனர். சுமார் 130 பேர் வரையில் அங்கு ஒன்றுகூடியதாக, ஆலயத்திற்கு வழிபாட்டிற்கு சென்ற ஒருவர் தெரிவித்தார்.

இதனால் அவருடன் தொடர்பிலிருந்த ஐயப்ப பக்தர்களும் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

அவர் நேற்று மாலை வரை ஆலயம், சந்தை, பொதுமக்கள் கூடும் இடங்கள் என பல இடங்களிற்கும் சென்றுள்ளார்.

தற்போது, அவரது வீட்டிற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (மு-03)


**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (C-1054)

**077 436 6704, 077 179 1963**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-962)

0768226240 DHL

**பணியாளர் தேவை**

யாழ். மத்தியில் சிசிரிவி இணைப்பாளர்கள் மற்றும் அலுவலக முகாமையாளர்கள் (பெண்கள்) பகுதி/முழு நேரமாக பணியாற்ற உடனடியாகத் தேவை. (5069)

**076 989 9977**
**077 868 8517**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை

திருமதி **தர்ஷிகா சியாமளரூபன்** அவர்களின்

அன்புத் தந்தை

**அமரர்**


## செல்வத்துரை கணேசரட்ணம்

**( இளைப்பாறிய பிரதம லிகிதர், நல்லூர் பிரதேச செயலகம் )**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-1034)

**ஆசிரியர் கழகம்**
**யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி**

# மரண அறிவித்தல்



## திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சிவன் கோவிலடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை நேற்று (26.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற காசித்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நடேஸ்வரன் (அதிபர் - கிளி/ பரமன்கிராய் அ.த.க பாடசாலை), சோபனா (பிரான்ஸ்), பரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - சாவகச்சேரி), தயானந்தன் (பிரான்ஸ்), பிரதீபா ஆகியோரின் மாமனாரும் சதுரன், தனுஜன், அபிசாளினி, பிரதீப் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-1033)

22/4, பொலிஸ் நிலைய ஒழுங்கை,
கண்டி வீதி, சாவகச்சேரி. 077 248 7868

தகவல்:-
க. நடேஸ்வரன் (மகன்)

# மரண அறிவித்தல்



## நித்தியலெட்சுமி செல்லையா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி அரசடி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நித்தியலெட்சுமி செல்லையா நேற்று (26.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பூமணி தம்பதியரின் அன்பு மகளும் நித்தியானந்தனின் (நித்தி) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:-
செ. நித்தியானந்தன் (சகோதரன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 289

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 27.12.2020 தொலைபேசி : 021 222 3378




## தகனத்தால் தகிப்பு



## வவுனிக்குளத்தில் பரிதாபம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன கங்காணியார் காலில பெரியதொரு கட்டுப் போட்டிருக்கிறியள். என்ன சங்கதி. மூப்பர் விசாரித்தார்.

கங்காணி: மூப்பர், அதையேன் கேட்கிறியள். யாழ்ப்பாணம் பிறவுண் வீதியின் ஒரு பக்கத்தில கிடங்கு வெட்டி பைப் தாக்கினம். கிடங்கு வெட்டின மண் றோட்டுக்கு வந்து றோட்டு முழுவதும் சேறும் சகதியும். மோட்டார் சைக்கிளில வந்த நான் அதில சறுக்கி விழுந்து போனன் காலில காயம். அதுக்குத் தான் கட்டுப் போட்டிருக்கிறன்.

சாத்திரியார்: நானும் அவதானித்தனான். பிறவுண் வீதியின்ர ஒரு பக்கத்தில கிடங்கு வெட்டி பைப் தாட்டுக் கொண்டிருக்கினம்.

என்னத்துக்குப் பைப் தாக்கினம் என்கிற சங்கதி கூட ஒருத்தருக்கும் தெரியல்ல.

றோட்டு முழுவதும் ஒரே சேறும் சகதியும். இந்த நாட்டில சட்டம் ஒழுங்கு அறவே இல்லை என்பது போலத்தான் பிறவுண் வீதியின்ர நிலைமை இருக்குது.

பைப் தாக்கிறதுக்குக் கிடங்கு வெட்ட வீட்டு மதில்களெல்லாம் பாறிப் போகுது. இதுகளை யாரிட்டச் சொல்லுறது.

கங்காணி: நீங்கள் இதைச் சொல்லுறியள் யாழ்ப்பாணத்தில எங்க வீதி திருத்தமெண்டாலும் அதற்கான கல்லுகளை பிறவுண் வீதியில தானே போட்டு வைக்கிறார்கள். பிறவுண் வீதியோ கிடங்கும் முடங்குமாகக் கிடக்குது எவ்வளவு காலம்; இன்னும் அந்த வீதியைத் திருத்தவேணும் எண்ட எண்ணம் ஒருத்தருக்கும் இல்லை.

பண்டிதர்: இஞ்சே கங்காணியார் நான் ஒண்டு சொன்னால் குறை நினைக்க மாட்டியளோ.

கங்காணி: என்ன பண்டிதர் இப்பிடிச் சொல்லிட்டியள். ஆலடி மாநாட்டில குறை குற்றங்களை ஆராய்வதுதானே நோக்கம். தாராளமாகச் சொல்லுங்க நான் ஒரு குறையும் நினைக் கமாட்டன்.

பண்டிதர்: பொதுவில பிறவுண் வீதியில இருக்கிறவர்கள் தாங்கள், தங்கட வீடு அவ்வளவு தான்.

வீட்டுக் கேற்றைப் பூட்டிவிட்டால் சரி எண்ட நினைப்போட அவர்களின்ர காலம் கடக்குது.

மூப்பர்: இப்ப இருக்கிற சூழ்நிலையில இதைத் தானே செய்ய முடியும்.

பண்டிதர்: பிறவுண் வீதியில இருக்கிறவர்களுக்கு ஒரு பொது அமைப்புக்கூட இல்லை. உண்மையில பிறவுண் வீதியில வசிக்கிற மக்கள் ஒன்றுபட்டு ஒரு பொது அமைப்பை உருவாக்கி தங்கட பகுதியில இருக்கிற பொது பிரச்சினைகளைத் தீர்க்கலாம். எங்கட பிறவுண் வீதியைத் திருத்து என்று ஆர்ப்பாட்டம் செய்யலாம்.

இதைவிட்டிட்டு எங்களுக்கென்ன எண்டு இருக்க எங்கேயோ இருக்கிறவியள் தங்கட வீட்டுக் குப்பை கூழங்களைக் கொண்டு வந்து பிறவுண் வீதி ஒழுங்கைகளில போடுகினம். எல்லாம் இளக்காரம் தானே!

(இவ்வாறு பண்டிதர் கூறி முடிக்க அந்நேரம் பார்த்து விதானையார் விசுவலிங்கம் வந்து சேர்ந்தார்).

சிறாப்பர்: என்ன விதானையார் எப்பவும் நேரத்துக்கு வாறநீங்கள் இண்டைக்குப் பிந்திப் போய்ச்சுது.

விதானையார்: அதையேன் கேட்கிறியள். மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் முடிஞ்சு போட்டுது எண்டு பெற்றோல் செற்றில 500 ரூபாவுக்குப் பெற்றோல் அடிச்சன். அரைக் கிலோ மீற்றர் கூட போகல்ல பெற்றோல் தீர்ந்து போய்ச்சுது.

கங்காணி: இதென்ன கதை.

வாத்தியார்: விதானையார் சொல்லுறதில விசயம் இருக்குது. எனக்கும் சிலர் சொல்லியிருக்கினம் பெற்றோல் செற்றுகளில உந்த விளையாட்டு நடக்குதெண்டு.

சிறாப்பர்: இது மட்டுமல்ல அங்கயொரு பெற்றோல் செற்றில டீசலுக்குள்ள தண்ணியாம். அந்தச் செற்றில டீசல் அடிச்ச வாகனங்கள் நடுவீதியில நிற்க வேண்டியதாய் போச்சுதெண்டு கேள்வி.

மூப்பர்: இதுகள எங்கட பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கவனிக்க வேணும் பாருங்கோ.

வாத்தியார்: அவையள் கவனிக்கிறதுக்கு பொது மக்களும் முறைப்பாடு செய்ய வேணும். பொது மக்கள் முறைப்பாடு செய்தால்தானே அவையளும் கவனம் செலுத்துவினம். இல்லையெண்டால் எல்லாம் ஒழுங்காக நடக்குதெண்டு தான் நினைப்பினம்.

விதானையார்: யாழ்ப்பாண மாநகர சபையின்ர அடுத்த முதல்வர் ஆராம்.

(விதானையார் விசுவலிங்கம் கேள்வி எழுப்பினார். விதானையாரின் கேள்வியோடு ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.)

சாத்திரியார்: நேற்றுத்தானே சனிபகவான் மாறி இருக்கிறார். ஆருக்கு யோகம் கொடுப்பாரோ தெரியல்ல.

சிறாப்பர்: சிலநேரம் கூட்டமைப்பைச் சேர்ந்தவர் வராமல் இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் மேயராக வரக்கூடிய வாய்ப்புகளும் இருப்பதாகக் கேள்வி.

மூப்பர்: எனக்கெண்டால் அப்படித் தெரியல்ல. முன்னணிக்குள்ள பிடுங்குப்பாடுகள் இல்லையெண்டால், மணிவண்ணன் முதல்வராகக் கூடிய வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் முன்னணிக்குள்ள பிரிபாடு என்பதால எல்லாம் இடியப்பச் சிக்கல் தான்.

வாத்தியார்: இங்க எங்கட தமிழ் அரசியலில உள்ளக முரண்பாடுகள் கிரந்தம் முற்றிப் பௌந்திரம் ஆக்கிய நிலையில யல்லோ இருக்குது.

கங்காணி: என்ன வாத்தியார் கிரந்தம் என்கிறியள். என்ன சங்கதி.

வாத்தியார்: இந்தாப் பாருங்க எங்கட பிரச்சினையை ஜெனிவாவில எப்படிக் கையாளப் போகிறம் என்பதில ஒத்த முடிவில்லாமல் இருக்கிறம்.

உண்மையில தமிழ் அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒன்றுபட்டு எப்படியும் ஜெனிவாவில எங்கட பிரச்சினையை உச்சப்படுத்த வேணும்.

ஆனால் பிறகும் கால அவகாசம் தான் கதை எண்டால், தமிழ் மக்களின் எதிர்காலம் அம்போதான்.

பண்டிதர்: நான் ஒண்டு சொல்லுறன். கால அவகாசம் எண்ட பேச்சுக்கு நாங்கள் ஒருத்தரும் இடம் கொடுக்க மாட்டம் என்பதை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களிட்ட சத்தியம் செய்ய வேணும்.

அப்படித் தப்பித் தவறி கால அவகாசம் கொடுக்க நேரிட்டால், எங்கட எம்.பிப் பதவிகளைத் துறப்பம் எண்டும் வாக்குறுதி அளிக்க வேணும்.

(பண்டிதர் பரமலிங்கம் கோபத்தோடு கூறினார். பண்டிதரின் கோபம் ஆலடியை சில நிமிடம் மௌன மாக்கியது.

அந்த மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.)

வாத்தியார்: ஜெனிவாவில இலங்கை அரசாங்கத்திற்குக் கால அவகாசம் கொடுக்கக்கூடாது எண்டதொரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம் என வாத்தியார் கூற, அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**



**யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில கிடங்கு வெட்டுவதைப் பாருங்களேன்**

## பாவப்பட்ட நாடு இலங்கை

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதே பாவ விமோசனமாம்




இது சிங்கள தேசம். பௌத்த நாடு. ஆகையால் யுத்தம்... யுத்தம்... பேரினவாதிகள் கொட்டிய முரசம் நாட்டை அதலபாதாளத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.

இனவாதத் தீயை மூட்டி அரசியல் குளிர் காய்ந்தவர்கள் நாட்டைக் குட்டிச் சுவராக்கியதைத் தவிர கண்டது வேறில்லை.

கடன் சுமை ஒருபுறம். பொருளாதார மந்தம் மறுபுறமாக இருக்க, நாட்டை ஆள்வது எங்ஙனம் என்பதே இப்போதிருக்கின்ற கேள்வி.

ஆம், நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் எகிறிக் கொள்கின்றன.

கூடவே, கொரோனாத் தொற்று தொழில் இழப்பை தந்துவிட, எங்கும் அவலமான நிலைமைகளே சன்னிதம் கொள்வது தெரிகிறது.

உலக வரலாற்றில் அழிந்து போன சாம்ராச்சியங்கள் , இடிந்து போன பேரரசுகள், மண்ணோடு மண்ணாகிவிட்ட மன்னர் பரம்பரைகள் இவற்றுக்குப் பின்னால் இருந்த அதர்மமும் அக்கிரமமும் அநீதிகளும் இன்னமும் கண்டறியப்படாத தொல்லியல்களாகவே இருக்கின்றன.

அதேசமயம் யுத்தத்தின் பாதிப்புக்களில் இருந்து மீண்ட நாடுகள், பஞ்சம் பசியில் இருந்து மேலெழுந்த தேசங்கள், நோய் பிணியில் இருந்து சுதந்திரம் பெற்ற கண்டங்கள் எனப் பிறிதொரு பட்டியலையும் நாம் தொகுத்து நோக்கலாம்.

இங்கு மேற்கூறப்பட்ட மறையானதும் நேரானதுமான பக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையை ஆய்வுக்குட்படுத்தினால்,

உள்நாட்டு மக்களுடன் யுத்தம் நடத்தி தன் தேசத்து மக்களைக் கொன்று குவித்து வெற்றித்திருவிழா நடத்துகின்ற வெறுவிலிகள் நாடு போகின்ற நிலை தெரியாமல் இன்னமும் மார்தட்டுகின்றனர் என்றால், இலங்கையின் எதிர்காலம் ஆரோக்கியமானது என்று எப்படிக் கூறமுடியும்.

அந்தோ! இன்னமும் மக்களின் அழுகுரல் ஓயவில்லை. அவலமாய் பறிக்கப்பட்ட ஆத்மாக்களின் அந்தரிப்பு நீங்கவில்லை. இதுதான் என்றால் இல்லை.

சிறைகளில் வதைபடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் தினந்தோறும் விடுகின்ற பெருமூச்சுக்கள் இந்த நாட்டை எரிக்கவல்ல தீப்பிழம்பாய் அனல் கட்டுகிறது.

இருந்தும் ஆட்சிப்பீடமும் பௌத்த மதபீடமும் நாட்டிற்கு ஏற்படப் போகும் கேட்டை அறியாதவர்களாய் அதிகார ஆசையில்; 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டு வருவதையே தங்களின் மிகப்பெரும் சாதனையாய் பிரகடனப்படுத்தி நிற்கின்றனர்.

மாறாக, பௌத்தபீடம் மதத்தின் பெயரால் தமிழினத்தை வஞ்சித்து பிரித்(து) ஓதுகிறது.

என்னே கொடுமை! நாடு என்பதற்குத் தனி அதிகாரம் தந்த வள்ளுவன்; ஒரு நாட்டின் இயல்பு எத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டும் என்பதைப் பட்டியல் படுத்துகிறான்.

இதனைப் புரியாத பேதைகள் அழுகுரலையும் அவலத்தையும் கண்டுகொள்ளாமல் கர்வத்தின் உச்சியில் நின்று கர்ச்சிக்கின்றனர்.




அன்று ஒருநாள் பாண்டிய மன்னன் மாணிக்கவாசக சுவாமிகளை சிறையில் அடைத்ததனால் வைகை பெருக்கெடுத்து பேரவலம் செய்தது. அப்பாவிகளைச் சிறை வைத்தால் நாடு அவலத்தைச் சந்திக்கும். வறுமை பெருகும். பஞ்சம் மலியும். எங்கும் நோயும் துன்பமும் சூழும் என்பதையே மாணிக்கவாசகரின் சிறையடைப்பு நமக்கு உணர்த்தி நிற்கிறது.

ஆம், தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் படும் வேதனை சொல்லுந்தரமன்று. இப்போது அவர்கள் கொரோனாத் தொற்றுக்கும் ஆளாகித் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இருந்தும் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற நினைப்பு ஆட்சியாளர்களிடம் இம்மியும் ஏற்படவில்லை எனும் போது, இதைவிட்ட கொடுமை வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

சந்தேகத்தின் பேரிலும் உரிய குற்றவாளிகள் கிடைக்கும்வரை நீ சிறையில் இரு என்றபடைத்தரப்பின் தறிகெட்ட நடைமுறையாலும் வருடக்கணக்கில் சிறைத் தண்டனை அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் மனநிலையை அறியமுடியாதவர்களை என்ன என்று சொல்வது.

சிங்களவராய் இருந்தால்- தன்னால் முடிந்த அளவில் பேரினவாதத் தீயை மூட்டி தமிழினத்தின் அழிப்புக்கு அவர் உதவி செய் திருந்தால், மரண தண்டனை பெற்றவராயினும் அவருக்கு மன்னிப்புக் கொடுக்கலாம். போர்க் குற்றம் புரிந்தவராயினும் அவர்களுக்குப் புதுப்பதவி வழங்கலாம்.

ஆனால் தமிழர்கள் என்றால், எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகளாயினும் அவர்களை வருடக்கணக்கில் சிறையில் அடைத்து அவர்களின் வாழ்வை அழிக்கலாம். அதற்குச் சட்டமும் சில தரப்புகளும் ஒத்துழைப்பு வழங்கும் என்றால், இலங்கைக்கு ஏது இனி எதிர்காலம்.

ஆம், பாவம் சூழ்ந்த நாடாகி விட்டது இலங்கை. அந்தப் பாவத்தினின்றும் உடனடிப் பரிகாரம் தேடுவதாயின், தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதே ஒரே வழியாகும்.

**விதுரன்**



# சிறுவர் அரங்கம்

## கழுதையால் கிடைத்த பாடம்



ஒருநாள் முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்தார்.

முல்லா அவர்களே! உங்களுடைய கழுதையை எனக்கு இரண்டு நாட்களுக்கு தயவுசெய்து இரவலாகத் தாருங்கள் இரண்டு நாட்கள் கழிந்ததும் திருப்பி தந்துவிடுகிறேன் என்றார் நண்பர்.

அந்த நண்பர் முன்பும் இரண்டொரு தடவை கழுதையை இரவல் வாங்கிச் சென்றதுண்டு. அப்பொழுதெல்லாம் சொன்ன நாட்களில் அவர் கழுதையைத் தரவில்லை. தவிரவும் கழுதைக்கு சரியான உணவளிக்காமலும் விட்டிருந்தார்.

அதனால் அவருக்குக் கழுதையை இரவல் தரக்கூடாது என்று முல்லா தீர்மானித்து விட்டார்.

நண்பரே! என் கழுதை இப்போது வீட்டில் இல்லை. அதை வேறு ஒருவர் இரவலாகக் கொண்டு சென்றிருக்கிறார் என்று முல்லா கூறினார்.

நண்பர் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட சமயம் முல்லாவின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் கழுதை கத்தும் குரல் கேட்டது.

முல்லா அவர்களே கழுதை வீட்டில்தான் இருக்கிறது போலிருக்கிறதே! யாரோ இரவலாகக்கொண்டு சென்றதாகக் கூறினீர்களே என்று நண்பர் வியப்புடன் கேட்டார்.

முல்லாவுக்குக் கோபம் வந்துவிட்டது. நான் சொன்ன சொல்லை நீர் நம்பவில்லை. ஒரு கழுதையின் சொல்லைத் தான் நம்புகிறீர். என் மீது நம்பிக்கை இல்லாத ஒருவருக்குக் கழுதையை இரவல் தரக்கூடாது என்பதற்காகத்தான் வேறு ஒருவர் அதைக் கொண்டு சென்றார் எனச் சொன்னேன் என்றார்.

நண்பர் அவமானமடைந்து அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார்.

**நீதி: சொல் நாணயம் இருந்தால் உதவி கிடைக்கும். இல்லையேல் உதவி கிடைக்காது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?




**யுத்தம்** நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் இருக்கின்ற நிலைமையைப் பொறுத்து அவ்வப்போது சின்னச் சின்ன முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். அதற்கு ஆங்கிலத்தில் Tactics என்று பெயர்.

இதை வீரர்களுக்கு முறைப்படி தெரிவிப்பது அவசியம். இல்லையென்றால் விபரீத விளைவுகள் ஏற்பட்டு விடும். ஆகவே இந்த பிரத்தியேக சமிக்ஞைகள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

நீண்ட குழலை உடைய ட்ரம்பெட்டும் அந்த சமிக்ஞை சத்தத்தை ஏற்படுத்தும் கருவிகளுள் ஒன்று. அதை வாசிப்பவர் வெற்று மார்புடன், கீழாடை மட்டும் அணிந்திருப்பார். தலையில் விநோதமான வெண்கலக் கவசத்தை அணிந்திருப்பார்.

பார்மீனியோவின் உத்தரவு வெளியான அடுத்த கணம், இந்தக் குழலில் இருந்து பலத்த ஓசை எழுப்பப்படும்.

அப்போது தான் படையின் கடைசி வரிசையில் இருக்கும் வீரர்களுக்கும் காதில் விழும் என்பதால் இந்த ஏற்பாடு.

அதன் பிறகே வீரர்கள் எதிரிகளை நோக்கி தாக்குதலைத் தொடர்வார்கள் இப்போது பார்மீனியோவின் உதட்டசைவுக்காகக் காத்துக் கொண்டிருப்பார். அந்த ஊதுகுழல் வீரர்.

அணி வகுத்து நின்ற எல்லா வீரர்களையும் ஒருமுறை பார்த்தார் அலெக்சாண்டர். என் அன்புக்குரிய வீரர்களே நீங்கள் எல்லாம் உற்சாகமாக இருக்க வேண்டும் நம்முடைய இலக்குகள் கொஞ்சம் உயரமாகத் தோன்றலாம்.

முதலில் அப்படித்தான் தோன்றும். ஆனால் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள். உண்மை புரியும். மலை போன்று தெரியும் இலக்கு மண் மேடு போல மாறும். நீங்கள் தான் அதை சாதிக்கப் போகின்றீர்கள்.

உங்களால் மட்டுமே அத்தனையும் சாத்தியம். தயாராக இருங்கள். வீரர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் விதமாகப் பேசிவிட்டுப் புறப்பட்டார் அலெக்சாண்டர். அவருடைய குதிரை ஓடும்போது முன்பைக் காட்டிலும் வேகமாக நிலம் அதிர்ந்தது.

(தொடரும்)



### அரசு விலகி இருக்கும் ஐ.நா.தீர்மானத்திற்கு கூட்டமைப்பு வால் பிடிப்பது ஏன்?

**நிலா — சுழிபுரம்**

**ஈழ விடுதலைப் போருக்கு எம்.ஜி.ஆர். உதவினாரா?**

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தனது சொந்த மகனாகக் கருதி ஈழ விடுதலைப் போருக்கு உதவியாக 7 கோடி ரூபாவை எம்.ஜி.ஆர். வழங்கியதாகவும் எம்.ஜி.ஆர். இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பும் 40 இலட்சம் பணத்தை விடுதலை புலிகளுக்கு வழங்கியதாகவும் பழ.நெடுமாறன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அதைவிட ஈழத் தமிழரில் மிக அன்பு கொண்டவர் எம்.ஜி.ஆர். ஈழத் தமிழர் சுதந்திரமாக வாழ வேண்டும் என ஆத்மார்த்தமாய் விரும்பியவர் அவர்.

அவரை நினைவுகூர வேண்டியது காலத்தின் தேவை.

**நிவேதி — கொடிகாமம்**

**ஒருவரை ஆதரித்துப் பேசுவது சரியா வியாசரே?**

ஒரு நல்லவர் இன்னொரு நல்லவரை ஆதரித்துப் பேசலாம் தவறில்லை. அதே ஒரு கெட்டவர் ஒரு நல்லவரை ஆதரித்துப் பேசலாம். அதிலும் தவறில்லை.

அதே ஒரு நல்லவர் கெட்டவரை ஆதரித்துப் பேசுவது நீ அற்றது, அறமற்றது.

**சுதன் — கும்பிழான்**

**அரசு விலகி இருக்கும் ஐ.நா.தீர்மானத்திற்கு கூட்டமைப்பு வால் பிடிப்பது ஏன்?**

நடைபெற்ற இன அழிப்பிற்கு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதியை சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும்.

அதற்காய் பிரிந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றாக கைகோர்க்க வேண்டும். கொத்துக் கொத்தாய் மடிந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு நீதி பெற்றுத் தர வேண்டும்.



இல்லையேல் இறந்த அந்த ஆத்மாக்கள் உங்களை மன்னிக்காது என்பதே உண்மையானது.




**லோஜி — கீரிமலை**

**வியாசர் மாமா பிக்போஸ் வெற்றியாளர் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

பிக்போஸ் வெற்றியாளர் யார் என்பதை தீர்மானிப்பது ஓட்டுப் போடும் நீங்கள் அல்ல. அதைத் தீர்மானிப்பது விஜய் ரி.வி. என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

கடந்த பிக்போஸ் சீசனில் இறுதிக்குச் செல்ல வேண்டிய ஈழத்தின் தர்சன் இறுதி நேரத்தில் எவ்வாறு கழற்றப்பட்டார் என்பதை புரிந்து கொண்டால் சரி.

**சிவம் — வடமராட்சி**

**ஊருக்கு உபதேசம் சொல்லும் பல்லி கூழ் பானைக்குள் வீழ்ந்ததாம். இதன் அர்த்தம் என்ன மாமா?**

செய்தி; வீதி விபத்துக்களைத் தடுக்கும் விழிப்புணர்வுக் கூட்டத்தில் பிரசாரம் செய்ய விரைந்து சென்றவர் வீதி விபத்தில் பலியானார்.

இப்படித்தான் பலபேர் பலவிதமாக கடந்து செல்கிறார்கள். இது வெறும் உதாரணமே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**நடுத்தரக் குடும்பத்தின் சுமையை யாரும் புரிந்து கொள்ளாதது ஏன் வியாசரே?**

ஏழை ஏழையாகவே வாழ்கிறான். பணக்காரன் பணக்காரனாகவே வாழ்கிறான். ஆனால் இந்த நடுத்தர குடும்பம் படும்பாடு இருக்கிறதே அதை வார்த்தைகளால் சொல்ல இயலாது.

பணக்காரனுக்கு பணக்காரன் போலவும் ஏழைக்கு ஏழையைப் போலவும் நடப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை நடுத்தர குடும்பமாக இருந்து பார்த்தால் மட்டுமே புரியும்.



### ஈழ விடுதலைப் போருக்கு எம்.ஜி.ஆர். உதவினாரா?

**சயன் — யாழ்ப்பாணம்**

**வாய்ச் சொல்லில் வீரனடி என்பதை இன்றைய காலங்களில் முகப் புத்தகத்தில் பார்க்கக் கூடியதாக உள்ளதே?**

நூறு லைக்கிற்காக கருத்துச் சொல்லும் கந்தசாமிகளின் வீடுகளில் போய்ப் பார்த்தால்தான் தெரியும் ஊருக்கு உபதேசம் செய்யும் வள்ளலை.

ஏதோ இந்த உலகை மாற்றுகிறோம் வெட்டுகிறோம் புடுங்குகிறோம் என்பது போல செயற்படுபவர்களின் எண்ணம் மிகவும் மோசமானதாக இருக்கும்.

கருத்துக் கூறுகின்றோம் என்பதற்காக அடுத்த வீட்டு கதவையும் தாண்டி படுக்கை அறை வரை செல்வது ஏற்கக் கூடியது அல்ல.

இதேவேளை நல்ல சிந்தனைகளை சமூக மாற்றத்திற்காய் இடும் நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமே.

**கேதீஸ் — கீரிமலை**

**தமிழ் உணர்வு இப்போதைய இளைஞரிடம் இல்லாமல் போனது ஏன்?**

பாரிய ஒரு சக்தியால் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு மிகப்பெரிய செயற்றிட்டமிது.

பாரம்பரிய, கலாசாரத்துடன் இறுக்கமாக வாழ்ந்த எமது இனத்தின் இன்றைய நிலையைப் பார்த்தால் வயிறு பற்றி எரிகிறது.

முழுக்காற்சட்டையைப் போட்டு அதை முழங்கால் வரை இழுத்துவிட்டு தலையை குருவிக் கூட்டைப்போல் உயர்த்தி விட்டு தாடி இருக்க மீசையை மளித்துவிட்டு வீதியில் திரிவது எம் இளைஞரா? என்ற கேள்வி எழுந்தே தீரும்.

எமக்குத் தெரிந்த இளைஞனின் கழுத்தில் நஞ்சிருந்தது. தோளில் சுடுகலம் இருந்தது. தலை சீராய் வாரி இழுத்திருந்தது. அவன் வீதியில் காவலுக்காய் நின்றான். இவன் வீதியில் காவாலியாய் நிற்கிறான் அவ்வளவே.

**அன்பு வாசகர்களே!**

**அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

## பணம்



பணம் என்ற போர்வையில்
குணம் எல்லாம் தூங்குது
வரும் என்று வேண்டிட
கலவரமாய்த் தோன்றுது

எடுப்பதை எடுத்து
கெடுத்தனர் வாழ்வை
அவசர உலகில் அவலமாய்ப் பறித்தனர்

உள்ளத்தில் உண்மை ஊமையாய் வாழுது
பொய்யேபொழுதாகப் பூமியில் தவழுது

உழைப்பதைப் பதுக்கினர்
ஊரையே உருவினர் உறவுகளாயினும்
பறியில் கைபோட்டனர்

பணத்தைக்காட்டிப்
பிணத்தையும் எழுப்ப
சீரழிந்து திரியும் சில்லறை மனிதம்

கொடுத்ததை எடுக்க
கொட்டியதோ வார்த்தைகள்
விழிகளோ பிதுங்கிட
விரித்தனர் கைகளை

பி.வாசுகி, கொழும்பு


## போதையற்ற தேசம் வேண்டும்




முளைத்திடும் நாற்றுக்கள் முளையிலே கருகாமல்
விந்தை வியக்க விடியல் பிறக்க
போதையற்ற தேசம் வேண்டும்
குடிகாரத் தந்தையரும் -நற்குணங்கள் அற்ற உறவுகளும்
மாறாத இவ்வுலகில் மலர்ந்ததேனோ?
வீதி ஒரு நூலகமும் விளையாட்டாய் அறிவும்
சிந்தையிலே மாற சிங்காரமாய் ஏற
போதையற்ற தேசம் வேண்டும் விபத்துக்கள் விஸ்தரிக்கும்
விந்தையுலகிற்கு விடைகொடுக்க விண்ணவர் போற்ற
போதையற்ற தேசம் வேண்டும்
விந்தை வியக்க விஞ்ஞானம் பெருக்க
அஞ்ஞானம் ஒழிக்க அறிவைப் பெருக்க
போதையற்ற தேசம் வேண்டும்
வளர்ந்து வரும் விஞ்ஞானம் வானை எட்டித்தொட
பறந்து வரும் துன்பங்கள் படிப்படியாய் குறைய
போதையற்ற தேசம் வேண்டும்
மாறாத இவ்வுலகை மாற்றத் துடிக்கும்
மடிந்த மனங்கள் மறுபடியும் மலர்ந்தெழ
போதையற்ற தேசம் வேண்டும்
*"போதையை ஒழிப்போம்*
*தேசத்தைக் காப்போம்"*

சி.கலையரசி
சிதம்பரா வடக்கு,
வல்வெட்டித்துறை.


## கொடூரமான கொரோனாவே



கொடூரமான கொரோனாவே கொதித்தெழாதே
பழையன கழிதலும் புதியன புகுதலும்
என்றெண்ணி வாழ்ந்துவிட்டோம்
எம் தவறுதான் போலும்...
சற்றுப்பொறுத்துக்கொள்
கொத்தணி அமைக்காதே
புதிய பொருள் கொண்டு
புதுமைச் சொல்லெடுத்து
பழக்கவழக்கங்களைப் பாழாக்கி
இயந்திரமாய்ச் சூழ்ந்திருந்த எம்மை
இலையும் குலையும் அவித்து
ஆற அமர்ந்திருந்து குடிக்க வைத்துவிட்டாய்
உறவுகள் பல சேர்ந்து
பக்குவமாய் வாழ்ந்தால் கோடி நன்மை
என்ற முதுவார்த்தையை
அறுத்தெறிந்தோம்- நீயும்
சினங்கொண்டெழுந்து சபதமிட்டு
குடும்பச் சங்கிலிப் பிணைப்பை
அறுத்தெறிய தாண்டவமாடுகிறாய்...
இறுமாப்போடு பார்க்காதே!
இனி நாம் இயல்பு கொண்டு
இயற்கையாய் வாழ்வோம்
மூதாளர் சொற்களை
மூலமந்திரமாய்க்கொண்டு
முகிழ்த்தெழுவோம்...

*த.ஐங்கரன்*
*கிளி/ பூநகரி ஸ்ரீ.வி.வித்தி*

## மௌனத்தின் தேடல்- 508



## வையகமே பாராட்டும்

பாறாங்கல் உருண்டால்
பதைபதைத்து உயிர்மாய்க்கும்
வாறாக வதைத்துவிடும்
வருந்தாது நின் முயற்சி
வையகமே பாராட்டும் நற்
பேறாக வாழ்ந்திடுவீர்
பெறுக இவ் வையகமே

த.சிவகாமி,
நல்லூர்.

## வெற்றியெனும் கனி

ஏறு முன்னேறு- மானிடா
பாறாங்கல் போல் தடைகள்
வந்தாலும் நம்பிக்கையெனும்
கைகளாலே தகர்த்தெறிந்து விட்டு
நீ முன்னேறிக் கொண்டிரு- மானிடா
வெற்றியெனும் கனி உனக்கு
கிடைப்பது நிச்சயம் மானிடா

*ச.பிரநிதன்*
*மட்டுவில்*

## சவால்கள் மிகையானதே

உலகில் கோடி தடையுண்டு- அதை
எதிர்த்திட உனக்கு பலமுண்டு
வாழும் நாட்கள்
சிறிதாயினும்
எதிர்கொள்ளும் சவால்கள்
மிகையானதே
பிறப்பின் சாபமோ?
என்னவோ?
உச்சந்தலை முதல்
உள்ளங்கால் வரை
உணர்வற்று நிற்கிறேன்-இறைவா
போதும் உம் சிருஷ்டித்தல்

வி.டிலக்ஸன்
யா/தும்பளை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்

## சுமைதாங்கி

உருண்டோடும் உலகில்
சுமைதாங்கும் மானிடத் தலைவா!
பாறாங்கல்லின் பாரத்தை நிறுத்தி
பரிதவிக்கும் மக்களைக் காக்க
பார்போல உருளும் கல்லை
உன் உடற்பலத்தால் நிறுத்தி
உயர்ந்திருக்கும் சுமைதாங்கி நீயல்லவா!

ஆ.பாலமதுஜா
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## சுமைதாங்கி

உன்னால் முடியும் தலை நிமிர
உன் இரு கையும் சுமைதாங்கி இல்லை
உலகமே உன்னை சுமக்கிறது எதிர்த்து நில்
புதிய உலகில் உன்னைச் சுமக்க
சுமைதாங்கி வருவேன்
எதிர்நீச்சல் போட்டு உன்னோடு நானும்

இ.அற்புதமேரி,
கிளிநொச்சி

## மௌனத்தின் தேடல் -509



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வலிமை கொள்

எவனிடத்தில்தான் சுமைகள் இல்லை இந்த உலகில்
சருக்கினால் சிதைவது நான் மட்டுமல்ல என் கனவு என
தெரிந்தும்கூட மனம் சலிப்பை விரும்பக்கூடாது
தகர்த்திடும் ஆயுதமாக மனம் மாறினால்
நம்மை மறைத்த சோம்பல்கூட சாக்கடையில் கிடக்கும்
வலிமைகொள் உனக்கான வழிகள் பல

*நிருஷினி ஆனந்தராஜன்*

## மனிதனே எழுந்திடு

மனிதன் மனிதனாக வாழுமிடத்து
மாநிலத்து துன்பங்கள் யாவும்
மலையளவு உருண்டோடி வந்திட
மனமதை சோர்ந்து தேம்பியிருந்திடாமல்
சோம்பலை விட்டெழுந்து- மானிடா
வீறுநடை போட்டு எழுமின் பணி செய்மின்
எவ்வளவு துன்பமும் உன்னைப் பார்த்து
எட்டிடி தள்ளியே நிற்கும்

ச.செல்வரஞ்சனா
கன்னாகம் கிழக்கு

# அமைச்சர் சரத் வீரசேகரவிற்கு ஒரு மடல்

**தமிழர் என்னவோ ஈனப் பிறவிகள் போல தங்களின் பேச்சு அமைவதும் தமிழர்களுக்கு தீர்வு கொடுக்கக்கூடாது என்பதில் தாங்கள் உறுதியாய் நிற்பதும் ஏன்? என்பதை தமிழர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை என்பதே உண்மை.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அட்மிரல் சரத் வீரசேகரவிற்கு அன்பு வணக்கம்.

தங்களுக்கு கடிதம் எழுத வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. ஆனாலும் நாடு கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கியிருக்கும் இவ்வேளை கடிதம் எழுதினால் அது தங்களிடம் முறையாக வந்து சேராது எனும் எண்ணத்தில் பிற்போடப்பட்டது.

ஆனாலும் கொரோனா அடங்குவதாகத் தெரியவில்லை. அடங்காத கொரோனாவுக்குப் பயந்து தங்களுக்கு எழுதும் கடிதத்தை ஏன் தாமதிப்பான் என்பதற்காக அவசரமாக இக் கடிதத்தை எழுதுகின்றோம்.

கடிதங்களில் பல வகைக் கடிதங்கள் இருப்பதாக சிறு வயதில் படித்த ஞாபகம் இருக்கிறது.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி; கடிதம் எழுதும் கலாசாரத்தையே மாற்றி விட்டது.

இருப்பினும் கடிதத்தின் வகைகளில் தொழில் முறைக் கடிதம், உறவு முறைக் கடிதம் என இரு வகை இருப்பதாக படித்தது இப்போதும் ஞாபகம் இருக்கிறது.

ஆனால் தங்களுக்கு எழுதும் மடல் இதில் எந்தவகைக்குள் அடங்கும் என்பது தெரியவில்லை.

அன்புக்கும் மரியாதைக்குமுரிய மேஜர் ஜெனரல் அட்மிரல் சரத் வீரசேகர அவர்களுக்கு!

ஒரு இனம் தமது இனத்தின் விடிவுக்காக போரிட்டது என்றும் அது பயங்கரவாதம் என்ற போர்வையில் அழிக்கப்பட்டமையையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.


போர் என்றாலே இழப்புகள் அதிகம். இழப்புகளை தவிர்த்து போர் நடத்த முடியாது.

இராணுவ அதிகாரியாக இருந்த தங்களுக்கும் அந்த உண்மை தெரிந்திருக்கும்.

2009 இல். இறுதி யுத்த நேரத்தில் பயங்கரவாதம் அழிக்கப்படுகிறது என்ற போர்வையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையே அறிக்கையிட்டிருக்கிறது.

இதை தாங்கள் முதல் கொண்டு தங்கள் ஆட்சியாளர்கள் வரை ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஏன் என்பதுதான் இன்றுவரை புரியவில்லை.

போரின் உச்சம்; இறந்த தாயின் முலையில் பால் குடித்த பச்சிளம்



குழந்தையின் கதை உங்கள் மனதைத் தைக்காதது ஏன்?

குடிப்பதற்கு நீரின்றி கொட்டும் மழையில் குடைபிடித்து அதில் வடிந்த நீரைக் குடித்த மக்களின் அவலம் தங்களுக்குப் புரியாதது ஏன்?

தாய், தந்தை, தமயன், தமக்கை எல்லோரும் குண்டுபட்டு இறந்துவிட; அந்தக் குருதிக்குள் தத்தளித்த பச்சிளம் குழந்தையின் கண்ணீர் உங்கள் மனதை உருக்காதது ஏன்?

அன்புக்குரிய வீரசேகர அவர்களே!

தங்களின் அண்மைய காலத்து பேச்சுகள் தமிழர் மனங்களை ஆறாத ரணமாய் வாட்டுகின்றது என்பதை தாங்கள் அறிவீர்களா?

தமிழர் என்னவோ ஈனப் பிறவிகள் போல தங்களின் பேச்சு அமைவதும் தமிழர்களுக்கு தீர்வு கொடுக்கக்கூடாது என்பதில் தாங்கள் உறுதியாய் நிற்பதும் ஏன் என்பதை தமிழர்களால் உணர்ந்து கொள்ள முடிய்வில்லை என்பதே உண்மை.

அண்மையில் உங்கள் கருத்தொன்றிற்கு பதிலளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இராணுவ அதிகாரியான தாங்கள் இறுதி யுத்தத்தின் போது குண்டுச்சத்தம் கூட கேட்காத இடத்தில் பணியாற்றியதாக தெரிவித்திருந்தார்.

தமிழர் உரிமை தொடர்பில் அவர்களுக்கு எந்தவித தீர்வையும் வழங்கக்கூடாது என தாங்கள் உறுதியாக இருந்தபோதிலும் தமிழர் கள் தங்களை வசைபாடவோ தங்களின் பெயரை இழுக்குறவோ செய்ய முற்படாமல் அமைதியாக உள்ளனர் என்பதை தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த மடலைப் படிக்கும் போது, தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை நான் கூறவில்லையே என்ற எண்ணம்கூட தங்களுக்கு எழலாம். ஆதலால் தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களில் தாங்கள் கூறிய விடயங்களை தங்களுக்கு நினைவூட்டலாம் என எண்ணுகின்றேன்.

● *விடுதலைப்புலிகளை அழித்தது போல தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் அழித்திருக்க வேண்டும்.*

விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பு என்ற முத்திரையுடன் அழித்தீர்கள். ஆனால் ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களை எடுத்தியம்பும் தமிழ்த் தேசிய கூட் டமைப்பை அழித்திருக்க வேண்டும் என்பதற்குள் இருக்கும் பொருள் என்ன?

● *13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்தே தீருவோம்.*

இலங்கை சிறுபான்மை இனத்தினரின் உரிமைகளை- சுதந்திரத்தை வலுப்படுத்தும் சட்டங்களில் 13 ஆவது திருத்தச் சட்டம் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. சிறுபான்மை தமிழர்களுக்கான உரிமைகளை வழங்கும் அந்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதன் மூலம் எதைக் கொண்டுவர முனைகிறீர்கள்?

● *அதிகாரங்களை ஒருபோதும் மாகாண சபைகளுக்கு வழங்க முடியாது. மாகாண சபை முறைமை ஒழிக்கப்படும்.*

● *பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் "தமிழருக்கு அதிகாரப் பகிர்வு வேண்டும்" எனக் கோருவதை உடன் நிறுத்த வேண்டும்.*

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக பாராளுமன்றம் சென்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் உரிமைசார் விடயத்தில் பேசாமல் யார் அவற்றைப் பேசுவது?

● *தமிழில் தேசிய கீதம் பாடும் போது அரசியலமைப்பு மீறப்படுகிறது.*

சிங்களத்தில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் எனில் அது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது எதற்காக?

● *பிரபாகரனால் முடியாததை செய்ய முயல்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன். அவரை சிறையில் அடைக்கும் காலம் வந்து விட்டது.*

இவ்வாறு என் மனதில் பதிந்த விடயங்களை இங்கு குறிப்பிட்டிருந்தாலும் தங்களின் இனவாதம் சார்ந்த கருத்துக்களை எழுதுவதற்கு இந்தப் பகுதி போதாது என்பதே உண்மை.

அன்புள்ள அமைச்சர் வீரசேகர அவர்களே!

இந்த இடத்தில் ஒன்றை மட்டும் தங்களுக்கு தமிழ் மக்கள் சார்பில் கூற விரும்புகின்றோம்.

நடந்தவை எல்லாம் நடந்து விட்டன. பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒன்றாய், ஒற்றுமையாய் இலங்கைத் திருநாட்டை கட்டியெழுப்புவோம் என ஆட்சியாளர்கள் அழைப்பு விடுக்கும் அதேவேளை, பாராளுமன்றத்திலும் சரி, பாராளுமன்றிற்கு வெளியேயும் சரி தங்களின் கருத்தை அரசாங்கத்தின் கருத்தாகவா? அல்லது தனி மனிதர் சரத் வீரசேகரவின் கருத்தாகவா? எடுத்துக் கொள்வது என்பதில் தமிழ் மக்களுக்கு குழப்பம் இருக்கிறது.

தமிழர்கள் ஏன் ஆயுதம் ஏந்திப் போராடத் தலைப்பட்டனர் என்பதை அறிந்து கொள்ளாமல் அவர்களைத் தோற்கடித்து விட்டோம். இனி அவர்கள் உரிமை பற்றிப் பேசக்கூடாது என்ற தோரணையில் பேசுவது தமிழ் மக்களின் மனங்களைக் காயப்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தமிழர் ஒன்றும் இந்த நாட்டைக் கேட்கவில்லை. இந்த நாட்டின் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளையே கேட்கின்றனர். இதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் போது இனவாதம் பேசுகின்றார்கள். பயங்கரவாதத்தைத் தூண்டுகிறார்கள் என்று கூறி அதைவிட மிக மோசமாக தாங்கள் இனவாதத்தைக் கக்குவது என்பது சிறு பான்மை இனத்தை இன்னும் அடக்கி ஒடுக்குவதாகவே அமையும் என்பதை தங்களிற்கு நினைவு படுத்தி இம்மடலை நிறைவு செய்கிறோம்.

நன்றி வணக்கம்.

**அபிமன்யு**

# வாடகை மனிதர்கள்!



ஒருமுறை, செய்தித் தாளில் வேடிக்கையான ஒரு செய்தி வந்தது! சீனாவில், இரண்டு பேர் சேர்ந்து சேவை நிறுவனம் ஒன்றைத் தொடங்கியுள்ளது குறித்த செய்தி.

என்ன சேவை தெரியுமா? அடுத்தவர் வாங்க வேண்டிய திட்டுகளையும் அடிகளையும் அவர்களுக்காக இந்த நிறுவனத்தார் வாங்கிக் கொள்கிறார்களாம்!

'அட... இப்படியும் ஒரு சேவையா' என்று ஆச்சரியப்படுகிறீர்கள் தானே?

'வாடகைத் தாய்' என்றெல்லாம் கேள்விப்படுவது போல், இவர்கள் வாடகை ஊழியர்கள்!

மேலதிகாரியிடம் இருந்து உங்களுக்குத் திட்டு கிடைக்கப் போகிறது.

ஆனால், திட்டு வாங்கிக்கொண்டு வேலை பார்க்க முடியாது.

அதுசரி... திட்டு வாங்குவதற்கு யாரேனும் ஆசைப்படுவார்களா என்ன? இந்த நிலையில், விடயத்தை இந்த நிறுவனத்தாரிடம் தெரிவித்தால் போதும்... உங்களுக்கான திட்டுகளை இவர்கள் சிரமேற்கொண்டு வாங்கிக்கொள்வார்கள்.

'அடடா... இது மாபெரும் சேவையாயிற்றே!' என்கிறீர்களா?

உண்மைதான்! இதற்குக் கட்டணமும் உண்டு. ஒரு நிமிடத் திட்டுக்கு 585 ரூபாய் வீதம் கட்டணம் வசூலிக்கின்றனர்.

சரி... உயரதிகாரி உங்களை அடிக்க நினைக்கிறார் எனில்?!

கூடுதலாக 135 ரூபாய் செலுத்தினால் போதும் இந்த நிறுவனத்தார் உங்களுக்காக அடியும் வாங்குவார்கள். ஆனால் ஒரு கண்டிஷன்... அடி கொடுக்கும் அதிகாரி பெண்ணாக இருக்க வேண்டுமாம்.

ஷாங்காய் நகரில், ஜாங்லி- சென்ஜுவான் ஆகிய இருவரும் சேர்ந்து நடத்தும் அந்தக் கம்பனியின் பெயர்- வான்டோங்.

நம்மூர்க்காரர் ஒருவர், பூங்காவில் வோக்கிங் சென்று கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்துக்கு மேல் நடக்க முடியாமல், மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க அப்படியே உட்கார்ந்து விட்டார். அப்போது அங்கே வந்த நண்பர், "என்ன... உக்காந்துட்டீங்க?" என்று கேட்டார்.

உடனே நம்மவர், "தினமும் பத்து ரவுண்டு போகணும்னு டாக்டர் சொல்லிருக்காரு. ஏழு ரவுண்டு முடிச்சிட்டேன். இன்னும் மூணு ரவுண்டுதான் பாக்கி!" என்றார்.

"அப்புறமென்ன... மூணு ரவுண்டுதானே..." என்று நண்பர் கேட்க, நம்மவர் என்ன சொன்னார் தெரியுமா?

"மூணு ரவுண்டுதானே? அதான்... வாடகைக்கு ஆள் யாராவது கிடைப்பாங்களான்னு பாக்கறேன்!" என்றாராம்.

இந்த மனோபாவம், இன்றைய ஆன்மிகத்திலும் வந்துவிட்டது தான் வேதனை!

"தம்பி... கோயிலுக்கா போறீங்க?" என்று கேட்டார் ஒருவர்.

"ஆமாம்" என்றான் அந்த இளைஞன்.

உடனே பெரியவர் சொன்னார் "அப்படீன்னா ஒரு உதவி பண்ணுங்க. இந்தக் காசை உண்டியல்ல போட்டிடுங்க. அப்படியே எம்பேருக்கு அர்ச்சனையும் பண்ணிடுங்க!"

இதெப்படி இருக்கு?!

# வெள்ளைக்கோடு வழுக்கும் அவதானம்



-இந்திரபுத்திரன்

வீதி விபத்துக்கள் உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

பொதுவாக வீதி விபத்துக்களுக்குரிய காரணங்களாக அவதானம் இன்மையே முதன்மை பெறுகின்றது.

ஒருவர் சரியான வீதி விதிமுறைகளைப் பின்பற்றி வாகனம் செலுத்தினாலும் எதிரில் வருபவரின் தவறு சரியான முறையில் விதிகளைப் பயன்படுத்தியவரையும் பாதிக்கின்றது என்பதே உண்மை.

அதிலும் இன்றைய இளைஞர்களின் சாகச சாரத்தியம் தங்களையும் வீதியில் பயணிக்கும் மற்றவரையும் பலி எடுக்கும் நிலையிலேயே இருக்கிறது.

வீதி நன்றாக இருக்கின்றது. அதனால்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்பவர்களும் உள்.

வீதி நன்றாக இருக்கிறது என்பதற்காய் வேகமெடுத்து தம்மையும் எதிரில் வருபவரையும் மாய்க்கும் அளவில் இருப்பது ஏற்க முடியாதது.

தற்போது பிரதான வீதிகள் அனைத்தும் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. அதன்படி வீதிச் சமிக்ஞைகளை காட்டும் வீதிக் குறியீடுகளும் வீதிகளில் இடப்பட்டுள்ளதை நாம் அனைவரும் அவதானித்திருப்போம்.

அதிலும் தற்போது வீதியில் இடப்பட்டிருக்கும் வெள்ளைச் சமிக்ஞைக் கோடுகள் உராய்வற்ற விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வீதிகளில் இடப்படும் வெள்ளைக்கோடுகள் வீதியில் இருந்து சற்று மேல்நோக்கியும் உராய்வு இல்லாமலும் இருப்பதை அதன் மேல் வாகனத்தைச் செலுத்தும் போது உணர்ந்து கொள்ள முடியும்.

அந்த வெள்ளைக் கோட்டில் வேகமாகவோ அல்லது சடுதியாக பிறேக் அடித்தாலோ நிலை குலைந்து விபத்தை ஏற்படுத்தும் நிலை உண்டு.

ஏலவே உராய்வு அற்று இருக்கும் அந்தப் பகுதி மழை காலங்களில் மிகவும் மோசமான நிலையினை ஏற்படுத்திவிடுகிறது.

அண்மையில் கே.கே.எஸ்.வீதியில் எனக்கு முன் சென்ற இளைஞர் ஒருவர் அதில் பிறேக் பிடித்து வீழ்ந்து காயமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

எம் அன்பார்ந்த உறவுகளே வீதியில் பயணிக்கும்போது இந்த விடயங்களையும் அவதானியுங்கள். வீதியில் எம் விதி முடிவதைத் தவிர்ப்போம்.

பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்துவோம். ப்ளீஸ்.

# சூட்கேஸை திருமணம் செய்த இளம் பெண்



24 வயதான இளம் பெண் ஒருவர், நீண்ட வருடமாக தான் வைத்திருந்த சூட்கேஸ் பெட்டியை திருமணம் செய்து கொண்ட சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவில், ரெய்ன் ஜார்டன் என்ற 24 வயது இளம் பெண் ஒருவர் சூட்கேஸை திருமணம் செய்துள்ளார்.

மொஸ்கோவைச் சேர்ந்த ரெய்ன் ஜார்டன் என்ற இளம் பெண் ஒரு சிறிய பெட்டியை, தனது கணவர் என்று கூறிக் கொள்கிறார். மேலும், ரெய்ன் ஜார்டன் அந்த சிறிய பெட்டி உடன் திருமணம் செய்து கொண்டபோது அவரது ஒரு நண்பரும் அதற்கு பங்கெடுத்துள்ளார்.

இது குறித்து பேசிய, ரெய்ன் ஜார்டன், சிறுவயதிலிருந்தே பொருட்களின் மீது தனக்கு ஈர்ப்பு உண்டு. இதனால் தான் இந்த சூட்கேஸ் மீது காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும், தன்னுடைய திருமணம் குறித்து பேசியுள்ள இளம் பெண், எனக்கு ஒரு ஆண் மீதும் விருப்பம் இருந்தது. ஆனால் தற்போது சூட்கேஸ் மீது காதல் ஏற்பட்டதால் தான் அதனைத் திருமணம் செய்து கொண்டேன். மனிதர்களைவிட பொருட்களுடன் இருக்கும் போதுதான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# கடல் புறா

## புலியிடம் வேதாந்தம்




அதனால் தூரத்திலிருக்கும் நீங்கள் என்னை இகழலாம்.

என் மக்கள் என்னை இகழ்வதில்லை. உங்கள் நாட்டுப் பழமொழியொன்றைக் கேட்டிருக்கிறேன். புலியிடம் வேதாந்தம் பேசிப் பயனில்லையென்று சொல்கிறார்கள். நாகரீகமற்றவர்களுக்கு வாள் ஒன்றுதான் பதில் சொல்ல முடியும் என்று திட்டமாக அறிவித்தான் அகூதா.

அவன் சொன்னதில் உண்மைகள் பல இருப்பதை உணர்ந்தான் அநபாயன். அகூதாவை எத்தனை பிசகாக மதிப்பிட்டுவிட்டோம் என்பதையும் புரிந்து கொண்டதால் தன் பெருந்தன்மையைக் காட்ட முற்பட்ட அநபாயன் ஆசனத்தினின்றும் எழுந்திருந்து " சீனர் தலைவரே! உங்கள் சரிதம் என் மனத்தைத் தொடுகிறது. உங்களிடம் எங்களை ஒப்படைத்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள்" என்றான்.

"சொல்லுங்கள் அநபாயரே!" என்றான் சீனக் கடலோடி.

"நீங்கள் விலைக்கு வாங்கிய இரு தமிழர்களையும் எங்களுடன் அனுப்ப வேண்டும். நீங்கள் செலுத்திய பொற்காசுகளை.. "அநபாயனை இடைமறித்த அகூதா, "வேண்டாம் தரவேண்டாம். அவர்களைக் கூடவே அழைத்து வந்திருக்கிறேன். இதோ வரவழைக்கிறேன்" என்றபடி சீன பாஷையில் ஏதோ சில வார்த்தைகளைக் கூறினான்.

அடுத்த விநாடி வெகு வேகமாக அந்த அறையை விட்டு வெளியே நடந்த அமீர், சில விநாடிகளுக்கெல்லாம் அந்த இரு தமிழருடன் திரும்பி வந்தான். வந்த தமிழர் மட்டுமல்ல உள்ளே இருந்தவர்களும் ஒருவரைப் பார்த்து ஒருவர் பிரமித்து விழித்தனர். உண்மையில் சீனக் கடலோடி பெரும் மந்திரவாதியாககத்தானிருக்க வேண்டுமென்று இளையபல்லவன் நினைத்தான்.

அநபாயன் அப்படி நினைக்கவில்லை. அகூதாவுக்குத் தாங்கள் எத்தனை தூரம் கடமைப்பட்டுவிட்டோம் என்ற பெரும் சுமைதான் அநபாயனின் இதயத்தில் ஏறிக்கொண்டது.

### பூர்வாங்கம் ஒரு கதை

சீனக் கடலோடியின் இதழ்களிலிருந்து சிதறிய இரண்டொரு சீனச் சொற்களைக் கேட்டதுமே வெகு துரிதமாக வெளியிலோடிய அரபு நாட்டு அமீர் இரண்டொரு விநாடிகளுக்கெல்லாம் அழைத்து வந்த இரண்டு தமிழர்களைக் கண்டதும் அறையிலிருந்து அநபாயன், இளையபல்லவன், காஞ்சனாதேவி ஆகிய மூவரும் பிரமிப்பின் எல்லையை எய்திய காரணத்தாலும், வந்த தமிழர்களும் வியப்பின் வரம்பை எட்டிவிட்டதால் திருதிருவென விழித்து வாயடைத்து நின்றதாலும், சில விநாடிகள் அந்த அறையில் மௌனமே நிலவிக் கடந்தது.

பாலூர்ப் பெருந்துறையின் மூன்று நாள் நிகழ்ச்சிகளில் சிக்கிய அந்த ஐவரும் தாங்கள் இப்படி எதிர்பாராத விதமாகத் திடீரென அரபு நாட்டு வணிகனான அமீரின் உள்ளறையில் கூடும் சந்தர்ப்பம் ஏற்படுமென்றோ, அந்தச் சந்தர்ப்பமும் ஒரு சீனக் கொள்ளைக்காரனால் கிடைக்குமென்றோ தினையளவும் நினைக்காததால் அவர்கள் மனங்களில் பற்பல விதமான எண்ணங்கள் பாய்ந்து பெரும் ஆறுகளாக ஓடிக் கொண்டிருந்தன.

அந்த எண்ணங்களுக்கு உடனடியாக உருக்கொடுத்து சொற்களை உதிர்க்கும் சக்தியை அந்த ஐவருமே இழந்திருந்ததைக் கவனித்ததால், ஏற்கனவே முகத்தில் தவழ்ந்து கிடந்த புன்னகை நன்றாக விகசிக்கும் படி தன் இதழ்களை விரிவடையச் செய்த சீனக் கடலோடியே மெள்ள உரையாடலைத் தொடங்கி "இந்த இரு தமிழரையும் உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கும் பாக்கியம் எனக்கில்லை என்பதை உணர்ந்து கொண்டேன் அதுவும் ஒரு காரியத்திற்கு நல்லதுதான். அபாயமான பணிகளில் ஈடுபடும்போது அதில் ஈடுபடுபவர்களுக்கு முன் பரீட்சயம் இருந்தால் அதுவே ஒரு பெரும் பலம்" என்று கூறி அநபாயனையும் மற்ற இருவரையும் தன் சிறு விழிகளால் நோக்கினான்.

அநபாயனோ இளைய பல்லவனோ இதற்குப் பதில் சொல்லாமல், வந்த இரு தமிழர்களையும் உற்று நோக்கியதிலேயே சில விநாடிகள் முனைந்ததல்லாமல் பிறகு பேசத் தொடங்கிய போதும், அகூதாவிடம் பேச்சுக் கொடுக்காமல் அந்த இரு தமிழர்களிடம் சம்பாஷணையைத் தொடங்கவும் செய்தார்கள். முதல் முதலில் பேசத் தொடங்கிய சோழர் குல இளவல், "வியப்பைத் தரும் சந்திப்பு இது" என்றான் அந்த இரு தமிழரையும் நோக்கி.

அநபாயன் பேசத் தொடங்கிய பின்பும் பேசும் திறனை இழந்திருந்த தமிழர் இருவரும் பதில் சொல்லத் திராணியில்லாத காரணத்தால், "ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தனர்.

அடுத்து எழுந்த அநபாயன் சொற்களில் கருணையோடு சீற்றமும் சிறிது கலந்தொலித்தது. "நீங்கள் கலிங்கக் காவலரிடமிருந்து விடுதலையடைந்து வந்திருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது" என்று கூறியபோது அவன் குரலில் கனிவும் கனலும் கலந்து கிடந்தாலும் சொற்களை உதிர்த்து மூடிய அவன் உதடுகளில் மட்டும் கடுமை தெளிவாகத் தெரிந்தன.

அநபாயன் சொற்களில் கலந்தொலித்த மாறுபட்ட உணர்ச்சிகளால் ஓரளவு சுரணை பெற்ற இந்த இரு தமிழர்களில் ஒருவன், "இளவரசர் மகிழ்ச்சியில் ஓரளவு வருத்தமும் கலந்திருப்பதாகத் தெரிகிறது" என்று மிகத் தாழ்மையாகவும், அந்தத் தாழ்மையிலும் சற்று ஏளனம் கலந்து தொனியிலும் பதில் சொன்னான்.

அந்தத் தமிழன் சொன்ன பதில் காஞ்சனாதேவிக்கோ அமீருக்கோ வியப்பாயிருந்திருக்கலாம். ஆனால் அந்தத் தமிழனை நன்கு அறியும் வாய்ப்புப் பெற்ற அநபாயனுக்கோ ஒரு இரவில் சில நிமிஷங்களே அறியும் வாய்ப்பை அடைந்திருந்த இளைய பல்லவனுக்கோ எந்தவித வியப்பையும் கொடுக்காததால் இருவரும் அவனைச் சற்றுக் கோபத்திற்கும் இளைய பல்லவன் கொண்ட சீற்றத்துக்கும் பெருவித்தியாசமிருந்தது.

அநபாயன் கொண்ட சினம் பாலூர்ப் பெருந்துறையை விட்டுக் கடாரத்து இளவரசியையும் அவள் தந்தையையும் காப்பாற்றி, சோழ நாடு அனுப்புவதைப் பொறுத்திருந்தால், அத்தகைய பொறுப்பில் பங்கு கொள்ள வேண்டிய இரு தமிழரும் அஜாக்கிரதையால் எதிரிகளிடம் சிக்கிக் கொண்டார்களே என்ற நினைப்பால் அவன் உள்ளம் பொங்கிக்கொண்டிருந்தது.

ஆனால் இளையபல்லவன் கோபமோ, பாலூர்ப் பெருந்துறையில் தான் கால்வைத்த நாளன்றே துணிவைப் பெரிதும் காட்டிய அந்தச் சுங்க அதிகாரி, அந்தத் துணிவையும் இடக்காகப் பேசும் தன்மையையும், தான் அடிபணிய வேண்டிய அநபாயனிடமே காட்டுகிறானே என்ற எண்ணத்தால் கிளைத்தெழுந்தது.

அதன் விளைவாக உக்கிரமான பார்வையொன்றைச் சுங்க அதிகாரிமீது வீசிய இளைய பல்லவன், "தமிழகத்தின் குடிமகனான நீர் இளவரசரிடம் பேச வேண்டிய முறை இது அல்ல" என்றான். குரலில் அந்த உக்கிரம் உடுருவி ஒலிக்க.

இளையபல்லவன் சீற்றமும், பேச்சும் கோபத்தை விளைவிப்பதற்குப் பதிலாக சுங்க அதிகாரிக்குச் சிரிப்பையே கொடுத்தாலும், அதை அவன் வெளிக்குக் காட்டாமல் "சோழ நாட்டுக் குடிமகன் இப்பொழுதும் சீன நாட்டு அடியை" என்று கூறித் தன் உண்மை நிலையை மிகுந்த விஷமத்துடன் இளைபல்லவனுக்கு நினைப்பூட்டினான்.

இதைக் கேட்டதும் இளையபல்லவன் கோபம் அத்துமீறிக் கொண்டிருப்பதைக் கடைக்கண்ணால் கவனித்த அநபாயன், அவனைப் பேசாமலிருக்கும்படி சைகை செய்துவிட்டுச் சுங்க அதிகாரியை நோக்கி "கண்டியத் தேவரே! உம்மையும் இந்தக் கூலவாணிகன் சேந்தனையும் இங்கு சந்தித்தில் எனக்கேற்பட்டுள்ள வியப்பின் காரணம் உமக்குப் புரிகிறதா, இல்லையா?" என்று சற்று கடுமையுடன் வினவினான்.

(தொடரும்...)

# மெதூசிலா நட்சத்திரம் பிரளய வெடிப்பின் முன்தோன்றியதா?


## தொடரும் மர்மங்கள்

**ஒவ்வொரு மூலையிலும், மனிதனால் புரிந்துகொள்ள முடியாத ஏதோவொரு மர்மத்தையோ, விந்தையையோ ஒளித்து வைத்திருக்கிறது பூமி. அவற்றைப் புரிந்துகொள்ள ஆயுட்காலம் போதாது. பூமியில் மட்டும்தான் மர்மங்களா என்றால் இல்லை, பூமி தாண்டி பெருவெளியாக விரிந்திருக்கும் பிரபஞ்சமோ மர்மத்தின் குவியல் எனலாம். இரவு வானைக் கண்களை உயர்த்திப் பார்க்கும்போது தெரியும் ஒவ்வொரு பொருளும், மனிதனால் கற்பனை செய்ய முடியாத புதிராகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட புதிர்களில் ஒன்றை நோக்கியே இம்முறை நம் பயணம் தொடங்குகிறது. வானியல் விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுகொண்ட மாபெரும் விந்தை அது. எந்தவகைக் குழப்பம் தோன்றினாலும், அதற்கான விடையைக் கோட்பாடுகளாகவாவது வரையறுத்து விடுபவர்கள் விஞ்ஞானிகள். ஆனால், இந்த மர்மத்துக்கான பதிலோ, தெளிவோ எந்தவிதத்திலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படியான அறிவியல் மர்மம் ஒன்றையே நாம் பார்க்கப்போகிறோம். விண்வெளியில் றொம்ப தூரம் போக வேண்டும். நீங்கள் தயார் தானே?**

வானியல் ஆராய்ச்சியாளர்களிடம் நடைமுறை ஒன்று உண்டு. புதிதாகக் கண்டுபிடிக்கும் நட்சத்திரங்கள், காலக்ஸிகள் ஆகியவற்றுக்கு புராதன எகிப்து, கிரேக்கக் கடவுள்கள் மற்றும் பிற கடவுள்களின் பெயர்களை வைப்பது வழக்கம். பல காலக்ஸிகளை ஒன்றிணைத்து, மகா பெரிய காலக்ஸி தொகுப்பு ஒன்றுக்கு (**Supercluster**), இந்துக் கடவுளான சரஸ்வதியின் பெயரை வைத்திருக்கிறார்கள்.

4,000 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைதூரத்தில், வீணையிசைத்துக் கொண்டிருக்கிறாள் சரஸ்வதி. அதுபோலவே, 200 ஒளியாண்டுகள் தூரத்திலிருக்கும் ஒரு நட்சத்திரத்துக்கு, 'மெதூசிலா' (**Methuselah**) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் பெயரை ஒரு காரணத்துக்காகவே அந்த நட்சத்திரத்துக்கு வைத்திருக்கிறார்கள். அந்த நட்சத்திரம், நம் சூரியக் குடும்பம் இருக்கும் அதே பால்வெளி மண்டலமான, மில்கிவே காலக்ஸியில்தான் இருக்கிறது. என்ன காரணத்துக்காக 'மெதூசிலா' என்று பெயர் வைத்தார்கள் தெரியுமா?

பைபிளில் சொல்லப்பட்ட, தீர்க்கதரிசியான 'நோவா' என்பவரை நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். 'நீரினால் பூமியை அழிப்பதற்குக் கடவுள் ஆயத்தமானபோது, அவரின் கட்டளைப்படி கப்பலொன்றை அமைத்து, ஜோடி ஜோடியாக உயிரினங்களைக் கப்பலில் ஏற்றிக் காப்பாற்றியவர் நோவா' எனும் பைபிள் கதையைப் படித்திருப்பீர்கள். நோவாவின் அப்பாவான லாமெக்கின் அப்பாதான் 'மெதூசிலா.' மனித வரலாற்றிலேயே அதிக காலம் உயிர் வாழ்ந்தவர் மெதூசிலாதான் என்று பைபிள் குறிப்பிடுகிறது. 969 ஆண்டுகள் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. அதனாலேயே, அந்த நட்சத்திரத்துக்கும் 'மெதூசிலா' என்று பெயரிட்டிருக்கிறார்கள். அவ்வளவு பழைமையான நட்சத்திரம் அது. 'நட்சத்திரமொன்று பழைமையாக இருப்பதில் அப்படியென்ன மர்மம் இருந்துவிடப் போகிறது?' என்று நீங்கள் நினைக்கலாம்.



தொடர்ந்து படியுங்கள். அதற்கு முன்னர் இன்னுமொரு முக்கியமான தகவல். ஒரு மரம் 4,500 ஆண்டுகளுக்கும் மேலாக நின்றுகொண்டிருக்கிறது என்றால் உங்களால் நம்ப முடியுமா? நம்பித்தான் ஆக வேண்டும். கலிபோர்னியாவில், 4,852 ஆண்டு வயதுடைய மரமொன்று இருக்கிறது. இதுதான் பூமியிலேயே அதிக வயதுடைய மரம். அதனால் இந்த மரத்தையும் 'மெதூசிலா மரம்' என்றே அழைக்கிறார்கள். இனி, மெதூசிலா நட்சத்திரத்தில் என்ன மர்மம் ஒளிந்திருக்கிறது என்று பார்த்துவிடலாம்.

சூரியன் ஒரு நட்சத்திரம் என்பது உங்களுக்குத் தெரியும். சூரியனுக்கு அடுத்ததாக இருக்கும் நட்சத்திரம், 'ஆல்பா சென்டாரி' (**Alpha Centauri**). இது சூரியனிலிருந்து நான்கு ஒளியாண்டுகள் தூரத்தில் இருக்கிறது. 'எல்லாம் சரிதான், அது என்ன ஒளியாண்டு" என்கிறீர்களா? பிரபஞ்சத்தில் அதிகமான வேகத்தில் செல்லக்கூடியது ஒளிதான். ஒரு நொடியில் மூன்று இலட்சம் கிலோ மீற்றர் செல்லும். சரியாக கவனியுங்கள். மணிக்கல்ல, நொடிக்கு. அப்படியெனில், ஓர் ஆண்டில், ஒளி எவ்வளவு கிலோ மீற்றர்கள் செல்கிறது என்று கணித்து வருவதே, 'ஒளியாண்டு' தூரம். அதாவது, 9,460,000,000,000 கி.மீ அளவைக்கொண்டது. இதுபோல, நான்கு மடங்கு தூரத்தில் அல்பா சென்டாரி நட்சத்திரம் இருக்கிறது. சூரியனுக்கும் அதற்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள்.

இது போன்று 100 பில்லியன் நட்சத்திரங்களை உள்ளடக்கியது மில்கிவே காலக்ஸி. மில்கிவே காலக்ஸிபோல 200 பில்லியன் காலக்ஸிகளைக்கொண்டது பிரபஞ்சம். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள நட்சத்திரங்கள், அவை கணக்கிடவே முடியாத பெரிய தொகை. பூமியின் அனைத்துக் கடற்கரைகளிலும் உள்ள மணல்துகள்களின் எண்ணிக்கையைவிட, பிரபஞ்சத்தில் இருக்கும்நட்சத்திரங்கள் அதிகம். அந்த நட்சத்திரங்கள், பல ஒளியாண்டுகள் இடைவெளியுடன் ஒன்றையொன்று தள்ளி இருக்கின்றன.

அப்படிப் பார்க்கும்போது, ஒட்டுமொத்தப் பிரபஞ்சமும் எவ்வளவு பிரமாண்டமானது என்பது புரிகிறதல்லவா? பிரபஞ்சம், அவ்வளவு பெரியதாக இருந்தாலும், ஆரம்பத்தில் ஒரு குண்டூசி முனையளவுடைய சிறிய புள்ளியாகவே இருந்திருக்கிறது. அதன்பின்னர்தான் பிரமாண்டமாக விரிவடைந்தது என்கிறார்கள். அதாவது, 'பிக்பேங்' (**Bigbang**) எனும் தவிர்க்க முடியாத பெருவெடிப்பால், அந்தச் சிறியபுள்ளி பேரண்டமாக விரிவடைந்திருக்கிறது.

அந்தப் பெருவெடிப்பு, கிட்டத்தட்ட 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததாகவும் கணித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். ஆனால், அதே சமயத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் இன்னொரு சம்பவத்தை அறிந்திருக்கமாட்டீர்கள். விஞ்ஞானிகளையே தலையைச் சுற்றவிட்டு அலைய வைத்திருக்கிறது அந்தச் சம்பவம்.

பிக்பேங் பெருவெடிப்பின்போது, சிறிய புள்ளியாகப் பிரபஞ்சம் ஒடுங்கியிருந்தது. அப்படியானால், பிக்பேங்குக்கு முன்னர் என்ன இருந்தது?' எனும் கேள்வி, பொதுவாகக் கேட்கப்படுகிறது.

'பிக்பேங்குக்கு முன் என்று எதுவுமே இல்லை' என்பதே விஞ்ஞானிகளின் 'பதில். எந்த கணத்தில் பிக்பேங் பெருவெடிப்பு நடந்து, பிரபஞ்சம் விரிந்ததோ, அந்த கணத்திலிருந்து தான் காலமும், இடமும் உருவாகின என்கிறார்கள். அதனால், பிக்பேங்குக்கு முன்னர் என்ற கேள்விக்கே அர்த்தம் கிடையாது.

அப்போதுதான், காலமோ, இடமோ இருக்கவில்லையே. 'காலம்' என்ற ஒன்று இல்லாதபோது, 'அதற்கு முன்' என்று காலத்தைக் குறிக்கும் வார்த்தைக்கும் அர்த்தமில்லை. பிக்பேங் கணத்திலிருந்து பிரபஞ்சம் வேகமாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. இன்றுவரை, 13.8 பில்லியன் ஆண்டுகளாக விரிவடைதலை அது நிறுத்தவேயில்லை. சொல்லப்போனால், ஒவ்வொரு விநாடிக்கும் அதன் வேகம் அதிகரித்துக்கொண்டே போகிறது. நீங்கள் இதைப் படித்துக்கொண்டிருக்கும் இந்தக் கணத்திலும் அது விரிவடைந்தபடியேதான் இருக்கிறது.

பிரபஞ்சம் விரிவடையும் வேகமுடுக்கத்தை (**Acceleration**) ஆராய்ச்சியாளர்கள் கணித்திருக்கிறார்கள். மிகவும் சக்திவாய்ந்த தொலை நோக்கிக் கருவிகளினூடாக, விண் வெளியின் விளிம்பில் தெரியும் காலக்ஸிகள் நகர்வதையும், அவற்றிலிருந்து வரும் ஒளியையும்கொண்டு வேக முடுக்கத்தை கணிக்கிறார்கள். இதன் அடிப்படையில்தான் பிக்பேங் பெருவெடிப்பு, 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததாகவும் கணித்தார்கள். எல்லாமே சரியாகத்தான் போய்க்கொண்டிருந்தன. ஆனால், மெதூசிலாவை ஆராய ஆரம்பித்த போதுதான் தலைகீழானது.

'மெதூசிலா' நட்சத்திரத்தின் பெயர், '**HD140283**' என்பது. 'லிப்ரா' (**Lybra**) நட்சத்திரக் கூட்டங்களில் ஒன்றாக இருக்கும் நட்சத்திரம் அது. ஜோதிடத்தில், 'துலாம்' இராசியென்று சொல்வார்களல்லவா... அவற்றில் ஒன்று.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அந்தமான் காதலி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : கே.ஜே.ஜேசுதாஸ், வாணிஜெயராம்



நினைவாலே சிலை செய்து
உனக்காக வைத்தேன்
திருக்கோவிலே ஓடி வா ஆ...
திருக்கோவிலே ஓடி வா...
நினைவாலே

நீரின்றி ஆறில்லை நீயின்றி நானில்லை
நீரின்றி ஆறில்லை நீயின்றி நானில்லை
வேரின்றி மலரே ஏதம்மா
வேரின்றி மலரே ஏதம்மா
நினைவாலே

ஐயா உன் நினைவே தான்
நான் பாடும் ராகங்கள்
அப்போதும் இப்போதும் தப்பாத தாளங்கள்
ஐயா உன் நினைவே தான்
நான் பாடும் ராகங்கள்
அப்போதும் இப்போதும் தப்பாத தாளங்கள்
கண்ணீரிலே நான் தீட்டினேன்
கன்னத்தில் கோலங்கள்...
கன்னத்தில் கோலங்கள்

செந்தூர பந்தம் நிலையாகும் வண்ணம்
செந்தூர பந்தம் நிலையாகும் வண்ணம்
சம்சாரத் தேரில் நானேறி வந்தேன்
திருக்கோவிலே ஓடி வா
ஆ.. திருக்கோவிலே ஓடி வா
நினைவாலே

முல்லைக்கு குழல் தந்த
பெண்மைக்கு பெண்மை நீ
பிள்ளைக்கு தோள் தந்த
அன்னைக்கு அன்னை நீ
முல்லைக்கு குழல் தந்த
பெண்மைக்கு பெண்மை நீ
பிள்ளைக்கு தோள் தந்த
அன்னைக்கு அன்னை நீ
அதிகாலையில் நான் கேட்பது
நீ பாடும் பூபாளம்
என் கண்கள் ரெண்டும் பல்லாண்டு பாடி
என் கண்கள் ரெண்டும் பல்லாண்டு பாடி
செவ்வானமானேன் உனை தேடித் தேடி
திருக்கோவிலே ஓடி வா

ஆ... திருக்கோவிலே ஓடி வா
நினைவாலே சிலை செய்து
உனக்காக வைத்தேன்
திருக்கோவிலே ஓடி வா
ஆ...
திருக்கோவிலே ஓடி வா...

# 56 ஆயிரம் ஆண்டுகள் புதைந்து கிடந்த ஓநாய்



கனடாவின் வடக்குப் பகுதியில் மம்மி என்று கூறப்படும் வகையில் பதனப்பட்டு புதைந்து கிடந்த ஓநாய்க்குட்டி 56 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நிரந்தரப் பனிப் பாறைகளில் பல பத்தாயிரம் ஆண்டுகளுக்கு புதைந்து கிடந்த இந்த பெண் ஓநாய்க்குட்டியின் மம்மி போல பதனமாகியிருந்த உடலை தங்கம் தேடும் ஒருவர் கண்டு பிடித்தார்.

யூகான் மாகாணத்தில் டாசன் மாநகருக்கு அருகே 2016 ஆம் ஆண்டு இந்த குட்டி கண்டுபிடிக்கப்பட்டது.

பிறகு அந்தக் குட்டிக்கு ஜுர் என்று பெயரிடப்பட்டது. ஜுர் (Zhur) என்றால் அப்பகுதியின் உள்ளூர் மக்கள் மொழியில் ஓநாய் என்று பொருள்.

இதுவரை அறியப்பட்ட ஓநாய் மம்மிகளிலேயே மிகவும் முழுமையாக கிடைத்துள்ளது இது தான் என்கிறார்கள் விஞ்ஞானிகள். காரணம், அதன் தோல் முடி, பல் ஆகியவை சிதையாமல் அப்படியே உள்ளன.

பலவித தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அந்த விலங்கின் வயது, உணவு, எதனால் இறந்திருக்கக் கூடும் என்பது உள்ளிட்ட அதன் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை ஓர் ஆய்வுக்குழு கண்டு பிடித்தது.

Current Biology journal என்ற சஞ்சிகையில் இந்த கண்டுபிடிப்பு வெளியானது. அந்தக் குட்டியும் அதன் தாயும் சாலமோன் மீன் போன்ற நீர் வாழ் வளங்களை உண்டு வாழ்ந்திருக்கலாம் என்று அந்த ஆய்வு காட்டுகிறது.

அந்த ஓநாயின் உடலில் இருந்த டி.என்.ஏ தரவுகளையும் அதன் பல் எனாமல் பகுப்பாய்வையும் ஒப்பிட்டு 56 ஆயிரம் முதல் 57 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அது வாழ்ந்து இறந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

அந்த உடலை எக்ஸ்ரே செய்து பார்த்ததில் இறக்கும் போது அதன் வயது 6 முதல் 8 வாரங்கள் இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

யூகோன் அல்லது அருகில் உள்ள அலாஸ்காவில் ஓநாய் புதை படிவங்கள் கிடைப்பது ஒப்பீட்டளவில் சாதாரணம்தான் என்று குறிப்பிடும் அந்த ஆய்வு, பெரிய பாலூட்டிகளின் புதைபடிவங்கள் கிடைப்பதுதான் அரிது என்று குறிப்பிட்டுள்ளது.

"அந்த ஓநாய்க்குட்டி தான் வாழ்ந்த குகை இடிந்து விழுந்ததால் உடனடியாக இறந்திருக்கலாம் என்று கருதுகிறோம்" என்று அந்த ஆய்வை தலைமை வகித்து நடத்திய பேராசிரியர் ஜூலி மச்சன் கூறுகிறார். இவர் டெஸ் மாய்ன்ஸ் பல்கலைக் கழகத்தின் உடற்கூறியல் மற்றும் தொல்லுயிரியல் பேராசிரியர் ஆவார்.

அந்தக்குட்டி பட்டினி கிடக்கவில்லை, இறக்கும்போது அதன் வயது 7 வாரம் என்று தங்கள் தரவுகள் காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

# மெதூசிலா நட்சத்திரம்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிச்சமே இல்லாத, மங்கிப்போன நீலநிற நட்சத்திரம். அதை ஆராயும்போது, அதன் வயதையும் கணித்தார்கள். வந்த விடையைப் பார்த்து தலையே சுற்றிப்போனது. 16 பில்லியன் ஆண்டுக்கு முன்னரே அந்த நட்சத்திரம் உருவாகியிருக்கிறது என்று காட்டியது. சகலரும் குழம்பிப்போனார்கள்.

பிக்பேங் நடைபெற்றே 13.8 பில்லியன் ஆண்டுகள்தான் ஆகின்றன. இது எப்படி 16 பில்லியன் வயதுடையதாக இருக்க முடியும்? ஒட்டுமொத்த வானியல் ஆராய்ச்சிகளும் சிதைந்து போய்விடும்.

பல விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அதைப்பற்றி விரிவாக ஆராய முனைந்தார்கள். அந்த நட்சத்திரத்தை கணிப்பதில் ஏதோவொரு தவறைச் செய்கிறோம் என்ற எண்ணம் அனைவரிடமும் இருந்தது. மிகவும் துல்லியமான கணிப்பாக ஒரு முடிவு வந்தது. அது, 14.5 பில்லியன் ஆண்டுகள் பழைமையானது என்று காட்டியது. அப்போதும் பிரபஞ்ச ஆரம்பத்துக்கு முன்னர் தோன்றியதாகத்தான் கணிப்பு இருந்தது.

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். பிக்பேங் கணத்துக்கு முன்னால் எதுவும் இருந்திருக்க முடியாது. விஞ்ஞானிகள் அந்த விடயத்தில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். பிக்பேங் வெடிப்பின் பின்னர், பல மில்லியன் ஆண்டுகளுக்கு அப்புறம்தான் நட்சத்திரங்களே தோன்றியிருக்கின்றன. எப்படிப் பார்த்தாலும், அந்த நட்சத்திரம் 14.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கவே முடியாது.

இது எப்படிச் சாத்தியம்... எங்கு தவறு செய்கிறோம்? இறுதியாக, ஜேர்மனியிலுள்ள 'மாக்ஸ் பிளாங்க்' விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இதில் இறங்கி, அந்த நட்சத்திரத்தின் வயதை கணித்தது. எவ்வளவோ முடிந்த வரை கழித்துப் பார்த்தாலும் இறுதி முடிவாக, 14.27 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரானது என்ற முடிவே வந்தது.

எப்படியானாலும் பிரபஞ்சத் தோற்றத்துக்கு, 200 மில்லியன் ஆண்டுகளுக்கும் அதிகமான வயதை அந்த நட்சத்திரம் கொண்டது என்றுதான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. மொத்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்து நட்சத்திரங்களுக்கும் மூத்த நட்சத்திரமாக, முதல்வனாக, `HD 140283' இருக்கிறது. அதனாலேயே, 'மெதூசிலா' என்ற பெயரும் கிடைத்தது. ஒருவேளை பிரபஞ்சத்தின் ஆரம்ப கணத்தை, 13.8 பில்லியன் ஆண்டுகளென்று தவறாக கணித்துக் கொள்கிறோமோ என்றும் நினைத்தார்கள். ஆனால், அந்த ஆராய்ச்சியில் இறங்கும் போது, பிரபஞ்சம் விரிவடையும் வேகம், முன்னர் கணித்ததை விட மேலும் அதிகம் என்று தெரியவந்தது.

அப்படிப் பார்க்கும்போது, பிரபஞ்சத்தின் ஆரம்பம், 13.8 பில்லியன் ஆண்டுகள் என்பதைவிட, 12 பில்லியன் ஆண்டுகள் எனும் கணக்கைத் தொடுகிறது. அது மேலும் குழப்பத்தையே தோற்றுவித்தது. எந்த கணிப்பும், 'மெதூசிலா', பிரபஞ்சத்துக்குப் பின்னரான நட்சத்திரம் என்பதை இன்றுவரை நிரூபிக்கவில்லை.

மெதூசிலாவின் பிறப்பு, பெரும் மர்மமாகவும் மாபெரும் சவாலாகவும் வானியற்பியலாளர்களுக்கு அமைந்துவிட்டது. இதுவரை இப்படியானதொரு சவாலை விஞ்ஞானிகள் சந்திக்கவில்லை.

இன்றுவரை அதற்கான எந்த பதிலும் கிடைக்கவில்லை. பொதுவாக ஒன்றை மட்டும் சொல்கிறார்கள். "நிச்சயமாக, மெதூசிலா பிரபஞ்சத் தோற்றத்தின் பின்னர் தோன்றிய நட்சத்திரம் தான்' என்கிறார்கள். ஆனால், அது எப்படி என்ற மர்மத்தை மட்டும் சொல்லவே யில்லை.

ஜூனியர் விகடன்

# மூன்று உயிர்களைக் காவுகொண்ட வவுனிக்குளம்

கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை விடிந்ததும் சனங்களுக்குள் ஏதோ ஒரு பதற்றம் இழையோடிப் போயிருந்தது. மாலை 4 மணிவரை அங்கு அழுகுரல்கள் எதுவும் கேட்கவில்லை. மாலை 4 மணியளவில் வானகம் சிறுகச் சிறுக கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது. அது யாருக்காக என்று யாரும் அறிந்திருக்கவில்லை.

செல்வபுரம் வடக்கு நெல்லிப்புலவு வவுனிக்குளக் கிராமம் 19.12.2020 அன்று மாலை கி. ரசீந்திரன், ர.சார்ஜனா, ர. சஞ்சீவன் ஆகிய அருமந்த மூன்று உயிர்களை அகாலமாக இழந்து ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியது. கிருஷ்ணப்பிள்ளை ரசீந்திரன் (37 வயது). ரசீந்திரன் சார்ஜனா (3 வயது). ரவீந்திரகுமார் சஞ்சீவன் (13 வயது).

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் குளக்கட்டில் பயணம் செய்து கொண்டிருந்த மகேந்திரா வாகனத்தின் சாரதிப் பக்கத்தின் முன் சில்லு திடீரென காற்றுப் போயுள்ளது. இதனால் குளத்தில் பாய்ந்து வாகனம் மூழ்கியது.

வாகனத்தில் பயணம் செய்த நால்வரில் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். ர.பிரவீன் (13 வயது) நீந்திக் கரையை வந்தடைந்து உயிர் தப்பினார். ரசீந்திரன், சார்ஜனா, நீந்திக் கரை சேர்ந்த பிரவீன் ஆகிய மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

அன்று மாலை 5 மணியளவில் சஞ்சீவனின் உடல் குளத்திலிருந்து மீட்கப்பட்டது. 11.45 மணியளவில் சார்ஜனாவின் உடலும் 12.15 மணியளவில் ரவீந்திரனின் உடலும் குளத்திலிருந்து மீட்கப்பட்டன. மீட்கும் பணியில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்களோடு கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸாரும் இணைந்து கொண்டனர்.

கணவனையும் மகளையும் இழந்து நிற்கும் ரவீந்திரன் சிரேகாவை யாரும் தேற்ற முடியவில்லை. "அப்ப தான் சாப்பிட்டு இருந்தவர். மகள் அப்பா வாங்க குளத்தின்ர கலிங்கம் பாத்திட்டு வருவம் என்று கேட்டாள். இவரும் மகள் கேட்டிட்டாள் என்று மகனையும் அழைத்துக் கொண்டு என்னையும் கேட்டார். நான் மாட்டன் என்று சொல்ல, மூவரும் சேர்ந்து எங்கள் வீட்டிலிருந்து கொஞ்சம் தொலைவிலுள்ள சஞ்சீவனையும் ஏற்றிக்கொண்டு போனார்கள். குளக்கட்டில் போய்க்கொண்டிருக்கும் போது சாரதி பக்க முன் சில்லு காற்றுப் போய் குளத்திற்குள் வாகனம் இழுத்துச் செல்லப்பட்டு விட்டது என்று எனக்கு மாலை 4.30 மணிக்கு தெரியவந்தது. நான் பதறியடித்துக்கொண்டு போய் மகன் பிரவீனிடம் எங்க அப்பா, தங்கச்சி என்று கேட்டன் அவன் குளத்தைச் சைகையால் காட்டினான். ஊரே திரண்டு வந்திட்டுது. ஐயாயிரத் திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மீட்புப் பணிக்காக குளத்துக்குள்ள இறங்கினார்கள். இவர்களோடு கடற்படை, இரா ணுவ வீரர், பொலிஸார் எனப் பலரும் ஈடுபட்டனர்.

5 மணியளவில் சஞ்சீவனின் உடலை எடுத்தனர். எனது பிள்ளையின்ர உடலையும் கணவரின்ர உடலையும்





காணவில்லை. தேடியவண்ணம் இருந்தார்கள். தொடர்போராட்டம் ஒரு மாதிரி 11.45 மணியளவில மகளின் உடலை எடுத்தார்கள். பின்னர் 12.15 மணியளவில கணவரின்ர உடலையும் எடுத்தார்கள்.

ஒரே நாளில இருவரையும் இழந்து அவர்களின் உடலை ஏழு மணித்தியாலம் வரை காணாது கதறிக் கதறித் துடிச்சேன். இவர் என்னையும் வரச்சொல் லிக் கேட்ட போது நானும் போயிருந்தால் என்னோட பத்துப் பதினைஞ்சு பெண்களும் சேர்ந்து வந்திருப்பினம். அவ்வளவு பேரும் நிச்சயம் இறந்திருப்பம். நல்ல வேளை என்ர குடும்பத்தோட என் இழப்பு போட்டுது. இல்லையென்றால் கிராமமே சுடுகாடாய்ப் போயிருக்கும்.

மூன்று வயது நிரம்பிய மகள் முன் பள்ளிக்குப் போறா. அண்டைக்கு இவரோடு தான் வாகனத்தில முன்னுக்கு இருந்து போனவள். மற்றைய இருவரும் பின்னுக்கு இருந்து போனார்கள். மூழ்கிய வாகனத்திலதான் மூவரும் இருக்கிறார்கள் என்று தான் முதலில வாகனத்தை மீட்கும் பணியில பொது மக்கள் இறங்கினார்கள்.

வாகனத்தை மீட்ட பின்னர் அதற்குள்ள மூவரும் இல்லையென்பது தெரியவர, குளத்தைச் சூழப் பரந்த மீட்புப் பணி தொடர்ந்தது. எல்லாம் எங்கள் தலைவிதி" என்று தலையில் அடித்துக் கதறினார் ரசீந்திரன் சிரேகா.

பாதுகாப்பற்ற இந்த அணைக்கட்டின் ஊடாகவே மக்களின் பயணம் தொடர்கிறது. வவுனிக்குளம் 26 அடி ஆழத்தையும் அணைக்கட்டு சுமார் 30 அடி உயரத்தையும் கொண்டுள்ளது. இந்த அணைக்கட்டின் ஊடாகப் பிரயாணம் செய்கின்றவர் இடறி விழும் பட்சத்தில் ஒன்றில் குளப்பக்கத்திலும் மறுபக்கம் கிடங்கிலும் வீழ்வர். இச்சமயத்தில் உயிரிழப்பு ஏற்பட மிகமிக வாய்ப்புண்டு.

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி பயிலும் 13வயது நிரம்பிய சிறுவன் நீந்திக் கரையை வந்தடைந்து உயிர் பிழைத்துக் கொண்டான். நீந்திக் கரைசேர்ந்த பிரவீனிடம் இச்சம்பவம் தொடர்பாக வினவியபோது, "நானும் அப்பாவும் தங்கச்சியும் வாகனத்தில போனம். தங்கச்சி அப்பாவோட முன்னுக்கு இருந்தவா. எனது வீட்டிலிருந்து 200 மீற்றர் தூரத்தில உள்ள எனது நண்பன் சஞ்சீவனும் எங்கட வாகனத்தில ஏறி வந்தான். நாங்கள் இருவரும் பின்னுக்கு இருந்தம்.

சாதுவாக மழை தூறிக்கொண்டிருந்தது. வழக்கமாக இப்படிப் போவது உண்டு. திடீரென்று குளப்பக்கம் வாகனம் இழுத்துக்கொண்டு போய்ச்சுது. நான் உடன குதித்து நீந்திக் கரையை வந்தடைந்தன். இதைக் கண்ட குளத்தில் நிண்ட அண்ணாமார் இரண்டு பேர் வந்து குளத்தில் குளித்துக் கொண்டிருந்த எல்லாரையும் கூட்டிவந்து மூழ்கியவர்களைத் தேடினார்கள். நான் நடந்ததைக் கூறினன். எனக்குள் பயந்து கொண்டன். மூழ்கிய சிறிது நேரத்திற்குள் வாகனத்தைத் தெரிய வில்லை. நேரடியாக இச்சம்பவத்தைப் பார்த்தபடியால மூழ்கிய உடல்களை எடுத்த பின்னர் என்னை வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தார்கள்" எனப் பதற்றத்துடன் பிரவீன் கூறினான்.

நீந்திக் கரையை அடைந்த பிரவீனின் கருத்துக்கள் மூலமே யாவரும் உண்மை நிலையை அறிந்தனர். என்ன நடந்தது? ஏன் நடந்தது? எப்போது நடந்தது? எத்தனை பேர் சென்றனர்? என்ற விடயங்கள் யாவும் பிரவீன் மூலமே அறிய முடிந்தது. இல்லையாயின் தேடுதல் பணிகள் இன்னும் நீடித்திருக்கும். உண்மைக்குப் புறம்பான ஊகிக்கப்பட்ட கருத்துக்களும் பரப்பப்பட்டிருக்கும்.

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவன் சஞ்சீவனை இழந்த தாயார் ர. நிரஜா, மகனின் நினைவுகளைச் சொல்லிச் சொல்லி அழுதார். "என்ர பிள்ளையை எல்லாரும் வாக்கான் என்று தான் கூப்பிடுவினம். கடைசியாக மகன்ர உயிர் போறதுக்கு இருபது நிமிடத்திற்கு முன்னர், சட்டி பானை கழுவிக் கொண்டிருந்த என்னிடம் வந்து அம்மா எனக்கு ஒரு ரெனிம்சேட்டு வாங்கித்தாங்கோ என்று சொன்னான். நானும் ஓம் தம்பி பிள்ளையை ரியூசனுக்கு விட்டிட்டு மல்லா விக்குப் போய் எடுத்துத்தாறன் என்றன். அம்மா நான் குட்டிமாமன்ர வாகன த்தில ஏறிப் போய் குளத்தடியில இறங்கிறன். நீங்கள் அதால தான வருவியள். வந்து என்னை ஏற்றிக் கொண்டு போங்கோ என்று சொன்னான்.

என்ர பிள்ளை விடியப்புறம் 4 மணிக்கு எழும்பி தேத்தண்ணிக்கு அடுப்பு மூட்டி தானும் போட்டுக் குடித்து எங்களுக்கும் தருவான். மாடுகளை அவிட்டுக் கட்டி வீட்டு வேலைகளை விரும்பிச் செய்வான். நான் சந்தையில மீன் வாங்கிறதே இல்லை. என்ர பிள்ளைதான் குளத்துக்குப் போய் மீன்பிடித்துக்கொண்டு வந்து தருவான். மாடுகளில சரியான இரக்கம். யாருடைய மாட்டையும் காணவில்லையென்றால் அதையும் தேடிப்பிடித்து மாட்டின உரிமையாளரிடம் கொண்டு போய்க் கொடுப்பான். யாராவது வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் போது தமது மாடுகளை பார்க்கும்படி என்ர பிள்ளையிட்டத் தான் சொல்லிட்டுப் போவினம். பிள்ளையும் அந்த மாடுகளை கவனமாகப் பார்த்து மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்து, நீர்நிலைகளுக்கும் கூட்டிச் சென்று மாலை பட்டியில் அடைத்து விடுவான்.

ஊரில நல்ல மரியாதை பிள்ளைக்கு. யாவரோடும் அன்பாகப் பழகுவான். அதனால வயது வித்தியாசமின்றி யாவரும் இவனுக்கு நண்பர்கள். மாட்டுக்கு நாணயம் கோர்க்கிறது, கயிறு மாட்டுறது, மாட்டுக் கயிறு எறியிறது எல்லாம் அவனுக்குத் தெரியும்.

மூத்த மகன் பண்ணையில வேலை செய்கிறான். தன்னையும் பண்ணையில சேர்த்துவிட்டால் அம்மான்ர கஷ்டத்தைப் போக்குவன் என்று அடிக்கடி ஆறுதல் சொல்லுவான்.

அன்றைக்கு என்ர மகனோடு சேர்ந்து பத்துப் பதினைஞ்சு சின்னப் பிள்ளைகளும் போயிருப்பினம். நவம் ரீச்சர் ரியூசன் வைச்சபடியால பிள்ளைகள் எல்லாம் ரியூசனுக்குப் போட்டினம். அவரோட புண்ணியத்தால கொஞ்ச உயிர்கள் பறிபோகல. வழமையாக இந்த வாகனத்தில பத்துப் பதினைஞ்சு பேர் தொற்றிக்கொண்டு போவாங்கள். இவ்வளவு காலத்தில இப்படியான ஒரு துயரம் நடக்கல. எங்களுக்கு இதுதான் விதி" என வெந்தார்.

பாதுகாப்பற்ற அணைக்கட்டு என்பதற்கான குறியீடுகளோ, பதாகைகளோ, அறிவித்தல்களோ அங்கு இருக்கவில்லை. துயரம் நடைபெற்ற மறுநாளன்றேதான் நுழைவாயிலில் இராணுவ வீரர்களும் ஆபத்தான வழியில் குற்றிகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த அணைக்கட்டினூடாகத் தான் சிறுவர்கள் உட்படப் பலரும் நித்தமும் பிரயாணம் செய்கிறார்கள். இழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளை இனங்கண்டு விழிப்பாகச் செயற்பட்டால் இழப்புக்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

வளர்ந்து வரவேண்டிய இரண்டு பிஞ்சுகளையும் ஒரு குடிமகளையும் இழந்து சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கின்ற உறவுகளின் இழப்பை ஈடுசெய்ய யாராலும் முடியாது. அநாவசியமான பயணங்களைத் தவிர்த்தல், பிள்ளைகள் மட்டில் பெற்றோர்களின் கண்காணிப்பு, பாதுகாப்பான சூழலின் நம்பகத்தன்மை மேலோங்கும் போதே குறித்த இழப்புக்களை ஓரளவேனும் குறைத்துக்கொள்ள முடியும்.

ஜெயம்ஜெகன்

அண்மைக்காலமாக ஆந்தாலஜி படங்கள் மீது, தமிழ் சினிமாவின் கவனம் திரும்பியுள்ளது. ஆம் சில்லு கருப்பட்டி மற்றும் புத்தம் புதுக்காலை உள்ளிட்ட படங்கள் ஆந்தாலஜி முறையில் வெளியாகியிருந்ததை நாம் பார்த்தோம்.



ஜாதிப் பெருமிதம், குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றும் முயற்சிகளும் ஊர் என்ன சொல்லுமோ என்ற கவலையும் பெற்றோரை எம்மாதிரி கொடூரமான எல்லைகளுக்கு இட்டுச் செல் கிறது என்பதுதான் இந்த Anthology திரைப்படத்தின் மையம்.

அந்த வகையில் தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர்கள் நால்வர் ஒன்றிணைந்து, நெட்



ப்ளிக்சில் தளத்திற்காக இயக்கியுள்ள பாவக்கதைகள், ரசிகர்களை திருப்திபடுத்தியதா? இல்லையா? என்று பார்ப்போம்.

### 1. தங்கம்

இயக்குநர் - சுதா கொங்கரா
நடிகர்கள் - சாந்தனு பாக்யராஜ், காளிதாஸ் ஜெயராம், பாவாணிஸ்ரீ

பெண்ணாக மாறி தன் நண்பன் சரவணனை (சாந்தனு பாக்யராஜ்) கல்யாணம் செய்துகொள்ள நினைக்கிறான் சத்தார் (காளிதாஸ் ஜெயராம்). ஆனால், சரவணன் தன் தங்கையைக் காதலிப்பதை அறிந்து, அவர்களுக்கு உதவுகிறான் சத்தார். அவர்களுக்காக தனது உயிரையும் விடுகிறான். அவமானம், அச்சம் போன்ற உணர்வுகளின் காரணமாக, பெற்ற பிள்ளையை சாகவிடுகிறார்கள் அவனது பெற்றோர். தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சில சம்ப வங்களை போல, பல சிக்கல்களை அரைமணி நேரத்திற்குள் அழகாக கூறுகிறது இந்த கதை. சாந்தனு மற்றும் காளிதாஸ் ஜெயராமின் நடிப்பு வியப்பில் ஆழ்த்துகிறது.

### 2. லவ் பண்ண உட்றனும்

இயக்குநர் - விக்னேஷ் சிவன்
நடிகர்கள் - அஞ்சலி, கல்கி கொச்சிலின்

ஊர்ப் பெரிய மனிதராக இருக்கும் வீரசிம்மன், தன் மகள் (அஞ்சலி) தன் சாரதியைக் காதலிப்பதை அறிந்து தன்னுடைய கையாள் நரிக்குட்டி உதவியுடன் இருவரையும் கொலை செய்கிறார். மற்றொரு புறம் மகள் (அஞ்சலி), தன்பால் ஈர்ப்புடையவள். அவளுக்கு என்ன நேர்கிறது என்பதுதான் மீதிப் படம்.

இந்த நான்கு படங்களில் சற்று நகைச்சுவை உணர்வுடன் எடுக்கப்பட்டிருக்கும் படம் இதுதான். அடுத்து என்ன நடக்குமோ என்ற உணர்வும் படம் முழுக்க நீடிக்கிறது. ஆனால், படத்தின் முடிவு ரொம்பவும் சிக்கலாக இருக்கிறது. முதல் மகளை ஆணவக் கொலை செய்தவர், இரண்டாவது மகளை அப்படிச் செய்யாமல் விடுவதால், அவள் உதவியுடன் பிரான்சிற்குப் போய் பிரெஞ்சு கற்றுக்கொள்கிறார். ஒரு ஆணவக் கொலை செய்த தந்தையை மகள் எப்படி சர்வ சாதாரணமாக ஏற்றுக்கொள்கிறார் என்றும் தெரிய வில்லை.

### 3. வான்மகள்

இயக்குநர் - கௌதம் வாசுதேவ் மேனன்
நடிகர்கள் - சிம்ரன், ஆதித்யா பாஸ்கர், கௌதம் வாசுதேவ் மேனன்

சத்யா (கௌதம்) - மதி (சிம்ரன்) தம்பதியின் 12 வயது மகள் பொன்னுத் தாயியை யாரோ சில மர்ம நபர்கள், கடத்திக்கொண்டு சென்று, பாலியல் வன்கொடுமை செய்து விட, அதனை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கும் பெற்றோர்கள்.

மகளை எப்படித் அந்த துயர சம்ப வத்தில் இருந்து மீண்டுவர செய்வது, பொலிஸாரிடம் சொன்னால் ஊரில் என்ன நினைப்பார்கள் என குழம்பித் தவிக்கும் பெற்றோர் கடைசியில் என்ன முடிவெடுக்கிறார்கள் என்பது மீதிப்படம்.

இந்தப் படத்திலும் பொலிஸாரை அணுகினால் குடும்ப மானம் என்ன ஆகும் என்ற குறித்த தயக் கத்துடனேயே, வேறு ஒரு புள்ளியில் முடிவுக்கு வருகிறது படம்.

### 4. ஓர் இரவு

இயக்குநர் - வெற்றிமாறன்.
நடிகர்கள் - பிரகாஷ் ராஜ், சாய் பல்லவி.

காதலித்து, வீட்டை விட்டு வெளியேறும் மகள் (சாய் பல்லவி). அவள் கர்ப்பமடைந்த செய்தி கேட்டு மகள் வீட்டிற்கு வரும் தந்தை (பிரகாஷ் ராஜ்). சொந்த ஊரில் வளைகாப்பு நடத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறார். நம்பி சொந்த ஊருக்குச் செல்லும் மகளுக்கு என்ன நடக்கிறது என்பது தான் மீதிக் கதை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, ஜாதிப் பெருமை, குடும்ப கௌரவம் குறித்து கேள்வி யெழுப்பக்கூடிய, விமர்சிக்கக்கூடிய படங்களாகவே இப்படங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், பெருமையையும் கௌரவத்தையும் காப்பாற்றும் அமைப்பாக குடும்பம் இருக்கிறது என்பது போல முடிகின்றன. இத்தகைய அழுத்தத்தை குடும்பத்தின் மீது சுமத்தும் சமூகத்தின் மீதும், நம க்கு பெரிதாக கேள்விகளை எழுப்பவில்லை என்பதுதான் இப்படத்தின் பலவீனம்.

மொத்தத்தில் நான்கு படங்களிலும் ஜாதியின் வீச்சை பளீச் சென்று முகத்தில் அறையும்படி சொல்லும் **"பாவக்கதைகள்"** இந்த ஆண்டியில் வெளியான திரைப் படங்கள், தமிழ் சினிமாவிற்கு ஓர் முக்கிய அங்கம்.




# வஞ்சிக்கப்பட்டாரா முகமட் அமீர்

# ஸ்விங் மன்னனின் எழுச்சியும் வீழ்ச்சியும்

"பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகத்தாலும் சக வீரர்களாலும் ஏற்பட்ட மன உளைச்சலால் வெளியேறுகிறேன்" என மனம் திறந்திருக்கும் அமீருக்கு உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களிடம் இருந்து ஆதரவு குவிந்துவருகிறது. அமீரின் ஓய்வு அறிவிப்பு முன்னாள் மற்றும் இந்நாள் பாகிஸ்தான் வீரர்களுக்கு இடையேயான கருத்து மோதலாகவும் மாறியிருக்கிறது.

முகமது அமீருக்கு இப்போது வெறும் 28 வயதுதான் என்பதோடு 18 வயதில் ஸ்பாட் பிக்ஸிங்கில் சிக்கி 5 வருட தடை பெற்றவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இதுவரை 259 விக்கெட்டுகளை பாகிஸ்தானுக்காக அனைத்து போர்மட்டிலும் எடுத்திருக்கும் அமீரின் பயணம் பல சர்ச்சைகளுடன் முடிந்திருக்கிறது. ஆனால், அமீரின் மனைவி இங்கிலாந்தைச் சேர்ந்தவராக இருப்பதால், தொடர்ந்து கவுன்ட்டி போட்டிகளில் விளையாடுவேன் எனச் சொல்லியிருக்கிறார் அமீர்.**



தனது அபாரமான ஸ்விங் திறமையினாலும் யார்க்கர்களினாலும் குறுகிய காலத்தில் பெரும் புகழ் அடைந்த அமீரின் எழுச்சி எழுந்து வேகத்திலேயே வீழ்ந்துவிட்டதுதான் சோகம். 2009 ஆம் ஆண்டு தன்னுடைய 17 ஆவது வயதில் பாகிஸ்தானுக்காக விளையாடத் தொடங்கிய அமீர், அறிமுக ஆண்டிலேயே 55 விக்கெட்டுகளை வீழ்த்தி, எல்லோரின் கவனத்தையும் தன்பக்கம் திருப்பினார்.

2009 ஆம் ஆண்டு பாகிஸ்தான் இருபது-20 உலகக் கோப்பையை வென்றதில் இவரது பங்கு முக்கியமானது. குறிப்பாக இறுதிப் போட்டியில், தனது முதல் ஓவரிலேயே, அந்தத் தொடரின் நாயகன் திலகரட்ண டில்ஸானின் விக்கெட்டை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தார் அமீர்.

இதன்மூலம் பாகிஸ்தானுக்கு வெற்றி சுலபமானது. அதைத் தொடர்ந்து அந்த ஆண்டு நடைபெற்ற பாக்ஸிங் டே டெஸ்ட்டிலும் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதுமட்டுமல்லாமல் 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லீட்ஸில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தி, பாகிஸ்தானை வெற்றிபெறவைத்தார் அமீர். 15 ஆண்டுகளுக்குப்பிறகு அவுஸ்திரேலியாவை, பாகிஸ்தான் வீழ்த்திய டெஸ்ட் போட்டி இது.

சென்ற இடத்தில் எல்லாம் விக்கெட் வேட்டை நடத்தி, அற்புதமாக ஜொலித்து, பாகிஸ்தானின் வெற்றிப் பக்கங்களில் தன் பெயரை எழுதிக் கொண்டிருந்த அமீருக்கு, கெட்ட நேரம் ஸ்பாட் ஃபிக்சிங் வடிவத்தில் வந்தது. இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அவர் ஸ்பாட் ஃபிக்சிங்கில் ஈடுபட்டார் என குற்றம்சாட்டப்பட்டு, பின்னர் இது நிரூபிக்கப்பட, ஐந்து ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட தடைவிதித்தது பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம். அப்போது அமீருக்கு வயது 18. இதுமட்டுமல்லாமல் மூன்று மாதங்கள் சிறை தண்டனையும் அமீருக்கு வழங்கப்பட்டது.

பல அவமானங்களைச் சந்தித்த அவருக்கு தடைக்காலம் முடிய சில மாதங்கள் இருந்த போது, பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் அவரை மீண்டும் அணியில் சேர்த்துக்கொண்டது. 2015 இல் கம்பேக் கொடுத்தார் அமீர்.

2017 சம்பியன்ஸ் டிராபியில் இந்தியாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில், ரோஹித் ஷர்மா, தவான், கோலி ஆகிய மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி பாகிஸ்தானை சம்பியனாக்கினார் அமீர். பாகிஸ்தான் அரை இறுதிக்கு முன்னேறத் தவறிய 2019 உலகக் கோப்பையிலும் பாகிஸ்தானின் லீடிங் விக்கெட் டேக்கர் அமீர்தான்.

இப்படி தொடர்ந்து மட்ச் வின்னராக மகுடம் சூடிக் கொண்டிருந்த அமீர் கடந்தாண்டு ஜுலையில், வைட்பால் கிரிக்கெட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்பதால், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். அதன் பிறகு சமீபத்தில் நடந்து முடிந்த லங்கா கிரிக்கெட் லீக் வரை பல்வேறு தொடர்களிலும் விளையாடிக் கொண்டிருந்த அவர், நேற்று யாருமே எதிர்பார்க்காத வகையில், அனைத்து போர்மேட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்திருக்கிறார்.

அமீரின் ஓய்வறிவிப்பில் அவர் கூறியிருக்கும் காரணங்கள் கிரிக்கெட் உலகில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. அமீர், தான் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டால் உதாசீனப்படுத்தப்பட்டதாகவும், பௌலிங் பயிற்சியாளர் வக்கார் யூனுஸ், பயிற்சியாளர் மிஸ்பா உல் ஹக் மற்றும் சக வீரர்கள் என எல்லாத் தரப்பாலும் தான் அவமானப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். அவர்கள் ஏற்படுத்திய மன உளைச்சல்தான், ஓய்வு அறிவிப்புக்குக் காரணம் எனச் சொல்லியிருக்கிறார். ஷாகித் அஃப்ரிடி மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டின் முன்னாள் தலைவர் நாஜம் சேதி மட்டும்தான் தனக்கு ஆதரவாக இருந்ததாகவும் சொல்லியிருக்கிறார்.


ஷோயப் அக்தர், ரமீஸ் ராஜா, இன்சமாம், அஃப்ரிடி உள்ளிட்ட பல வீரர்கள் அவருக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். அமீர் இந்த முடிவை திரும்ப பெற வேண்டும், அவருக்குச் சரியான ஆலோசனைகளை வழங்கி பாகிஸ்தான் அணிக்குத் திரும்ப ஆட வைக்க வேண்டும், இளம் வயதில் ஒரு வீரரை ஓய்வு பெற வைப்பது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு நல்லதில்லை எனப் பல்வேறு தரப்பினரும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

# ஸோயுஸ் சிலை (கிரீஸ்) கி.மு.455

(சென்றவார தொடர்ச்சி)

கி.பி.392 ஆம் ஆண்டு வரை சிலை பல்வேறு இயற்கைச் சீற்றங்களையும் கடந்து கிரேக்க மக்களின் வழிபடுதலோடு சிறப்பாக விளங்கி வந்தது. ரோமப்பேரரசின் மன்னன் முதலாம் தியோடோசியஸ் ஏதென்ஸ் நகருக்கும் ஸோயுஸ் சிலைக்கும் கிடைக்கும் அபரிமிதமான புகழைக் கண்டு பொறாமை கொண்டு ஒலிம்பிக் போட்டிகளை தடை செய்ததோடு ஸோயுஸ் ஆலயத்தையும் மூடச்செய்தான்.

அவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த அவனது மகன் இரண்டாம் தியோடோசியஸ் கி.பி.426 ஆம் ஆண்டு ஸோயுஸ் ஆலயத்தை அழிக்கும்படி உத்தரவிட்டான். அந்த அழிவு வேலையின்போது ஆலயம் முழுமையாக இடிக்கப்படாவிட்டாலும் பெருமளவு சேதமடைந்துவிட்டது. ஆனால் அங்கிருந்து ஸோயுஸ் சிலையை லாஸரஸ் என்னும் இளைஞன் மிக சாமர்த்தியமாக கான்ஸ்டாண்டிநோபுள் நகருக்கு (இன்றைய துருக்கியின் இஸ்தான்புல் நகர்) எடுத்துச் சென்றுவிட்டான். ஆனால் கி.பி.462 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தீ விபத்தில் அந்த சிலை முற்றிலுமாக அழிந்துவிட்டன.



ஸோயுஸ் ஆலயத் கி.பி.551 ஆம் ஆண்டுவாக்கில் ஏற்பட்ட பூகம்பத்தின்போது மண்ணுக்குள் புதைந்துபோனது. அதற்குப்பிறகு நிகழ்ந்த வெள்ளப்பெருக்கின் காரணமாக ஏற்பட்ட மண் அரிப்பினால் புதைந்து போன ஆலயத்தின் சில பகுதிகள் வெளியே தெரிய ஆரம்பித்தன. அப்பொழுதும் கூட தொல்லியல் ஆய்வாளர்கள் அதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

1829 ஆம் ஆண்டு பிரான்சை சேர்ந்த ஆய்வுக்குழு ஒன்று அங்கு தங்கி பல ஆராய்ச்சிகளை செய்தது. ஆனால் அது முழுமையான ஆய்வு என்று சொல்ல முடியாது.

மீண்டும் 1875 இல் ஜேர்மன் தொல்லியல் குழு ஒன்று விரிவான ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டு பல்வேறு ஆதாரங்களை திரட்டியது. அந்த ஆய்வின்போதுதான் இடிபாடுகளுக்கு இடையே சிதைந்த நிலையில் ஆலயத்தின் சில பகுதிகளும் ஃபிதியாஸின் சிற்பக்கூடமும் அவர் பயன்படுத்திய சில கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக அங்கு கிடைத்த ஒரு குவளையில் இது "ஃபிதியாஸ் சிற்பக்கூடத்தை சார்ந்தது" என்று பொறிக்கப்பட்டிருந்தது.

ஸோயுஸ் சிலை உலக அதிசயப் பட்டியலில் இடம்பெற்றதன் மூலம்தான் கிரேக்கக் கட்டடக் கலைத்திறனும் சிற்பத்திறனும் உலகம் முழுக்க பரவலாக அறியத் தொடங்கியது.

ஸோயுஸ் சிலை என்பது வெறும் மத அடையாளமாகக் கருதிவிட முடியாது. அது மனிதர்களின் படைப்புத்திறனின் அற்புதம் உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்கப் புள்ளி. இன்று அதன் புறச்சுவடுகள் இல்லாமல் போனாலும் கலைத்தாகம் கொண்டவர்களின் உள்ளத்தில் அழிக்க முடியாத இடத்தைப் பிடித்துவிட்டது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2191

**ரமேஷ்**

வெறுத்து போய் "சாகப்போறேன்"னு ஸ்டேட்டஸ் போட்டா...



ஒரு பக்கி, "ஹேப்பி ஜர்னி"னு கமெண்ட் பண்ணியிருக்குது...

**சுந்தரி**

பொலிஸ்,சி.பி.ஐ.இதற்கு இணையா ஒரு துப்பறியும் பிரிவு இருக்குன்னா அது...



மனைவிகள் பிரிவு தான்ப்பா இருக்கும்... கணவனை என்னமா துப்பறியுறாங்க...

**ஞானம்**

நான் சிரிக்கும் போது என் கன்னத்துல குழியப் பார்த்தா உங்களுக்கு என்ன தோணுது?



அவசரப்பட்டு படுகுழியில் விழுந்துட்டோமோன்னு தோணுது...

**கலைவிழி**

சம்பாதித்து செலவு செஞ்ச காலம் போயி...



இப்போ முதல்லயே செலவு செஞ்சிட்டு அதை அடைக்க சம்பாதிச்சுட்டு இருக்கோம்...

**தர்மினி**


சம்பள கவர தொறக்கவே மாட்டேனே. அத முழுசா தரவேனே.




அந்த நாய் வீட்டுக்கு வரட்டும். கொய்யால...

**விகடன்**

யாராவது டி.வியை அணையுங்களேன்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 235

## கொரோனா வைரஸ் தொற்றும், தொடரும் கேள்விகளும்

**இந்த வைரஸ் எப்படிப் பரவுகிறது?**

1. நோயுள்ள ஒருவர் தும்மும் போதோ, இருமும் போதோ அல்லது பேசும் போதோ சிதறும் சளி அல்லது உமிழ்நீர்ச் சிறுதுளிகள் மற்றவரின் சுவாச மென்சவ்வுகளைச் சென்றடையும்போது.

2. கிருமிகளைக் கொண்ட சளி அல்லது உமிழ்நீர்ச் சிறுதுளிகள் படிந்துள்ள மேற்பரப்புகளைத் தொட்ட பின் கண், மூக்கு அல்லது வாயைத் தொடும் போது.

இந்த சுவாசச் சுரப்புச் சிறுதுளிகள் 6 அடிகளுக்கு மேல் பரவுவதில்லை என்பது இப்போதைய முடிவு.

**நோயரும்பு காலம் (Incubation period) என்றால் என்ன?**

கிருமித் தொற்று ஏற்பட்ட நாளிலிருந்து நோய்க்கான குணங்குறிகள் தோன்ற எடுக்கும் காலம்.

**கொவிட் - 19 க்கான நோயரும்பு காலம் எவ்வளவு?**

14 நாட்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் தொற்று ஏற்பட்ட 4ஆம் அல்லது 5ஆம் நாளில் நோய்க்கான குணங்குறிகளைக் காட்டுகிறார்கள்.

**கொவிட் - 19 இன் அறிகுறிகள் என்ன?**

நோயின் தாக்கம், அறிகுறிகளற்ற நிலையிலிருந்து மரணத்தைத் தோற்றுவிக்கும் நிலை வரை வேறுபடலாம்.

80 வீதமானவர்கள் சாதாரண அறிகுறிகளையே வெளிப்படுத்துவர். அவையாவன, காய்ச்சல், வறட்டு இருமல், உடற் சோர்வு, உடல் உளைவு, சுவையிழப்பு மணநுகர்ச்சியிழப்பு, சமிபாட்டுத் தொகுதிக்குரிய வயிற்றுப் பிரட்டல், வாந்தி, வயிற்றுளைவு என்பன காணப்படலாம்.

தலையிடி, தொண்டையரிப்பு, மூக்கால் நீர் சிந்துதல் என்பன அரிதாகக் காணப்படலாம்.

மூச்சுவிடுதலில் இடர்பாடு 20 தொடக்கம் 30 வீதமானவர்களில் ஏற்படுகிறது. இது தொற்றிய நாளிலிருந்து 8ஆம் நாளில் இது ஏற்படுகிறது.

சுவாச இடர்பாடு ஏற்பட்டவர்கள் சடுதியாக பாரிய நோய்த்தாக்கத்திற்குட்படுகிறார்கள். எனவே இந்த நிலையில் வைத்திய உதவியை நாடவேண்டும்.

**பாரிய நோய்த் தாக்கத்திற்குள்ளாகக் கூடியவர்கள் யார்?**

பாரிய நோய்த்தாக்கம் எவருக்கும் ஏற்படலாம். ஆயினும் பின்வரும் காரணிகள் அதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்றன.

மூத்த வயது
இருதய நோய்கள்
நீரிழிவு
உயர்குருதி அழுக்கம்
நாட்பட்ட சுவாச நோய்கள்
புற்றுநோய்
சிறுநீரக செயலிழப்பு
அதி கொழுப்பு உடல் நிலை
புகைப்பிடித்தல்




**கொவிட் - 19 ஐ சாதாரண தடுமலிலிருந்து எவ்வாறு வேறுபடுத்தி அறிவது?**

குணங்குறிகளை மட்டும் கொண்டு கொவிட் - 19 ஐ சாதாரண தடுமலிலிருந்து வேறுபடுத்த முடியாது.

ஆய்வு கூடப் பரிசோதனைகளே இதற்குத் தேவையாகும்.

**எவ்வகையான பரிசோதனைகள் கொவிட் -19 தொற்றைக் கண்டறியப் பயன்படுத்தப்படுகின்றன?**

மூன்று வகையான பரிசோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. வைரஸ் துணிக்கைகளை கண்டறிதல் - **Antigen test**. இது விரைவாக நோயைக் கண்டறிய உதவும். ஆனால் இதன்மூலம் நோய் இல்லை என்பதை உறுதி செய்ய முடியாது.

2. வைரஸின் மரபணுவைக் கண்டறிதல் - **PCR test.**

மேற்கூறிய இரு பரிசோதனைகளும் மூக்கினூடாக மேல் நாசியிலிருந்து பெறப்படும் மாதிரிகளில் செய்யப்படும்.

3. வைரஸிற்கான பிறபொருளெதிரியை குருதியிற் கண்டறிதல் - Antibody test. முன்பு தொற்று ஏற்பட்டவர்களைக் கண்டறிய உதவும். இப் பரிசோதனை வேறு வகையான கொரோனா வைரஸ் தொற்றியவர்களை கொவிட் - 19 தொற்றிலிருந்து வேறுபடுத்திக்காட்டாது.

**கொவிட் - 19 இன் குணங்குறிகள் அற்ற ஒருவர் எப்போது பரிசோதிக்கப் படவேண்டும்?**

1 கொவிட் - 19 தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிப் பழகியவர்.

2. கூட்டாக வாழுமிடங்களில் தொற்றைக் கண்டறிய, உதாரணமாக முதியோர் காப்பகம், சிறைச்சாலை.

3. தொற்று அதிகமாக உள்ள இடங்களில் வைத்தியசாலைக்கு அனுமதிக்க முன்

4. திட்டமிட்ட சத்திரசிகிச்சை அல்லது சில மருத்துவ செயன்முறைகளுக்கு முன்

5. நோயெதிர்ப்பைக் குறைக்கும் மருத்துவ சிகிச்சைக்கு முன்

**கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனச் சந்தேகித்தால் எப்போது ஆய்வு கூடப்பரிசோதனை செய்ய வேண்டும்?**

தொற்று ஏற்பட்டது எனச் சந்தேகிக்கும் தினத்திலிருந்து 5 தொடக்கம் 7 நாட்களில்.

**கொவிட் - 19 நோயாளி எவ்வளவு நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும்?**

நோய் தொடங்கிய நாளிலிருந்து 10 நாட்கள் தாண்டிய பின்னர் .இறுதி 24 மணி நேரங்களுக்கு மருந்துகள் இன்றி, காய்ச்சல் இல்லாமல் இருத்தல்.

பாரிய நோய்த்தாக்கம் உள்ளவர்களும் உடலின் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களும் கூடிய நாட்கள் தனிமைப்படுத்தப்படலாம்.

நோய்க் குணங்குறிகள் இன்றி ஆய்வு கூடப் பரிசோதனையில் அடையாளம் காணப்பட்டவரும், பரிசோதனை செய்த நாளிலிருந்து 10 நாட்கள் தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மீள் தொற்று சாத்தியமா?**

மீள் தொற்றல்கள் அரிதாக நடந்துள்ளது

Dr. சிவாணி பத்மராஜா, USA

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்